என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே.

# திருவுந்தியார்

## சிவப்பிரகாசர் உரை விளக்கம்

யாழ்ப்பாணம்
கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்

யா. கூ. த. நூ. ப. வி. க. வெளியீடு -9

உ
சிவமயம்

திருவியலூர்
உய்யவந்த தேவநாயனுர்
இயற்றிய

# திருவுந்தியார்

## சிவப்பிரகாசர் உரை விளக்கம்

உரைவிளக்கம், பொழிப்பு
எழுதியுதவியவர்
வித்துவான் பொன். அ. கனகசபை.

வெளியீடு :
யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்
411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு: 1970
படிகள்: 1000

பதிப்புரிமை
விலை ரூபா 1-50

---

J. C. T. B. P. S. S. PUBLICATION No-9

UYYAVANTHA-THEVA-NAYANAR'S

# THIRU-VUNTHIYAR

with commentary by

**SIVAPRAGASAR**

and Explanatory Notes Etc. by

Vidwan Pon. A. KANAGASABAI

*Published by:*

THE JAFFNA CO-OPERATIVE TAMIL BOOKS PUBLICATION AND SALES SOCIETY LTD.

*(Regd. No. J-1538 of 10-11-57)*

411/1, K. K. S. ROAD, — JAFFNA.

---

அச்சுப்பதிவு: கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம்.

# சமர்ப்பணம்

—

இந்தச் சிவத்தொண்டைச் செய்யத்

திருவருள் பாலித்த

**சிவயோகசுவாமிகள்**

திருவடித்தாமரைக்கு

இதனைச் சமர்ப்பணஞ் செய்கின்றோம்.

*30-8-70.*

உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

---

திருவுந்தியார் என்னும் இந்நூல் சைவ சித்தாந்த சாத்திரங்களுள் காலத்தால் முந்தியது. கி. பி. 1148 – இல் இயற்றப்பட்டதென்பர்.

இந்நூலை இயற்றிய உய்யவந்த தேவநாயனூர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் திருவியலூரில் வாழ்ந்தவர்.

---

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழக முன்னுட் பௌதிகப் பேராசிரியர், விஞ்ஞானக் கலாநிதி ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் இந்நூல் வெளியீட்டுக்கும் ரூபா 50/– நன்கொடை வழங்கினுர்கள். அவர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றியும் வணக்கமும் என்றும் உரியனவாகுக.

—கழகம்

---

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவுந்தியார்

## சிவப்பிரகாசர் உரை விளக்கம்.

கடவுளாகிய பரமாசாரியர்.

இதில் முற்பட்ட கடவுளாகிய பரமாசாரியரை அருளிச் செய்கின்றார்.

அகளமா யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற.

இதன் பொருள்: அகளமாய்—அநாதியே நிர்மலமாய்; ஆரும் அறிவு அரிது—தன்னைக் கூடினவர்களாலும் கூடாதவர்களாலும் அறிதற்கு அரிய; அப்பொருள்—(பரிபூரணமான) அந்தப் பெரும் பொருள்; சகளமாய் வந்தது என்று உந்தீபற—(நம்பொருட்டால்) ஒரு திருமேனி கொண்டு எழுந்தருளி வந்தது; தான் ஆகத்தந்தது என்று உந்தீபற — (இப்படி எழுந்தருளி வந்த அந்தப் பொருள் (1) தீட்சையினாலே சஞ்சிதத்தையும் ஒழித்து (2) பிராரத்தம் புசிக்கச் செய்து அதில் அழுந்தாதபடியுங் காட்டி (3) ஆகாமியம் ஏருதபடி நிலையிலே நிறுத்தி (4) மாயாபடலத்தையும் உரித்து (5) மூலமலம் ஆகிய நிகளத்தையும் விடுவித்து (6) அருளாகிய அமிர்தத்தைப் புசிப்பித்துத் (7) தன்னுடைய திருவடியிலே கூட்டி) வேறற நிற்கத் தந்தது என்க.

உந்தியென்றது குழாங் கூடிய மகளிரது விளையாட்டு. பற—ஒருமைப் பன்மை மயக்கம். பறக்க என்னும் வியங்கோளைப் பறவென விகாரமாக்கி உம் தீ பற எனப்பிரிந்து உமது அநாதி குற்றத்தை விளக்கும் மும்மலங்களையும்

கருவி கரணாதிகளையும் தேகாதிப்பிரபஞ்சங்களையும் விட்டுப் போகும்படி இந்த ஞானசாத்திரத்தின் கருத்தே கருத்தாக நிற்பாய் எனக்கொள்க. பறக்க வென்னும் எச்சத்தைப் பறவென விகாரமாக்கி உம்முடைய தீமைகள் எல்லாம் பறந்து போகும்படிக்கருதி நிற்பீர் எனினும் அமையும்.

**விளக்கம்:** *1.* அப்பொருள் அகளமாய் யாரும் அறிவரிது. (தானாகச்) சகளமாய் வந்தது. தானாகத் தந்தது உந்தீபற உந்தீபற எனக்கூட்டுக.

2. அகளமாய் யாரும் ......வந்தது:— அகளம்—உருவம் இல்லது. இது கடவுளின் ஆநந்தத் தன்மையைக் குறித்தது. சகளம்—உருவுடையது. பொருள்—மெய்; ஈண்டு மெய்ப்பொருளாகிய கடவுளின் சத்துத் தன்மையைக் குறித்தது. சிறப்பும் அருமையும் நிறைவும் நோக்கி அப்பொருள் எனச் சுட்டினார். கடவுளின் இருவகை இயல்புகளுள்ளேசிறப்புஇயல்பாகியசொரூபநிலை அகளம் எனவும் பொது இயல்பாகிய தடத்தநிலை சகளம் எனவுங் கூறப்பட்டன. தடத்த வடிவம் அருவம், அருவுருவம், உருவம் என மூவகைப்படும். யாரும் அறிவரிது—பாசஞானம் பசுஞானங்களால் அறிய அரியது. பதிஞானத்தால் அநுபவித்தற்குரியது. இது கடவுளின் சித்துத் தன்மையைக் குறித்தது. சத்து சித்து ஆநந்தம் ஆகிய மூன்று இலக்கணங்களையுங் கொண்டதே பரிபூரணப் பொருள். நிகளம்—விலங்கு. "ஆசா நிகளந் துகளாகியபின்"—கந்தரநுபூதி.

3. அப்பொருள் சகளமாய் வந்தது—சகல வர்க்க ஆன்மாக்களாகிய நமக்கு ஞானத்தை அருளும் பொருட்டு மானிடத்திருமேனி தாங்கிவந்தது. தீட்சித்து அநுக்கிரகிக்கும் இவரே ஞானகுரு.

4. தான் ஆகத்தந்தது:— தான்—சிவம்; தானாக—ஆன்மா சிவமாந்தன்மையை எய்த; தந்தது—உயிர்களுக்

குத் தன்னைக் காட்டித் தந்தது. தானாகவே அகளமாயுள்ளது சகளமாய் வந்து தன்னைக் காட்டித் தந்தது என்பதும் புலப்படுதலாலே தானாக என்பது சிங்கநோக்கு. இருவினை ஒப்பு மலபரிபாகம் எய்திய பக்குவம் நோக்கிக் குருவடிவோடு வந்து, ஞான தீட்சைகளைப் புரிந்து மும்மலங்களை நீக்கி, ஆன்மாவின் உண்மைத் தன்மையை உணர்த்தி, சுதந்திரக் குறைவை அறிவித்துப், பதிஞானம் ஊட்டிப் பிரபஞ்சத்தை மறப்பித்துச் சிவசொரூபமாக்கும்.

5. உந்திபற என்பது மகளிர் விளையாட்டு. காற் பெருவிரலை நிலத்தில் ஊன்றிக் கைநீட்டி முன்உந்தி ஆடுவது. உந்து+ஈ+பற எனப் பிரித்து ஈபோல் உந்திப்பற எனவும், ஈயே உந்து பற எனவும் பொருள் கொள்ளுவர். செய்யுள்தோறும் உந்தீபற என வருதலால், திரு என்னும் அடைமொழியை முன்னும், ஆர் என்னுஞ் சிறப்புப் பொருள்தரும் விகுதியை இறுதியிலுங் கூட்டித் திருவுந்தியார் என இந்நூல் அழைக்கப்படுகின்றது.

**பொழிப்பு:** தனக்கு ஓர் உருவம் இன்றி யார்க்கும் அறிதற்கு அரிய பரம்பொருள் நம்பொருட்டு ஆசாரியனாய் உருவுகொண்டு எழுந்தருளி வந்தது. வந்து அடியேன் தான் ஆகும்படி தன்னைக்காட்டி அருள் ஒளியைத் தந்தது. இதன் கருத்தமைந்த திருக்களிற்றுப்படியாரின் செய்யுள்கள்:- 4. அகளமயமாய். 5. ஆகமங்கள்.

## 2. வாதனைப்பாடு.

இனி அநாதியே கூடிப்போந்த பிரபஞ்சவாதனையைக் கூடாதபடி இந்தப் பொருளிலே அநவரதமும் வாதனைப் படும் முறைமையை அருளிச் செய்கின்றார்.

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
யுழப்புவ தென்பெணே யுந்தீபற
ஒருபொரு ளாலேயென் றுந்தீபற.

இ—ள்: பழக்கம்—(உபாயகுருவாலே இரட்சிக்கப்பட்டவர்களுக்குப் பிராரத்த காரணமாய தேகம் நிற்கையால் அநாதி காலந்தொடங்கி இந்திரியாதிகளுடன் கூடிவருகின்ற) **வாதனையை**; தவிர—விடுதற்கு (அரிதாயிருக்கும். அதென்போலவெனின்:—பிறவிக்குருடனுய்த் திரிந்தவனுக்குக் கடாட்சத்தாலே கண் விழித்தாலும், அநேகங் காலம் **அந்தகாராதி** வாதனைபண்ணிப் போந்ததால் மருட்சியாய் வழியைக் குழியென்று சந்தேகித்தும் முன்வந்தாரை யாவரெனக்கேட்டும் நிற்பன். அதுபோலப் பிராரத்தத்தாலே இந்திரியாதி விடயங்கள் வந்தடுத்த காலத்தில் இவற்றின் ஐக்கியத்தாலே **சனனங்** கூடாநிற்கும். இது கூடாதபடி; பிராரத்தமான கன்மம் அநுபவிக்கும் போதே அவற்றின் ஒத்துண்ணுமற் கூடுகிற உபாயத்தைத் திருவருள் கண்ணுகக் கண்டு, இப்படிக் காட்டுகிற கண்ணுன திருவருளிலே)பழகுவதன்றி—வாதனை பண்ணுவது ஒழிந்து; **உழப்புவது** என்பெணே உந்தீபற—(பேய்த்தேர் போல் நிலையில்லாத பிரபஞ்சத்தை) மெய்யெனக் கருதிப் பெறும் பேறு என் நெஞ்சமே; ஒருபொருளாலே என்று உந்தீபற—ஒப்பில்லாத பேரருள் கண்ணுக அந்தப் பொருளுடனே வாதனை பண்ணி நில் என்க.

இதில் நெஞ்சத்தைப் பெண்ணென்றது ஏதெனில், தன்னிடத்தில் நாயகரான தம்பிரானுர் அநாதியாயிருக்க அவருடைய திருவடியைப் பேணுமல், ஐம்புலவேடர் வசத்திலொழுகி நாயகரால் முனியப்படும் மிக்க துயரமாகிய நரக சுவர்க்கங்களிலே உழன்று, அழிவில்லாத சுகத்தை அநுபவிக்கப்பெருது போக்குவாருடனே திரிகையால், தன்னுடைய நெஞ்சத்தைப் பார்த்து என்பெண்ணே தகாதவற்றிற்கு உட்படுகின்ருய் என, பேதைமையதனுல் நெஞ்சத்தைப் பெண்ணெனக் கூறியது.

**விளக்கம்:** 1. பழக்கம் தவிரப் பழகுவது:— பழக்கம் - ஐம்பொறி வாயிலாக ஐம்புலன்களைப் பற்றும் உலகப் பழக்கம். தவிர—இவ்வாறு ஐம்புலவேடரில் வளர்ந்து

அசத்தாய் நிற்றலை விடுவதற்கு. பழகுவது—திருவருளை நாடுவது. அதாவது சத்தாய் நிற்றலை நாடுவது. பழக்கந்தவிரப் பழகுவதை ''ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்'' என்று வள்ளுவர் விளக்குகின்றார். சிவஞானபோதம் 12ஆம் சூத்திரமும் இதையே கூறுகின்றது. வாதனை—பழக்கம். அந்தகர்—குருடர். சனனம்—பிறப்பு. ஒத்துண்ணாது—அழுந்தாது.

2. உழப்புவது என்பெணே: உழப்புவது—முயன்று வருந்துவது; ஈண்டு அவற்றாலாம்பயனைக் குறித்தது. என் என்பது, நடுநிலை விளக்காய் நின்று உழப்புவது என் என முன்னும், என்பெணே எனப் பின்னும் சென்று இயையும். ஆசான் அருளுரை கொண்டு மெய்யை உணராமல் மேலும் முயன்று வருந்தித் தாங்கற்றதனாலாய பயனென்ன? ''கற்பனவும் இனியமையும்'' என்ற வாசகமுங் காண்க. பெண்ணே: ஐம்புலவேடர் வசப்பட்டுத் தலைவனை அறியாமலும் அறியமுயலாமலு மிருக்கும் பேதைமையால் நெஞ்சத்தைப் பெண்ணே என்றார். ''பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே'' என்பது பழமொழி. பேய்த்தேர்—கானல்நீர். பிரபஞ்சம்—உலகம்.

3. ஒரு பொருளாலே என்று உந்தீபற: சிவன் நம் மேற் கொண்ட அருளால் எல்லாஞ் செய்கின்றான் என்னும் உறுதிக்கண் கொண்டு எல்லாஞ் சிவன் செயலாகக் கண்டு அச்சிவத்துடன் பழகுதல். அவனருளே கண்ணாகக் காணுதல் என்பர் பெரியோர். இறைபணிநிற்றல் என்பது இதுவேயாகும். பொருளால்—பொருளுடன்; ஆல் உருபு ஒடு உருபின் பொருட்டு.

பொழிப்பு: என்நெஞ்சமே, ஞானங் கிடைத்த பின்னும் ஐம்புல விடயங்களுடன் கூடிவரும் பழக்கந் தவிரும் உபாயத்தைத் திருவருள் கண்ணாகக் கண்டு, அவ்வாறு தவிரும்படி காட்டும் திருவருளிலே பழகுவதை விட்டு, நிலையற்ற உலகவிடயங்களுக்காக முயன்று பெறும்பேறு

என்ன? ஒரு பொருளாலே எல்லாம் நிகழ்கின்றன எனத் தெளிந்து அச்சிவனருளுடனே பழக்கஞ் செய்து நிற்பாயாக.

களிறு: 6. சாத்திரத்தை 7. இன்று பசுவின்.

3. உபாயப் பயன்,

மேல் இந்த உபாயங் கூடினவர்களுக்குச் சனன மரணம் கூடாது என்று அருளிச் செய்கின்றார்.

கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவர்
பிண்டத்தில் வாரார்என் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற.

இ—ள்: கண்டத்தைக் கொண்டு—(தம்முடைய பாக்கியத்தாலே தமக்குப் பிராணனை சிவன் கோசரமாக, இப்படி) ஆசாரியராக எழுந்தருளியவரைக் கொண்டே; கருமம் முடித்தவர்—(தீட்சையாற்) சஞ்சித (மான) கன்மத்தையும் (போக்கி, தேகத்துடனே) பிராரத்த கன்மத்தையும் (போக்கி, அவர் நிறுத்தின அருட்கண்ணாலே) ஆகாமிய (த்தையும் போக்கி இப்படி மூன்று) கன்மத்தையும் முடித்துத் தீர்த்த ஆசாரியர் கைப்பட்டு நின்றவர்கள்; பிண்டத்தில் வாரார் என்று உந்தீபற—ஒரு காலுந் தேகவாதனையின்வழி நில்லார்கள்; பிறப்பு இறப்பு இல்லை என்று உந்தீபற—(ஆகையாலே கன்மங்கூடாதபடி ஆசாரியர் கடாட்சத்தாலே சிவனது திருவடியிலே நின்றவர்கட்கு ஒரு காலத்திலும்) சனனமரணமில்லை என்க.

வி—ம்: 1. கண்டதைக் கொண்டு:— கண்டதை என்பது எதுகை நோக்கி ஒற்று மிகுந்து கண்டத்தை என வந்தது. கண்டதை—தம்உணர்வில் வெளிப்படக் கண்ட முதற் பொருளாகிய ஆசாரியன் அருளை. கொண்டு—ஆசாரியன் அருளை முப்பொருளுண்மையறியும் நம் மெய்ஞ்ஞான உணர்வுக்கு வியாபகமாகக் கொண்டு. கோசரமாக—ஐம்பொறிமனம் இவற்றால் அறியத் தக்கதாக.

2. கருமம் முடித்தவர்—(மூவகை வினையையும் கழித்து முப்பொருள் உண்மை உணர்ந்து) தம்முடைய செயலைக் கழித்து ஆசாரியர் கைப்பட்டு நின்றவர். அதாவது சிவனடி சேர்ந்தவர். ''தந்தொழில் முடிமார்'' என்பது திருமுருகாற்றுப்படை.

3. பிண்டத்தில் வாரார்: உடல் வாசனை வழிநில்லார். பிண்டம்—உடம்பு. அவர்களது ஆன்மா சரீர வாசனை தீரும்; பாசநீக்கம் உண்டாகும்.

''சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்''

என்னுங் குறளும் இதனை விளக்குகின்றது.

4. பிறப்பு இறப்பு இல்லை—ஆசாரியன் மூலம் சிவனருளிலே அழுந்தியபோது கருமம் முடிந்து, சரீரப் பழக்க வாசனை தீர்ந்து பிறப்பும் இறப்பும் அற்ற சிவப்பேறு உண்டாகும்.

**பொழிப்பு:** பக்குவம்நோக்கி ஆசாரியனாக எழுந்தருளிய சிவனருளைக் கொண்டே கன்மத்தைக் கழித்துச் சிவனடியைச் சேர்ந்தவர் பழகிய உடல் வாசனையின் வழி நில்லார். பாசநீக்கம் பெற்றுப் பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப நிலையை எய்துவர்.

களிறு: 8. கண்டதைக் கொண்டு.

4. சிவாநந்த நிலை.

இந்நிலையிலே நின்று சிவனை அநுபவித்தலாலுண்டான சுகம் வாக்கால் உரைக்க வாராதென்று அருளிச் செய்கின்றார்.

இங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்
அங்ஙன் இருந்ததென் றுந்தீபற [லுகேன்
அறியும் அறிவதன் றுந்தீபற.

இ—ள்: இங்ஙன் இருந்தது என்று—(தன்னுடைய நிலையும் சிவசொரூபத்து உண்மையும் இந்தச் சிவரூபங் கண்ணுகவே அறிந்து, இந்தச் சிவரூபத்துடனே வேறற நின்று அநுபவிக்கத்தக்க ஐக்கிய முண்டானபோது அதனல் விளைந்த பரமசுகத்தை வாக்கால் உரைக்க எண்ணும் அளவில், அனுபோகமானது உரைக்கப்படாது ஆகையாலும், மன வாக்குக் காயங்கள் மாயா விகற்பமாகையால் இவற்றுக்கு அதீதமாயிருக்கையாலும், இப்பொருட்கு ஓர் ஒப்பில்லாது ஒழிகையாலும்) இப்படியிருந்ததென்று; எவ்வண்ணஞ் சொல்லுகேன்—எப்படி உவமித்துச் சொல்லுவேன்; அங்ஙன் இருந்தது என்று உந்தீபற—(ஒருவனுக்குக் கன்மம் துலைபோல் ஒத்து மலபரிபாகமும் பிறந்து, தேசிகனுடைய திருவடியைப் பெற்றுச் சிவசொரூபத்தையும் உணர்ந்து இரண்டறக் கூடிப்பரமாநந்தமும் விளைந்து அந்தப் பரமசுகத்திலே அழுந்தின காலத்து அவனுக்கு எப்படி இருந்ததோ அப்படியே என்னுமது ஒழிந்து, இன்னபடி என்று அளவுபடுத்தி உரைக்குமது அன்று ஆதலால்) அப்படியே இருந்தது; அறியும் அறிவதன்று உந்தீபற—(அப்படியிருந்த பொருளை ஆன்ம ஞானத்தால்) அறிந்து கூடத்தக்கது அன்று என்க.

வி—ம்: சிவசொரூபத்து உண்மை:—

1. எவ்வண்ணஞ் சொல்லுகேன்—எவ்வாறு எனத் திட்பமாக உவமித்துக் கூறுவேன். தனக்கு உவமையில்லாததை உவமித்துக் கூறமுடியாது.

"சொல்லுவதறியேன் வாழி" என்பது அநுபவவாசகம்.
"சொற்பா லமுதிவள் யான்சுவை என்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார்" என மணிவாசக அடிகள் முத்தியின்பத்தை உவமைப்படுத்தி உணர்த்தினர்.

சிவசொரூபத்து உண்மை: அருவமும் உருவமும் அல்லதாய், குணமும் குறியும் இல்லதாய், நின்மலமாய், ஒன்ருய், நித்தமாய், அறிவுக்கு அறிவாய், சலனம் அற்றதாய், அகண்டிதமாய், ஆநந்த உருவாய், இன்னும் பலவாய் உள்ளது. அதீதமாய்—எட்டாததாய்.

2. அங்ஙன் இருந்தது: சிவாநந்தம் அநுபவித்தவாறு இருந்தது. சார்ந்ததன் வண்ணமாகும் உயிர் சிவனைச் சார்ந்து சிவாநந்த அநுபவத்தை உணரும். இக்கருத்தை,

''செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே''

என்னும் திருமந்திரத்தோடு ஒப்பு நோக்கி உணர்க.

3. அறியும் அறிவதன்று: சிவாநந்தம் அறிவு வடிவாயுள்ளது. சுட்டறிவால் அறிந்'' கூடவும் உரைக்கவுந் தக்கதன்று. மெய்யறிவால் உணரப்படுவது.

''அவனருளே கண்ணுகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே''

என்றும் ''ஆயும் அறிவு கடந்த அரன்'' என்றும் வந்துள்ள திருவாக்குகளைக் காண்க.

**பொழிப்பு:** சிவாநந்தம் இப்படியிருந்ததென்று ஒருவமையில் வைத்துக்கூற முடியாது. (கற்கண்டின் சுவை அதை உமிந்தார்க்கன்றி அறியப்படாதது போல) சிவாநந்தம் அவனைக் கண்டு உணர்ந்தார்க்கன்றி அறியவொண்ணுது. அது அறிவுவடிவாயுள்ளது. பாச, பசு ஞானங்களாய சுட்டறிவால் அறிந்து கூடவும் உரைக்கவும் வாராதது.

களிறு: 9. அன்று முதல். 10. ஒன்றுங்குறியே...

## 5. சிவத்தின் பிரிப்பறுநிலை.

இப்படிப் படர்க்கையாய் நின்ற சொரூபந்தானே அநாதியே நமக்குத் தன்மையுமாய் முன்னிலையுமாய்க் கன்ம பரிபாகமும் மலபரிபாகமும் பிறந்த பின்பு ஆசாரியனுமாய் வந்ததென்று அருளிச்செய்கின்றார்.

ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனான்என் றுந்தீபற
நம்மையே ஆண்டான்என் றுந்தீபற

இ—ள்: ஏகனும் ஆகி—(இப்படிப்பட்ட பொருளாய் உள்ளவனே அநாதியே ஆன்மாவைக் கூடிப்பிரிதற்கு அரியன் ஆகையாலே) ஒன்று என்னும் படியுமாய்; அநேகனும் ஆனவன்—(யாம் செய்த கன்மத்துக்கீடாக உபகரிக்க வேண்டி அவன் அவள் அது என்று) பலவாய் நிற்கத்தக்கவனுமாய்; நாதனும் ஆனான் என்று உந்தீபற—(இப்படி நின்று கன்மத்தையும் தொலைப்பித்து மலத்தையும் பக்குவமாக்கின இந்த அவதரத்திலே நமக்கு) ஆசாரியனுமாய் எழுந்தருளி வந்தான்; நம்மையே ஆண்டானென்று உந்தீபற—(இப்படி எழுந்தருளி வந்து அநாதியே தொடங்கி இன்றளவும் திருவருள் கிடையாமல் நரகத்திலே உழந்த) நம்மையே (காருண்ணியத்தின் மிகுதியாலே பெறுதற்கரிய திருவடியைத் தந்து) அடிமை கொண்டான் என்க. ஏகாரம் இழிவின்கண் வந்தது.

வி—ம்: 1. ஏகனும் ஆகி—இறைவன் உயிர்கள் நிலைத்தற் பொருட்டு அவற்றுடன் உடலும் உயிரும்போல அபேதக்கலப்பால் ஒன்றாயிருக்கின்றான். இறைவன் ஆணவ இருளில் ஆன்மா தனித்திருந்த கேவல நிலையாகிய அநாதியே ஆன்மாவைக் கூடிப் பிரிதற்கு அரியனாய் அறிதற்கு அரியனாய் உளன். "ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றே பதி" என்பது சிவஞான போதம். "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்ற திருவாசகமுங் காண்க. இதனால் ஒன்றாய் நிற்றல் கூறப்பட்டது.

2. அநேகனும் ஆனவன்—உயிர்கள் அறிவைப் பெறும் பொருட்டு, கண்ணும் கதிரோனும் போலப் பேத மாய் பொருளின் தன்மையால் வேருயும் அதாவது அநே கனுகியும் நிற்கத்தக்க சிவன். இதனுல் வேருய் நிற்றல் கூறப்பட்டது. இறைவன் அநேகனுய் இருந்து நமது கன் மங்கட்கு ஏற்ற வண்ணம் உபகரித்து கன்ம பக்குவமாக்கு முறையால் அநுபவ அறிவை உண்டாக்குகின்ருர். இதனுல் இருவினை ஒப்பும் மலபரிபாகமும் உண்டாகின்றன.

3. நாதனும் ஆனுன்—உயிர் அறிவு பெறச் செலுத் துதற் பொருட்டு, கண்ணொளியும் ஆன்மபோதமும் போல பேதாபேதமாய் உயிர்க்குயிராகுந் தன்மையால் உடனு யும் அதாவது ஆசாரியனுகியும் வந்தான். இதனுல் உட னுய் நிற்றல் கூறப்பட்டது. இவ்வாறு ஒன்ருய், வேருய், உடனுய் நிற்றல் என்ற சாத்திர உண்மையை ''எட்டுத் திசைதானுய், வேருய், உடனுனிடம் வீழிம் மிழலையே'' என்ற தோத்திரத்திலும் காண்க.

ஒன்ருதல், வேருதல், உடனுதல் ஆகிய மூவகை இயல் புங் கொண்ட பொருள் பொருந்திய சொல்லே அத்து விதம் என்பது. இதுவே சைவசித்தாந்தக் கொள்கை யாகும்.

4. நம்மையே ஆண்டான்—ஏகாரம் இழிவு சிறப்பு. மிகவும் இழிந்த நிலையிலுள்ள சகலராகிய நம்மையும் பேரருளால் ஆசானுகிவந்து ஆண்டு கொண்டான். உயர்ந்த பிரளயாகலர் விஞ்ஞானகலரை ஏற்றவகையால் ஆட் கொள்வான். இவ்வாறு இறைவன் ஆட்கொள்ளாவிடில் சுவர்க்க நரகங்களிலும் இப்பூவுலகிலும் பிறவி எடுத்துச் சுழல நேரும். நமது பக்குவங் கண்டு ஆசாரியனுய் வந்து தீட்சை தந்து ஆட்கொள்ளுவான். இங்ஙனம் திருவடி யைத் தந்து அடிமை கொள்வதால் இறைவன் ஆண்ட வன்; நாம் மீளா அடிமை. ''என்று நீ அன்று நான் உன் னடிமை அல்லவோ'' என்ருர் தாயுமானவர்.

**பொழிப்பு:** (உயிர்களிலே கலந்திருப்பதால்) ஒன்ருகி—அவன், அவள், அதுவாய் நின்று அறிவு தரும் பொருளின் தன்மையால்) பலவாயும் நிற்கத்தக்க சிவன், (மலபக்குவத்தின்போது உயிர்க்குயிராய் உடனுய்நின்று செலுத்தும்) ஆசாரியனுயும் ஆனுன். (அருள் கிட்டாது சுவர்க்க நரகங்களிலும் பூவுலகிலும் பிறவி எடுத்துச் சுழன்ற) மிகவும் இழிந்த நம்மையும் ஆண்டு கொண்டான்.

களிறு: 11. ஆற்ருல் அலைகடற்கே .....

## 6. தம்பிரானுர் பாரம்.

இப்படி எழுந்தருளிவந்து அடிமை கொண்டபோதே தன் பாரங்கெட்டுச் சர்வமுந் தம்பிரானுர்க்கே பாரமாம் முறைமையை அருளிச் செய்கின்ருர்.

நஞ்செயல் அற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னேயே தந்தான்என் றுந்தீபற.

இ—ள்: நம்செயல் அற்று—(சர்வத்தையும் தம்பிரானுர் கூடிநின்று கூட்டுகை செய்த இந்த முறைமையை அறியாமல், தன்னுலே செய்யப்பட்டதென்று கருதும்) ஆன்ம சுபாவமும் (அருளாலே விட்டு) நீங்கி; இந்த நாம் அற்றபின்—இப்படி நீங்கிேனும் என்கின்ற தன்னேயும் அருளிலே கொடுத்துத் தானும் அருளேயாய அப்பொழுதே; நாதன் தன் செயல்—கர்த்தா (இவனேக் கிரகித்துக் கொண்டு, இவன் செயல் எல்லாந்) தன்செயலாக்கி; தானே என்று உந்தீபற--(இவனுந்) தானுகவே நிற்பன்; தன்னேயே தந்தான் என்று உந்தீபற—(இப்படிக் கூடி ஒருவன் கைம்மாறு செய்யத் தக்கதாகத் தன்னையொழிந்த பொருளிலே வேண்டுவது கொடுக்கையன்றி, தன்னேயே தந்தான் ஒருவனுக்குச் சிவனும் ஒரு பதங்களேக் கொடாமற் கரையற்ற பலமாக அவனேப் போலத்) தன்னேயும் அவனுக்கே கொடுப்பான் என்க.

வி—ம்: 1. நம்செயல் அற்று — சிவச்சார்பை உணர்ந்து மலர்ச்சார்புகெடுமாறு திருவருளில் அழுந்தும் ஆன்மா அருள்வயப்படும். அவ்வான்மா திருவருள் காட்டு மாறே செயல் புரியும். தன்னாற்செய்யப்பட்டதாகக் கருதும் ஆன்ம சுபாவம் கூடத் திருவருளால் நீங்கிவிடும்.

2. இந்த நாம் அற்றபின்—திருவருளில் அழுந்தி எல்லாச் செயலையும் இறைபணியாகப் புரிதலால் சீவகரணம் சிவகரணமாகும்; ஆன்மபோதம் சிவபோதமாகும். சிவ வியாபகத்துக்குள் ஆன்மா அடங்கி விடும்.

3. நாதன் தன் செயல்—சிவத்தின் வியாபகத்துட்பட்ட ஆன்மா தன் செயல் அற்று விடுகின்றது. ''நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே'' ''என்னதோ இங்கு அதிகாரம்'' என்ற மணிவாசகங்கள் இந்நிலையை உணர்த்துகின்றன.

4. தானே—சிவமாந்தன்மை எய்திய இவனும் சிவமுங்கூடிவேறற நிற்பர். ''தானாகத் தந்ததென்றுந்தீபற'' என்று முதற் செய்யுளிற் கூறியது காண்க.

5. தன்னையே தந்தான்—நாம் நம்மையே சிவத்துக்கு உரிமையாக அர்ப்பணித்து விட்டால், சிவமும் வேறுவகைப் பயன்கள் ஈடாகாமை கருதித் தம்மையே—பரமுத்தி நிலையையே—நமக்குத் தந்தருளுகின்றான். சிவத்துக்கு நாம் நம்மை அளியாது பிற பொருள்களை அளித்தால் சிவமும் தம்மை நமக்கு அளியாது வேறு பயன்களை—பதமுத்தி நிலையை—அருளுகின்றான். ''தந்ததுன்றன்னைக் கொண்டது என்றன்னை'' என்பது அநுபவவாசகம்.

பொழிப்பு: அருளினாலே தன்னாற் செய்யப்பட்டதாகக் கருதும் ஆன்ம சுபாவமுமற்று, இப்படி நீங்கினோம் என்ற ஆன்மபோதமும் அற்றுத், தான் அருள்வயப்பட்டபொழுது சிவன் இவனைத் தன் வியாபகத்துள் அடக்கி, இவன் செயலெல்லாந் தன் செயல் ஆக்கி, இவனுந்தானாக

வேறற நிற்பன். தன்னையே கொடுத்த இவனுக்குச் சிவனுந் தன்னையே கொடுப்பான்.

களிறு: 12. பாலை நெய்தல் .. 13. தூங்கினரை...

7. ஏகீபாவ உபாயம்.

இப்படிப்பெற்ற பொருளுடனே ஏகீபாவம் பிறந்து ஒரு நீர்மையாய் நிற்கும் உபாயம் எப்படி என்று கேட்ட மாணுக்கனை நோக்கி மேல் அருளிச் செய்கின்றூர்.

உள்ளம் உருகில் உடனுவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வர்என் றுந்தீபற.

இ—ள்: உள்ளம் உருகில்— (ஸ்திரீகள் தங்களுக்கு உரிய புருஷர்களிடத்து உண்டாகிய தலையன்பு இடையன்பு கடையன்பு என்னும் மூவகை ஆசை மிகுதிக்கு ஒப்பாக, நம் பொருட்டுத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்த தம்பிரானுர் தமக்குத் திருநாமமாகிய பஞ்சாட்சரத்தின் உண்மையை ஒருகால் அருளிச் செய்யக் கேட்டும், உள்ளபடி காட்டக்கண்டும், அந்தச் சொரூபம் அநாதியே தம்மிடத்திலே கூடிநிற்கிற முறைமையை உணர்த்தி அவர் கூட்டுமுறைமைகளிலே கூட்டக்கூடியும், இப்படி மூன்று வகையுங்கண்ட) சீவர்கள் நிருவிகாரிகளாய் (அக்கினி கலந்த மெழுகுபோல்) உருகிப் பேரன்பு கூர்ந்து கரையழிந்திருந்த காலத்து; உடனுவர்— (குளிகையாலே, காளிதமறப் பேதிக்கப்பட்ட செம்பிலே உள்ள மாற்றெழுந்திருந்து செம்பென்னும் பெயர் கெட்டுப் பொன் என்னும் பெயர் பெற்றுற்போல) ஆன்ம சொரூபம் மறைந்து சிவசொரூபமேயாய்ச் சிவனெனநிற்பர்; அல்லது—இப்படிக் கூடுகை ஒழிந்து; தெள்ள அரியரென்று உந்தீபற—தம்முடைய போதத்தால் ஆராய்ந்து கண்டு கூடுதற்கு அரியர்; சிற்பரச் செல்வரென்று உந்தீ

ப்ற— (இப்படித்தஞ்செயல் கூடாதே கூடினவர்களே) மேலான ஞான ஐசுவரியத்தை உடையவர்கள் என்க.

**வி—ம்:** சிற்பரச் செல்வர் உள்ளம் உருகில் உடனுவர்; (உருகில்) அல்லது தெள்ள அரியர் என்று கொண்டு கூட்டுக.

1. உள்ளம் உருகில் உடனுவர்:- தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி அதனிடத்து இச்சை முதிர முதிர உள்ளம் நெகிழ்ந்து உருகும். உள்ளம் உருகவே பாசம் நீங்கிவிடும். மனத்துக்கண் மாசற்ருேர் ஆன்ம சொரூபம் மறைந்து சிவசொரூபமாய்ச் சிவனென நிற்பர். அன்பே சிவம்.

கணவரிடத்து அன்பு செலுத்தும் வகைபற்றி மகளிர் தலைமகளிர், இடைமகளிர், கடைமகளிர் என மூவகைப் படுவர். இவருள் தன் நாமங்கெட்டுத் தலைவன் தாள் தலைப்பட்டாரே தலையன்புடைமகளிர். இத்தலை மகளிரே பால இறைவன் அருளிய நன்றிகளை நினைந்து நினைந்து அவன் மாட்டு அயரா அன்பு செலுத்துவோரே சிவரூப மாய்ச் சிவனென நிற்பர். இவரே பரமுத்தி நிலையினர்.

உடனுவர்—உருகிய உள்ளத்தராயபோது சீவர்கள் நிர்விகாரிகளாவார்கள். இரச குளிகையாலே களிம்பு நீங்கிய செம்பு மாற்றுயர்ந்து பொன்னுவது போலத் திருவருளால் உள்ளமுருகிப் பாசம் நீங்கிய ஆன்மா சிவனென நிற்கும். சிவமும் பிரிப்பின்றி நிற்கும். இதுவே சிவாநந்த நிலை.

2. தெள்ள அரியர்—அறிவிக்கும் அறிவாகிய சிவ போதத்தால் அன்றி, அறிவிக்க அறியும் ஆன்ம போதத்தால் இறையநுபவ நிலையினை எய்த முடியாது.

3. சிற்பரச் செல்வர்:— சித்-ஞானம்; பர-மேலான; செல்வம் - ஐசுவரியம். சிற்பரச் செல்வர் - மேலான ஞான ஐசுவரியமுடையவர். முத்தியில் ஒன்ருய் உயிரறிவோடு

கலந்து நின்றும்; வேருய் சிவபோகமாய் விளங்கித் தோன்றியும், உடனுய் நின்று சிவபோகத்தை அறிந்தும் உபகரிப்பவர் சிவனேயாதலின் சிற்பரச் செல்வர் எனப்பட்டார். சிவத்தை எய்தியோரும் சிற்பரச் செல்வர்களேயாவர். ''பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தார் பரமே பார்த்திருப்பார்; பதார்த்தங்கள் பாரார்''—என்றதும் இச் செய்யுளின் கருத்தை விளக்குகின்றது.

பொழிப்பு: ஆன்மாக்கள் மேலான ஞான ஐசுவரியரான சிவனதுநன்றியை நினைந்து அயரா அன்பால் உள்ளம் உருகப் பாசம் நீங்கி ஆன்மரூபம் மறைந்து சிவரூபமாய்ச் சிவனென நிற்கச் சிவமும் பிரிப்பின்றி நிற்கும். இவ்வாறு சிவனை அன்பாற் கூடுதலன்றி ஆன்மபோதத்தால் ஆராய்ந்து கண்டு கூடமுடியாது. சிவப்பேறு எய்தியவர் மேலான ஞானச் செல்வராவர்.

களிறு: 14. உள்ளமுதல்... 21. செய்யுஞ்செயலே

8. யோக உபாயம்.

இந்த நிலைகூடாத அளவில் வேறேயும் ஒருபாயம் உண்டென்று அருளிச் செய்கின்ருர்.

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற.

இ—ள்: ஆதாரத்தாலே—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்று சொல்லப்படாநின்ற ஆதாரங்களிலே (ஒவ்வொரு) ஆதாரந்தோறும் பொருந்தின தேவதையைத் தியானித்துச் சமாதியடைந்து, இது கைவந்தபின்; நிராதாரத்தே சென்று—நிராதாரயோகம் என்று சொல்லப்பட்ட ஆன்மசொரூபத்தை உணர்ந்து, ஒரு பற்றும் இன்றிச் சமாதிபரனுய் நிற்க; மீதானத்தே செல்க உந்தீபற—(அந்த நிராதார யோகத்துக்கு உபாய யோகமாகிய மேலான

யோகத்திலே சாதித்துத் தன்னுடைய செயலற நிற்கு மதைச் சாத்திரங்களின் வழிகளிலே ஆராய்ச்சிசெய்து,) மீதானமாகிய சிவசொரூபத்திலே கூடும்படி சிரத்தை பண்ணுவாயாக. விமலற்கு இடம் அதென்று உந்தீபற— (இப்படிப்பட்ட இடமே) நின்மலனாகிய சிவனைக் கூடத் தக்க இடமாவது என்க.

வி—ம்: 1. யோகம்—தொடர்பு செய்வது. சீவன் பரத்துடன் அடைவது உண்மைத் தவயோகம். தவயோகம் சாலம்பம், நிராலம்பம் என இருவகைப்படும். சாலம்பம் = ஆலம்பம் = ஆதாரயோகம். நிராலம்பம் என்பது நிராதாரயோகமாம். நிராதாரயோகமே ஞான யோகமாகும்.

2. ஆதாரத்தாலே: ஆதாரங்கள் ஆறு. ஆறு ஆதாரங்களிலும் முறையே விநாயகர், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய இத் தேவதைகளைத் தியானித்துச் சமாதியடைதல் ஆதாரயோகம்.

3. நிராதாரத்தே சென்று: தேவதாத்தியான சமாதி நிலை கைவந்தபின் நிகழ்வது ஆன்மசொரூபம். ஆதாரம் இன்றி ஆன்மசொரூபமாய்ச் சமாதி எய்துதலால் இந்நிலை நிராதாரயோகம் எனப்படும். இது ஞான பூசைக்கு உரியவனாக்கும்.

4. மீதானத்தே செல்க: ஞானபூசைக்கு உரியநிலை சன்மார்க்கநிலை எனப்படும். இது சரியை கிரியை யோகம் என்னும் மூன்று நிலைகளிலும் மேம்பட்டது. ஆதலின் இதனை மீதானத்தே செல்க என்றார். ஞானத்தால் சிவனின் தடத்த இலக்கணத்தை அறிந்து பின் சிவ சொரூபத்தில் அழுந்துவதே சிவயோகம். இதன் விளைவே சிவபோகம். சிவபோகமே முடிந்த நிலை.

5. விமலற்கு இடம் அது: ஞான நூல்களைக் கற்று, ஆசிரியனிடங் கேட்டு, சிந்தித்து, காண்பான் காட்சி காட்

சிப்பொருள் பற்றிய சவிகற்ப ஞானத்தைக் கடந்து நிருவிகற்ப ஞானத்தால் வழிபடவேண்டும். சிவனது சொரூபத் திருமேனியிடமாக இவ்வழிபாடு நிகழ்த்துதலே ஞான மார்க்கமாகும். இந்தச் சிவ சாயுச்சியமாகிய பரமுத்தித் தானமே விமலற்கு இடம் அது எனப்பட்டது. நின்மல சிவனைக் கூடுமிடம் இதுவே. இதுவே தெளிவாகும்.

பொழிப்பு: ஆறு ஆதாரங்களிலும் உரிய தேவதைகளைத் தியானித்துப் பழகியபின், நிராதாரமாய ஆன்ம சொரூபத்தை உணர்ந்து சமாதிபரனுகி, மேம்பட்ட ஞான பூசைக்குரிய சன்மார்க்க நிலையை அடைந்து, சிவசொரூபத்திலே வழிபாடு செய்க; இப்பரமுத்தித் தானமே நின்மலசிவனைக் கூடுமிடம்.

களிறு: 22. ஆதாரயோகம்.

9. ஆதார யோகப்பயன்.

ஆதார யோகத்துக்கிட்ட வுபாயம், ஒழிந்த சாயுச்சியத்துக்கு இலக்கணமான யோகமல்ல என்று அருளிச்செய்கின்றார்.

ஆக்கில்அங் கேயுண்டாய் அல்லதங் கில்லை
பார்க்கில் பரமதன் றுந்தீபற [யாய்ப்
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற.

இ—ள்: ஆக்கில் அங்கே உண்டாய்—தற்போதத்தாலே மூலாதாரம் முதல் பிரமரந்திரம் ஈருகவுள்ள ஆதாரங்களிலே ஒவ்வொரு தேவதையைத் தியானித்த காலத்தில் உண்டுபோலத் தோன்றியும்; அல்லது அங்கு இல்லையாய்—தியானியாத காலத்து இல்லையாகியும்; பார்க்கில் பரமது அன்று உந்தீபற— (இப்படித் தியானிக்கப்பட்ட தேவதைகள் இந்தத் தேகத்தில் ஆதாரங்கள் போலப் போகத்துக்குத் தானமாகிய அண்டத்திற்கு உட்பட்ட பதங்களிலே அடைவிக்குமது ஒழிந்து, பரிபூரணமான

சாயுச்சியத்தை அடைவிக்கமாட்டா; அஃதேனெனில், ஆன்ம போதமானது சீவிக்குமளவில் அதோமுகமாக ஒழிந்து சீவியாது. ஆகையால், அதனுல் கற்பிக்கப்படுமவையெல்லாம் தனக்கு அநாதியே வாதனை பண்ணிப் போந்த மாயாரூபமே ஒழியத் தன்னை விட்டு நீங்காத சிவ சொரூபத்தை உணர்த்தாது; ஆதலின் தன்னுடைய போதத்தாற் கற்பிக்கப்படுமவையெல்லாம் விசாரித்துப்) பார்க்கில் சொரூபமல்ல; பாவனைக்கு எய்தாது என்று உந்தீபற—(இவ்வித அவாங் மனோகோசரமாய் உள்ள பொருள் இவனுடைய) கற்பனையில் அகப்படாது என்க.

வி—ம்: 1. ஆக்கில் அங்கே உண்டாய்:- ஆதாரயோகம் நிராதாரயோகத்திற்கு அடிப்படை; தற்போதத்தோடு செய்யப்படுவது. தேவதைகள் தியானித்தபோது உள்ளனவாகக் காணப்படும், பிரமரந்திரம்—உச்சித்துவாரம்.

2. அல்லது அங்கு இல்லையாய்—தியானிக்காதபோது இத்தேவதைகள் இலவாகின்றன.

ஆன்மபோதம் கீழ்நோக்கியே சீவிப்பதால் மாயாரூபத்தையே கற்பிக்கும்; சிவரூபத்தைத் தராது. சிவரூபம் பாவனைக்கு எட்டாது. அதோமுகம்—கீழ்நோக்கி. பதங்கள்—பத முத்திகள். ஒழிந்து-அன்றி.

3. பார்க்கில் அது பரம் அன்று—கிரியா யோகமாகிய ஆதார யோகம் தவப்பயனுகிக் குருவைத் தந்து ஞானத்துக்கு வழிவகுக்கும். ஞானத்திற்கு முதற்காரணமான ஆதாரயோகம் தரும் சாரூபமுத்தி மேலானதன்று; சாயுச்சிய முத்தியே மேலானது.

4. பாவனைக்கு எய்தாது: ''பாவிக்கின் மனுதி வேண்டும்'' என்பது சிவப்பிரகாசம். சீவபோத முனைப்போடு மனுதிகளாற் செய்யும் எவ்வித பாவனைக்கும் சிவம் எட்டாது; பாவனைக்கு, அண்டத்துக்கு உட்பட்ட தேவதைகளே எய்தும். சிவனடி சேர்தலாகிய சிவசாயுச்சியம் சிவ

னருளாலேயே பாவிக்கப்படவேண்டும். ''பாவனை இறந்து நின்று பாவிக்கப் படுவதாகும் பரம்பரன் அருளினலே'' என்பது சிவஞானசித்தியார். ''அவனருளாலே அவன் ருள் வணங்கி''—திருவாசகம். அவனருளே குருவருள். அவாங் மனே கோசரம்—வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதது. (அறியத்தக்கது.)

பொழிப்பு: இதயத் தாமரை முதலிய இடங்களிலே தேவதைகளைக் கற்பித்துத் தியானஞ் செய்த காலத்து அவை உள்ளனவாகியும், தியானஞ் செய்யாதபோது இல்லாதனவாகியும் விளங்கும் ஆதார யோகத்தை விசாரித்துப் பார்த்தால், ஞானத்திற்குப் படிமுறையில் உபகாரமாகுமன்றி மேலான நிராதாரம் ஆகாது. மனம் வாக்குக்கு எட்டாத சிவம் கற்பனையில் அகப்படாது.

களிறு: 23. ஆக்கி ஒரு. 24. கொண்டதொரு...

10. சுத்த நிராதார யோகத்து இயல்பு.

மேல் முன் சொல்லப்பட்ட நிராதார யோகத்தை விரித்தருளிச் செய்கின்றார்.

அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருள்ஈதென் றுந்தீபற.

இ—ள்: அஞ்சே அஞ்சாக—பஞ்ச பூதபரிணமம் ஆகிய தேகம் (ஆன்மா கூடினல் ஒழிந்து சேட்டியாது; ஆகையால் இந்தத் தேகத்துடனே கூடிநின்றால் உள்ள தோஷத்தையறிந்து, வேறாகக்கண்டு நீங்கி நிற்கவே இந்தத் தேகமும் பிரமாண்டமாகிய) பஞ்சபூதங்கள் (போல இவனுக்கு வேறாகியே நிற்கும்;) அறிவே அறிவாக (இவற்றை அருட்கண்ணலே கண்டு நீங்கின ஆன்மாவுக்கு நீங்கின பொழுதே இவனுடைய இச்சா ஞானக் கிரியைகளும் தொலைந்து இவனுக்கு அநாதியே பிராணனய் மறைந்து

நின்று இரட்சித்த சிவனும் இவனைக் கவளீகரித்துக் கொண்டு, தான் ஆன்மாவாகியே நில்லாநிற்பன். இந் நிலை தவமுமல் நிற்கும்படி ஒருவன் ஓர் ஊருக்குப் போகும் அளவில் மற்றொருவன் காட்டிவிட்ட குறிவழிச் செல்லா மல் பக்கமே செல்லத்தக்க கள்வருடைய அடிப்பாட் டையை வழிஎனக் கருதிச் சென்றால் கள்வராலே வித னப்படாநிற்பன். இந்தவிதனங்கள் கூடாதபடி பக்கவழி களிற் செல்லாமல் ஒருவன் காட்டிவிட்ட குறிவழிச்சென் றால் ஒருவியாகூலமும் அறப்போய்க் கருதின ஊரிலே சென்று தன்னுடைய கோட்பாடு முடியாநிற்பன். அது போலச் சொரூபத்திலே சென்று இரண்டறக் கூடுகிற வழிக்கு விரோத வழியாகிய மயக்கவிகற்பங்களிலே விழுந்து சனனமரணங்களை அடையாதே—தன்னுடைய சொரூபத்திலே வந்து கூடும்படி வழிகாட்டி நிற்கிற) உணர்வுகண்ணுக; துஞ்சாது உணர்ந்திருந்து உந்தீபற— கேவல சகலத்திலே தாக்காமல் இருக்கவேண்டும்; துய்ய பொருள் ஈது என்று உந்தீபற—வேதாகமங்களில் தீர் வானபொருள் இதுவே என்க.

வி—ம்: 1. அஞ்சே அஞ்சாக—பிண்டமான பஞ்ச பூதங்களை ஆன்மா தன்னின் வேறாகக் காண்பதுபோல பஞ்சபூத பரிணாமமான உடம்பையும் ஆன்மா தன்னின் வேறாகக் கண்டு நீங்கி நிற்க. திருவைந்தெழுத்தே அஞ் சாக என்கின்றது திருக்களிற்றுப்படியார்.

2. அறிவே அறிவாக—குருவருளால் உபதேச மூலம் அநுபவத்தில் ஆன்மாவின் உண்மை தெளிந்தபோது ஆன் மாவின் இச்சையாதி மூன்றும் தற்போத ஒழிவு பெற்றுச் சிவத்தினது இச்சையாதிகளுள் அடங்க, சிவம் ஆன்மா வைக் கவர்ந்து கொண்டு தானே ஆன்மாவாக நிற்கும். அவ்வாறு நடத்துஞ் சிவத்தினது உணர்வே கண்ணாக ஆன் மாவுக்குள் சிவம் மறைந்திருந்தவண்ணம் சிவத்துள் ஆன்மா மறைந்திருத்தலே நிராதார யோகம்.

3. துஞ்சாது உணர்ந்திருந்து—நிராதார யோகம் மேற்கொள்வோர் குருவின் உபதேச வழிநின்று கேவல சகலத்திலே தாக்காமற் சிவசொரூபத்திலே இரண்டறக் கலத்தலாகிய வழியிலே இருக்கவேண்டும்.

4. துய்ய பொருள் ஈது—ஆன்மா சிவத்துள் அடங்கி ஒன்றுபட்டு ஒழுகும் இந்த நெறியே—நிராதாரயோகமே—வேதங்களிலும் ஆகமங்களிலும் கூறப்பட்ட முடிவான பொருளாகும்.

**பொழிப்பு.** ஆன்மா தன்னின் வேருகப் பஞ்ச பூதங்களைக் காண்பதுபோல பூதபரிணமமாகிய உடம்பையும் வேருகக் கண்டு நீங்கி, திருவருளால் ஆன்மாவின் உண்மை தெளிந்து, சிவத்துள் அடங்க, சிவம் ஆன்மாவைக் கவர்ந்துகொண்டு தானே ஆன்மாவாக நின்று நடத்தும். இவ்வாறு நடத்தும் சிவத்தினது உணர்வே கண்ணுக, கேவல சகலத்திலே தாக்காமல், சிவத்தொடு வேறறக் கலக்கும் வழியிலிருக்கவேண்டும். இந்நிராதார யோகமே வேத சிவாகமங்கள் கூறும் முடிவான பொருள்.

களிறு: 25. அஞ்செழுத்துமே ..

## 11. தற்போதத்தின் இழிவு.

இப்படிக் கூடுமதொழிந்து தன்னுடைய போதத்தாலே கூடும்படி விசாரிக்கில் இப்பொருள் கைகூடாதென்று அருளிச்செய்கின்ருர்.

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்
நோக்கிற் குழையும்என் றுந்திபற
நோக்காமல் நோக்கவென் றுந்திபற.

**இ—ள்:** தாக்கியே—ஆன்மாவுடனே கூடி ஆன்மாவாய் நின்றும்; தாக்காது நின்றதோர் தற்பரன்—தன்னுடைய உண்மை குன்ருமல் பரமாநந்த சொரூபமாய் நிற்கிற அந்தச் சொரூபத்தை; நோக்கில்—கூட விசா

ரித்து; அது தனியே ஒரு பொருளும் (நீ ஒரு பொருளும்) ஆக உன்னில் இரண்டுபட்டு நின்று பொருந்த விசாரிக்கில்; குழையும் என்று உந்தீபற—உனக்கு அப்பொருள் கூடாது; நோக்காமல் நோக்க என்று உந்திபற—அநாதியே அந்தச் சொரூபம் தன்னைத் தோற்றுமல் நீயாகி நின்ற முறைமைபோல் நீயும் உன்னைத் தோன்றுமல் அந்தச் சொரூபம் தாளுகியே நிற்கில் அப்பொழுதே பரிபூரண பரமாநந்த சொரூபியாய் விடுவை என்க.

வி—ம்:- 1. தாக்கியேதற்பரன்:- தாக்கியே—ஆன்மாவை விடயங்களிலே செலுத்துதற் பொருட்டு உடனுய்—ஆன்மாவுடன் கூடி ஆன்மாவாய் நிற்கின்றுன். தாக்காது நின்றதோர் தற்பரன்—இறைவன் ஆன்மாவுடன் ஒன்றுபட்டிருப்பினும் ஆன்மா செய்யும் வினைப்பயன் இறைவனைத் தாக்காது. இறைவன் அருளோடு பிரிப்பின்றி நின்று சங்கற்ப மாத்திரையான் உயிருக்குப் பலவேறு வகைப்பட்ட அறிவு நிகழும்படி செய்தாலும் விகாரம் எய்தான். பாசம் இறைவனைத் தாக்காது. தற்பரன்—சர்வ வியாபகனுகி அறிந்தாங்கறியுந் தன்மையுடையவன்.

2. நோக்கிற் குழையும்:- நோக்கில்—உயிர் வேறு இறைவேறு என்ற பிரிப்பற்ற முத்திநிலையில், இறை தனியே ஒருபொருளும் உயிர் தனியே ஒரு பொருளுமாக இரண்டுபட்டு நின்று பிரித்துக் காணப்புகில். குழையும்: சிவம் உயிரால் அறியப்படஇயலாது.

3. நோக்காமல் நோக்க என்றுந்தீபற—சிவம் உயிர்களிடம் தாக்கியும் தாக்காமலும் இருப்பதுபோல உயிரறிவு சிவனுடைய அறிவோடு கலந்து நோக்கியும் நோக்காமலும் ஒழுகவேண்டும். அதாவது சிவம் உயிராகியே நின்ற முறைமைபோல உயிருந் தன்னைத் தோற்றுமல் சிவசொரூபம் தாளுகவே நிற்கவேண்டும்.

பொழிப்பு: சிவம் ஆன்மாவுடனே கூடி ஆன்மாவாய் நிற்கின்றது. அங்ஙனம் நிற்பினும் தன்னுடைய உண்

மை குன்றுமல் நிற்கின்றது. பிரிப்பின்றி நிற்கும் முத்தி நிலையில் சிவம் வேறு உயிர்வேறுகப் பிரித்துக்காண நேரு மாயின் சிவம் உயிர்களால் அறியப்படஇயலாது. சிவம் உயிராகியே நின்றமுறைமைபோல உயிரும் சிவசொரு பமே தானுகி நிற்கவேண்டும்.

களிறு: 26. ஆக்கப்படாத ......

## 12. ஞானகுருவின் மேன்மை.

இனி இந்த உபாயத்தை அருளிச்செய்த குருவின் பெருமையை அருளிச் செய்கின்றூர்.

மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர்என் றுந்தீபற
தவத்தில் தலைவர்என் றுந்தீபற.

இ—ள்: மூலை இருந்தாரை—(மாதாவிடத்துண்டான சுரோணிதத்தினிலே பிதாவினிடத்துண்டாகிய சுக்கிலம் பவளப்பையில் முத்தை வைத்தாற் போலப்படுகிற நாளில் சீவனுனது பிராணவாயு வாகனமாகவும், மனம் வழியா கவும், சிவனுடைய ஆஞ்ஞையாலே சென்று, சுக்கில சுரோணிதத்தின் தலையிலே பதிந்து, கன்மத்துக்கீடாக மூன்றரைக்கோடியுரோமத் துவாரமும் எழுபத்தீராயிரம் நாடியும் வாயுவிற்பிரதானமான தசவாயுவும் நவத்து வாரமும் எண்சாணுடம்பும் ஏழுதாதுவும் ஆறுதாரமும் ஐந்து பொறியும் நாலுகரணமும் மூன்று மண்டலமும் இரண்டு வினையும் எனப்பெயர்பெற்று, இவற்றை ஒன்றெ னப் போர்த்த புறத்தோலுமாக ரூபிகரித்து, பிராரத்த மளவுந் தன்னுடைய தேகத்தில் உந்திச்சக்கரத்தின் மேலேகிடந்து, ஆறுமாதமுதல் உந்திநாளத்தாலே மாதா வினிடத்திலே அன்னரசமுங்கொண்டு, அவ்வன்னரசத்தின் மிகுதியாலே சுழுமுனைநாடி அடைபட்டு இடையும் பிங் கலையும் திறந்து, பிராணவாயு புகுந்து மேல் நோக்கி,

நாசித்துவாரங்களாலே விட்ட வெழுத்தாலே நாளொன்றுக்கு இருபத்தோராயிரத் தறுநூறு சுவாச உச்சாரணந் தோன்றி, முப்பத்திரண்டு நூருயிரத்து நாற்பதினுயிரம் உருச்சென்றவாறே உதரகன்மம் தொலைந்து, மாதாவிடத்துண்டான பிராணவாயுவிலே, தம்பிரானுடைய காருண்ணியத்தாலே சத்தி அதிட்டித்துக் கொண்டு, இந்தச் சத்தி பலத்துடனே வாயுவானது பிரஞ்ஞையைப் பூமியிலே பதிவிக்கவேண்டிப் பிரஞ்ஞாபத்தியமென்னும் பெயர் பெற்று, இவனுடைய போதம்போல இவனுடைய தேகமுங் கீழ்நோக்கி விழும்படி தன்னுடைய பலத்தாலே தலைகீழாகத் தள்ளிப் பூமியில் வந்தபின்பு, தேகத்துக்கடுத்த கன்மங்களாலே புசிப்புக்களைக் கருதி) இந்திரியங்களாகிய மூலைகளிலேயிருந்து விடயங்களைப் புசித்துப் புசிப்பொழிந்தால், இவனுடைய போதமானது கீழ்நோக்கிச் சாக்கிர முதல் அதீதமளவாக அவத்தைகளுக்கடுத்த தானங்களாகிய மூலைகளிலே அடைந்தும், இப்படி இரவு பகல் இந்த மூலைகளிலுண்டான இருளினுலே மறைந்து விகற்பித்து மயங்கியும், இப்படிப் பொய்ப்பிரகாசமான சுகதுக்கங்களில் அழுந்தாமல் கீழ்நோக்கின போதத்தை ஒழித்து, உண்மையையுணர்த்தி; முற்றத்தே விட்டவர்—மேலாகிய பிரகாசமான பரமாகாச வெளியிலே விழித்து பரபோகத்தில் அழுந்தும்படி கூட்டுவித்த உபாயகுரு; சாலப்பெரியர் என்று உந்தீபற—மிகவும் அளவிடப்படாத பெருமையையுடைய தம்பிரானுவார். தவத்தில் தலைவர் என்று உந்தீபற—அரிய தவத்திலே நின்று வழிபட்டவர்க்கு வேண்டும் வரங்களைக் கொடுக்க வல்ல கர்த்தாவுமாவார் என்க.

வி—ம்: சிவத்துக்கும் அவன் அருள்வழி நிகழும் பாசத்திற்கும் பொதுவாக அடிமைப்பட்டுக் கிடந்தபோது பவளப்பையில் முத்தை வைத்தாற் போன்ற கருப்ப வாசம் செய்ய நேரிடுகின்றது. பின் சிவன் ஆணையாற் சீவன் கருவிற் பொருந்துகின்றது. உதரகன்மந் தொலையும்போது,

சிவகாருண்ணியத்தால் மாதாவிடத்துள்ள பிராணவாயுவில் அதிட்டித்த சத்தியின் பலத்துடனே பிரஞ்ஞாபத்திய வாயுவால் தலைகீழாகப் பூமியிலே தள்ளப்படுகின்றோம். அப்போது நமது போதமும் தலைகீழாகின்றது.

1. மூலையிருந்தாரை:— எடுத்த தேகத்தின் புசிப்புக்கான வழியில் பஞ்சேந்திரிய விடயங்களையே புசிக்கின்றோம். இப்படியே நனவுநிலை, கனவுநிலையாதிய அவத்தைகளிலே அடங்கி விடுகின்றோம். இவ்வாறு ஆயுள் அளவும் இரவுபகல் மயங்கிப் பொய்ப் பிரகாசமான சுக துக்கங்களிலே அழுந்திக் கிடக்கின்றோம். இதுவே பொது அடிமைநிலை. நாம் இந்த நிலையிலிருந்ததையும், இருப்பதையும் மூலையிருந்தார் என்பது நினைவூட்டுதல் காண்க.

2. முற்றத்தே விட்டவர்:— மூலையில் அடைபட்டுக் கிடந்த நம்மை முற்றவப் பக்குவம் நோக்கி இறைவன் ஞான நெறியிலே செலுத்த முற்படுகின்றான். நமது இருவினையொப்பு மலபரிபாகநிலை கண்டு குருவடிவாக வந்து அருள் செய்கின்றான். வீடுபேற்றுக்குச் சிறந்த ஞானம், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் முறையில் அக்குருவினால் அருளப்படுகின்றது. நிட்டை கூடியதும் சீவன்முத்திநிலை ஏற்படும். அழுக்குநீக்கியபோது ஆடையினது வெண்மை ஆடைமுழுவதும் விளக்கினாற் போல உடம்பு நீங்கிய பரமுத்தி நிலையிலே தமது வியாபகம் முழுவதும் அறிவு விளங்கப்பெற்று முதல்வனோடு ஒத்து நிற்பர். ''பாலர் உன்மத்தர் பிசாசரில்'' எனச் சங்கற்ப நிராகரணம் இவர்களுக்கு உவமை கூறுகின்றது. இவ்வாறு உண்மையை உணர்த்தி மேலாகிய பிரகாசமான பரமாகாச வெளியிலே விழித்துப் பரபோகத்தில் அழுந்தும்படி கூட்டுவித்தவர் உபாயகுருவேயாவர். முற்றம்—மேலான பிரகாசமுள்ள பரமாகாசவெளி.

3. சாலப் பெரியர்:—இந்த ஞானகுரு அளவிடப்படாத பெருமையையுடைய சிவமேயாவர்.

4. தவத்தில் தலைவர் என்று உந்தீபற: ஞானமார்க்கத்தே கேட்டலாதி முறைகளில் சற்குரு கடாட்சத்தால் நிலைக்கப் பெற்றவர், அரிய தவத்தில் நிலைக்கப்பெற்றவராவர். தம்மை வழிபட்டார்க்கு வரந்தரும் தலைமையும் இவர்களுக்கு உண்டாகும்.

பொழிப்பு: பஞ்சேந்திரியங்களிடமாக ஒடுங்கி நனவு கனவு முதலிய அவத்தைகளிலே அடங்கிப் பொது அடிமை நிலையிலிருந்தாரை உபதேச முறையில் உண்மையை உணர்த்தி, மேலாகிய பிரகாசமான பரமாகாசவெளியிலே பரபோகத்தில் அழுந்தவைத்த ஞானகுரு அளவிடமுடியாத பெருமையுடையவர்; தம்மை வழிபட்டார்க்கு வேண்டும் வரந்தரும் தலைமையும் இவருக்கு உண்டாகும்.

களிறு: 27. காண்கின்ற .. 28. பேசாமை ..

## 13. ஆன்மபோதக் கரைவு—சிவரூபம்.

இப்படிச் சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாத பொருள் கூடுகைக்கு ஓரிடமுண்டென்று அருளிச் செய்கின்றார்.

ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற் றிடஞ்சிவம் உந்தீபற
தேடும் இடமதன்று உந்தீபற.

இ—ள்: ஓட்டற்று நின்ற—தனக்கொரு போக்குவரவின்றியே ஒழிவற நிறைந்து சலிப்பற நிற்கிற; உணர்வு முட்டி—ஞானத்தை ஆன்மாவின் கண்ணுகக் கூடி; பதி—அந்த ஞானமேயாய்; தேட்டற்ற இடம் சிவம் உந்தீபற—(அந்த ஞானத்தின் ஐக்கியத்தாலே கூடினேம் என்கிற விகாரமும் அந்த ஞானமுஞ்) சேரக் கரைந்த இடந்தானே சிவரூபமாம்; தேடும் இடம் அது அன்று உந்தீபற—(இந்த இடம் போதங் கரைந்த விடத்திலே பிரகா

சிக்குமது ஒழிந்து ஆன்ம போதத்தாலே) ஆராய்ந்து அறியத்தக்க இடமன்று என்க.

வி—ம்: 1. ஒட்டற்று நின்ற உணர்வுமுட்டி:- ஒட்டற்று—போக்கு வரவு ஆகிய அசைவற்று. நின்ற உணர்வு என்பது ஒழிவற நிறைந்து அசைவற நிற்கின்றஞானத்தை. ஆன்மா விடயங்களில் ஓடும் பொது இயல்பு அகன்று, கருவி கழன்றும் கழற்ற முடியாதிருக்கும் ஞானத்தை எய்தும். இதுவே ஆன்மாவின் சிறப்பியல்பு. இதனையே வள்ளுவர், ''சார்பு உணர்ந்து'' என்றார். முட்டி—ஆன்மா தனக்குக் கண்ணுகக் கூடி.

ஆன்மாவிற்கு வியாபக அறிவுள்ளது. ஐம்பொறிகள் சிவரூபக்காட்சி எய்துவிக்கும் பக்குவமற்றன. இப் பக்குவ நிலையை ஞானகுரு தெளிவிக்க ஆன்மா பெறுகின்றது. அவ்வாறு அதிதீவிர பக்குவநிலை எய்திய உயிர் சிவனருள் வழிநின்று அவனது காணும் உபகாரத்தோடு ஒன்றுபடுகின்றது.

2. பதி—உயிர்க்கு உயிராய் நின்று காக்கும் பொருளாய ஞானமயமாய். பதி என்பது பதியினது திருவடி ஞானத்திற்காயிற்று.

3. தேட்டற்ற இடம் சிவம்—சிவஞானத்தின் ஐக்கியத்தாலே கூடினேம் என்கின்ற விகாரமும் எய்தாது; பசுஞானமும் கரைந்துவிடும். இவ்விடமே சிவரூபமாம். பாசஞானத்தடை நீங்கியதும் ஆன்மா பதிஞானத்தை அணையும். இதன்மேல் தேடுதலும் தேட்டக்கருவிகளும் தேவைப்படா. ஆதலின் தேட்டற்ற இடம் சிவம் என்றார். ''என் செயல் மாண்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'' என்ற திருவாசகம் தேடுதலற்ற இடத்தைச் சுட்டி விளக்குகின்றது.

4. தேடுமிடமதன்று—அது தேடும் இடம் அன்று—சிவரூபம் கருவிகளோடு கூடிய பாசஞான பசுஞானங்களாலே தேடிக் காணக்கூடியதன்று.

பொழிப்பு. ஆன்மா ஒழிவற நிறைந்து அசைவற நிற்கின்ற ஞானத்தைத் தனக்குக் கண்ணுகக் கூடி ஞானமேயாய்ச் சிவனது காணும் உபகாரத்தோடு ஒன்றுபடுகின்றது. இவ்வாறு ஒன்றுபட்ட சிவஞானத்தின் ஐக்கியத்தால், ஐக்கியமானேம் என்ற விகாரமும் எய்தாது, பசுஞானமுங் கரைந்து விடும். இவ்விடமே சிவரூபமாம். இது பசு பாச ஞானங்களாலே தேடிக்காணக் கூடியதன்று.

களிறு: 29. ஒட்டற்று.

## 14. அருட்சத்திப் பிரகாசம்.

இந்த இடத்தைத் தேசிகனுலே அறிந்தே அவன் அறிவித்த உபாயத்திலே அவதிகூடாமற் கூடவே சிவம் பிரகாசிக்கும் முறைமையை மேல் அருளிச் செய்கின்முர்.

கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை உடனேநின் றுந்தீபற
உன்னையே கண்டதென் றுந்தீபற.

இ—ள்: கிடந்த கிழவியை—(ஆன்மாவை அநாதியே) பொருந்திப் போதுகிற (அருளாகிய) சிவசத்தியை; கிள்ளி எழுப்பி—ஆசாரியன் கடாட்சத்தாலே பிரகாசிப்பிக்க; உடந்தை உடனே நின்று உந்தீபற—அந்த ஞானத்துடனே கூடி அந்தமயமேயாய் நிற்பாய்; உன்னையே கண்டது என்று உந்தீபற—(அப்படி நிற்கவே சிவமானது) உன்னையே கண்டு கிரகித்துக் கொள்ளா நிற்கும் என்க.

வி—ம்: 1. கிடந்த கிழவியை: கிடந்த—அநாதிகேவலந் தொடங்கியே ஆன்மாவோடு கூடியிருந்த, கிழவி—உரிமையுடையவள், பழைமையானவள் என்ற பொருளில் அருளாகிய சிவசத்தியைக் குறித்தது.

2. கிள்ளி எழுப்பி என்பது, ஆசாரியன் மெய்யுணர்வு உண்டாதற் பொருட்டுச் செய்யும் தீட்சையாகிய செயலைக் குறித்தது.

3. உடந்தை உடனே நின்று: அந்த அருளுடனே கூடி விரிந்து பரந்த சொரூபத்திற் கலந்து அருள் மய மாய் நிற்பாய். உடந்தை—திருவருள்.

4. உன்னையே கண்டதென்று உந்தீபற—அருளாணை வழியிலே சிறிதும் முனைப்பற்று நடப்பாயாயின் சிவம் உன்னையே முற்றிலும் ஆட்படுத்திக் கொள்ளும். அதா வது காணும் உபகாரத்தை எப்பொழுதும் உனக்கு அரு ளும். முத்திநிலையிற் காண்பான் சிவனே.

பொழிப்பு: ஆன்மாவினை அநாதியே பொருந்தி உடன் போதுகின்ற அருளாகிய சிவசத்தியை ஆசாரியன் தனது கடாட்சத்தால் ஆன்மாவிடம் பிரகாசிக்கச் செய்கின்றான். அவ்வருட்சத்தியின் ஆணைவழியே செல்லுதலே ஞானம் எனப்படும். அந்த ஞானமாய் உன்னை ஆக்கி அருள் ஆணை வழியே நடக்க வைத்திருக்கின்றான் ஆசாரியன். நீ தன் முனைப்புச் சிறிதுமின்றி ஆசாரியன் காட்டிய அந்த ஞான வழியில் நடப்பாயாயின் உன்னை ஆட்படுத்திக் கொண்டு, காணும் உபகாரத்தைச் சிவம் எப்பொழுதும் அருளிச் செய்யும்.

களிறு: 31. உணராதே.

## 15. பற்றறுதல்.

மல மாயா கன்மங்களைப் போக்குகிற ஞானத்தை ஆசாரியன் கடாட்சத்தாலே இவன் பற்றவே அப்பொ ழுதே சிவன் இவனைப் பற்றினேமென்கின்ற நினைவையும் அறுத்துத் தானாக்குவன் என்னும் முறைமையை அருளிச் செய்கின்றார்.

பற்றை அறுப்பதோர் பற்றினைப் பற்றில் அப்
பற்றை அறுப்பர்என் றுந்தீபற
பாவிக்க வாரார்என் றுந்தீபற.

இ—ள்: பற்றை அறுப்பதோர்—(தேகேந்திரிய பிராணவாயு அந்தக்கரணங்கள் முதலாயுள்ள) பற்றுக்களை அறுக்கத்தக்க; பற்றினைப் பற்றில்—திருவருளை (ஆன்மாப்) பொருந்தி (அந்த ஞானமேயாய்) நிற்கில்; அப்பற்றை அறுப்பர் என்று உந்திபற—அப்பொழுதே ஞானமாய் நிற்கிறேமென்கிற பற்றையும் அறுத்துச் சிவன் தானாக்கியே விடுவன்; பாவிக்க வாரார் என்று உந்திபற—(அல்லது சிவனைத்) தியானித்(துக் கூடவேண்டுமென்று விசாரி)க்கில், அவன் ஒரு காலமுங் கூடப்படான் என்க.

வி—ம்: 1. பற்றை அறுப்பதோர் பற்றினைப்பற்றில்:- பற்று—ஒரு பொருளை இழந்த பின்னரும் அப்பொருளில் நீங்காது நிகழும் விடாவிருப்பம். இதுவே அவா எனப் படும். அறுப்பதோர் பற்று—மனம் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றும் இயல்பினது. பாசப்பொருள்களைப் பற்றில் அப் பற்று மிகும். பரிசுத்தமான சிவனடியை இடையறாது பற்றில் பாசப் பற்றறும். ''பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு'' என்ற திருக்குறள் இதனை விளக்குகின்றது. பாசம், பற்று நீக்கத்தில் சிவனடியைப் பற்றி நிற்றலால் அது சிவப்பேறு எனப்படும்.

அப்பரடிகள் 'அருந்துணையை' என்னும் தாண்டகத்தில், ''பொருந்தணைமேல் வரும் பயனைப் போகமாற்றி'' என்ற தொடரில் 'போக' என்ற சொல்லால் பொருளின் நீக்கத்தையும். 'மாற்றி' என்ற சொல்லால் பொருட்பற்றின் நீக்கத்தையும் அருளிச் செய்தமை காண்க.

2. அப்பற்றை அறுப்பர்: சிவத்தைப் பற்றி சிவம் நான் எனச் சிவோகம்பாவனை செய்பவனுடைய அறிவில் சிவன் வேறற விளங்கித் தோன்றுவன். அங்ஙனம் தோன்றுஞ் சிவனருளால் உயிர் அநாதியாய்க் கூடிநின்ற ஆணவ மலத்தை நீக்கி, ஞானமயமாய் நிற்கின்றேம் என்னும் பற்றையும் அறுத்து விடும்.

3. பாவிக்க வாராார் என்று உந்தீபற: சிவம்நான் என்னுஞ் சிவோகம் பாவனையல்லாத பிறபாவனைகளால் ஆணவமலப் பற்றறுந்து சிவன்வேறற விளங்கித் தோன்றுன்.

''ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்'' என்ற திருக்குறள் இச்செய் யுளின் கருத்தை விளக்குகின்றது.

பொழிப்பு: பாசப்பற்றினை அறுக்கத்தக்க சிவனடியை ஆன்மா இடையறுது பொருந்தி அந்த அருள்மயமாய் நிற்கில் அப்பொழுதே சிவன் பாசத்தையும், ஞானமாய் நிற்கின்றோம் என்ற பற்றையும் அறுத்து வேறற விளங்கித் தோன்றுவான். சிவோகம்பாவனையல்லாத போலிப் பாவனைகளால் மலப்பற்றறுது; சிவன் வேறற விளங்கித் தோன்றவும்மாட்டான்.

களிறு: 30. பற்றினுட்பற்றை...... .

## 16. மவுனநிலை

இப்படிக் கூடி நின்றவர்கள் ஒன்றிலும்பற்ருமல் நிற்கும் முறைமையை அருளிச் செய்கின்ருர்.

உழவா(து) உணர்கின்ற யோகிகள் ஒன்ருேடும்
தழுவாமல் நிற்பர்என் றுந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற.

இ—ள்: உழவாது உணர்கின்ற யோகிகள்—(உணர்த்தும் முறைமையினும் அவத்தையினும் அழுந்தாமல்) சிவனது ஞானத்தாலே சிவனைத் தரிசிக்கின்ற சிவயோகிகளுக்கு; ஒன்ருேடுந் தழுவாமல் நிற்பர் என்றுஉந்தீபற — (பிராரத்தத்தாலே கன்மங் கூடிற்ருயினும் திருவடிஞானங் கண்ணுக நிற்கையாலே) ஒரு விடயத்திலுந் தழுவியிரார்கள்; தாழ்மணி நாவேபோல் உந்தீபற —தாழ்ந்த நாவை

யுடைய மணிபோல அசைவும் ஆரவாரமும் அற்றிருப்பார்கள் என்க.

**வி—ம்:** *1.* சிவயோகம்—மனம் வாக்குக்கு எட்டாத சிவத்தை ஞானக்கண்ணுற் கண்டு கூடிச் செயலற்று இருத்தல். உரையிறந்து சிவனுடனே வேறறக்கலந்து நின்ருர் சிவயோகர்.

*2.* உழவாது உணர்கின்ற யோகியர் — சிவயோகர் உணர்த்தும் முறைமை, அவத்தை ஆதிகளில் அழுந்தாமல் ஒருமையுடன் சிவனைத் தரிசிப்பர்.

*3.* ஒன்ருேடும் தழுவாமல் நிற்பர்—பிராரத்தத்தாற் கன்மம் தாக்கியபோதும் திருவடிஞானம் கண்ணுக நின்று, ஆன்ம போதத்திற்கு இடங்கொடாது. இருவகைப்பற்றும் அற்று, சிவங்காணச் சிவயோகர் சிவாநந்த அநுபவத்தில் அழுந்துவர்.

*4.* தாழ் மணிநாவே போல்:- தாழ்மணி—தொங்காமல் தரையில் வைக்கப்பட்டமணி. தொங்கிக்கொண்டிருக்கும் மணியின் நா அசையும்; ஓசை எழுப்பும். ஆனல் தாழ்மணியின் நாக்கு அசையாது; அதனுல் ஓசையும் எழாது. அதேபோன்று, உலக விடயங்களைப் பற்றித் தொடர்ந்து கிடக்குமளவும் மனம் வாக்குக் காயங்கள் தொழிற்படும்; அதனுல் அவத்தையும் நிகழும். அவ்வாறு இன்றிச் சிவத்தைப்பற்றித் திருவடி ஞானமே ஞானமாகக் கரைந்து கிடந்தால் மனமாதி மூன்றும் அசைவற்று மவுனமாகிவிடும். நிராதாரயோகம் நிலைப்பதற்கு உபாயம் மவுனயோகமேயாம். முக்கரணங்களுள்ளும் வாய்பேசாமையையே பெரும்பாலும் மவுனம் என்பர். ''சும்மாவிரு சொல்லற'', ''சும்மாவிருக்கின்ற திறமரிது'' என்ற ஆன்ருேர் வாக்குகள் மவுன நிலையை விளக்குகின்றன.

**பொழிப்பு:** சிவயோகர், ஆன்ம அறிவு பலவகைப்பட்டு ஒருமையுருமையின் சிவஞானத்திலே தம்மறிவு

கரையப்பெற்று, அச்சிவஞானத்தாற் சிவனைத் தரிசிப்பர். பிராரத்தத்தாற் கன்மங் கூடினும் அசைவற்ற நாவையுடைய மணிபோல விடயங்களில் அசைவும் ஆரவாரமும் அற்று இருப்பர்.

களிறு: 32. அறிவறிவாய்.

17. சிலம்பொலி

இப்படிக் கூடுங்காலத்து நடுவே ஓருகுறி நிகழும் என்பதும், நிகழ்ந்தாற் செய்யும் பரிகாரமும் அருளிச் செய்கின்றார்.

திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற.

இ—ள்: திருச்சிலம்பு ஓசை—(தம்பிரானார் திருவுள்ளத்தடைத்த ஆன்மாக்கள் கருவி கரணாதிகளாலுள்ள ஆரவாரங்களைக் கடாட்சத் துணையாகவே ஓட்டி வெற்றியுடனே திருவடிசேரச் செல்லுங்காலத்து, இராசாவின் குமாரன் மறுதலையான மாற்றானை ஓட்டி வெற்றியுடனே தன்னுடைய பதியைச் சேரச் செல்லுமளவில் இராசாவின் அருகு நின்ற வாச்சியங்கள் எதிர்கொள்ளுந் தன்மைபோல, அநவரதமும் பரமாநந்த நிருத்தம் பண்ணியருளா நின்ற) தம்பிரானார் திருவடிக்குச் சிலம்பும் ஓசையுமான பரவிந்து பரநாதம் (அடியார் பிறவித் துக்கங் கெடும்படி ஆரவாரியா நிற்கும்); ஒலி வழியே சென்று—இந்தப் பரநாத வழியே சென்று; நிருத்தனைக் கும்பிடு என்று உந்தீபற—பரமாநந்த நிருத்தம் பண்ணியருளா நின்ற தம்பிரானை (உன்னுடைய போதங் களைவதற்கு)த் தொழுவாயாக. நேர்பட அங்கே நின்று உந்தீபற—(மயக்க விகற்பம் என்று சொல்லப்பட்ட உட்பக்க வழிகளாகிய கள்ளர் அடிப்பாட்டையிற் சென்று தட்டுப்படாமல்) நல்லடிக்குச் செல்லுகிற செவ்வை வழியே சென்று என்க.

வி—ம்: *1. ஒலி(க்கும்) திருச்சிலம்போசை வழியே சென்று, நேர்பட அங்கே நின்று நிருத்தனைக் கும்பிடு என்று கொண்டுகூட்டிப் பொருள்கொள்க.*

*2. ஆன்மா கருவி கரணாதிகளிலுள்ள ஆரவாரங்களை ஒட்டுதலுக்கு அரசகுமாரன் மாற்றானை ஒட்டுதல் உவமை; ஆன்மா இறைவன் திருவடி சேரச்செல்லும்போது திருவடிச்சிலம்பு ஒலித்தலுக்கு அரசகுமாரன் தன் பதியைச் சேரச் செல்லும்போது பேரரசனின் அருகில் நின்ற வாத்தியங்கள் ஒலித்தல் உவமை.*

*3. பரவிந்து—சிலம்பு; பரநாதம்—ஓசை. சிலம்போசை —திருவருள் ஞானம். சிலம்போசை கேட்கும் உண்மையை ''ஆடற் சிலம்பின் ஒலிகேளா'' (திருத்தொண்டர் புராணம் கழறிற்றறிவார்) என்ற தோத்திரத்திலும், ''இலங்கும் விந்துப் பகர்வரிய உணர்வாகி ஒளியாய் உள்ள பான்மையினால் ஒரு நாதம் படருந்தானே'' (சிவப்பிரகாசம்) என்ற சாத்திரத்திலும் காண்க.*

*4. ஓசை வழிச்செல்லல் நின்மல துரியம்; நின்று கும்பிடல் துரியாதீதமாகிய நிட்டை. நிருத்தன்—ஐந்தொழிற் கூத்தன். ''எண்தோள் வீசி நின்றாடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ'' என்ற அப்பர் தேவாரத்திலும் நிருத்தனைக் கும்பிடல் விளக்கப்படுகின்றது. மயக்க, விகற்பங்கள்—கவலை; கவலையைத்தரும் கவர்த்த—அயல்வழிகள். நேர்பட நின்று—நற்றாள் தொழுதற் கேற்ற சிவஞான நெறியிற் சென்று.*

*5. சிலம்போசை காட்டி இறைவன் நேரே அழைத்து அருளுகின்றமையை ''பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி'' என்ற சிவஞான போதம் பத்தாஞ் சூத்திரத்தும் காண்க.*

பொழிப்பு: *நிராதார யோகஞ் செய்யும் உனக்கு இறைவன் திருவடிக் கண்ணுள்ள (பரவிந்து வடிவான சிலம்பினுள் பரநாத வடிவான பரல்கள் எழுப்பும்) சிலம்*

பின் ஒலிகேட்கும். (மயக்க விகற்பங்களையுடைய அயல் வழிகளிலே செல்லாது) அப்பரநாத வழியாகிய சிவஞான வழியிற்சென்று ஐந்தொழிற் கூத்தனைத் தொழுவாயாக.

களிறு: 33. ஓசையெலாம் அற்றால்.

## 18. திருவருளை மறவாமை

இப்படித் திருவடிக்குச் செல்லுகிற வழிக்கு விரோதமாகிய மயக்க விகற்பங்கள் ஒரு காலமும் பொருந்தாதபடி தம்பிரானார் திருவருளை மறவாதிருக்கவென்று அருளிச்செய்கின்றார்.

மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே உந்தீபற
அதுவேயிங் குள்ளதென் றுந்தீபற.

இ—ள்: மருளும் தெருளும் மறக்கும்—(உனது அநுபூதிக்கு விரோதமாகிய) மயக்க விகற்பங்கள் ஒருகாலமுங் கூடாதன; அவன்கண் அருளை மறவாதே உந்தீபற—அஃது எதனால் என்னில், உனக்குக் கண்ணாகிய சிவனருளை ஒரு காலமுங் கைவிடாமற் கூடிநிற்கில்; இங்கு உள்ளது—இவ்விடத்திற் செய்யவேண்டும் காரியமும்; அதுவே என்று உந்தீபற—அதுவேயொழிந்து வேறொன்றுமில்லை என்க.

வி—ம்: 1. மருள்—மயக்கம். யான் எனது என்று கருதப் பண்ணுவது; இது ஆன்ம போதம்; சிவத்தோடு வேறற நிற்றலை அறியாமை; மறப்பு; கேவலம்.

2. தெருள் — விகற்பம். தேக போகங்களில் விருப்பு வெறுப்புக்களைச் செய்வது; மாயையை அறியும் அறிவு; நினைப்பு; சகலம். மறக்கும்—அற்றுப்போம்.

3. அருளை மறவாதே—சிவனருளேசிவனை அறியுங்கண். சிவனருளால் அறியப்படுவதே சிவசொரூபநிலை. இச்சிவ சொரூபநிலையே நிராதார யோகப்பயன். இதனால் வருவதே சிவபோகம்.

4. அதுவே இங்குள்ளது: சிவனருளே கண்ணுகச் சிவமே பார்த்திருப்பது ஒன்றே உள்ளது. இதுவே நிட்டை. இது கைவரப் பெற்ருேர் பரமேபார்த்திருப்பர். காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்ற பேத ஞானம் தீரப் பெற்ற சீவன்முத்தர் பிராரத்துவ வாதனைப்படார். ஆதலின் பதார்த்தங்கள் பாரார்; பிராரத்த வாதனை பற்றறக் கழியும் என்றபடி.

''பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர்விருத்தப் பாதி போதும்'' எனக் குருஞானசம்பந்தர் சிவபோகசாரத்திலே போற்றிப் புகழ்ந்த,

''அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினுன் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயின்''

என்ற சிவஞான சித்தியார் (எட்டாஞ்சூத்திர இரண்டாம் அதிகரணப்பாதிக) விருத்தம் ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

**பொழிப்பு:** நீ உனக்குக் கண்ணுகிய திருவருளை ஒரு காலமும் நீங்காது (மறவாது) கூடிநில். அவ்வாறு நின்ருல் உனது சிவாநந்த அநுபவத்துக்கு விரோதமாகிய மயக்கமும் விகற்பமும் ஒரு காலமும் உன்னைக் கூடா. இவ்விடத்தில் நீ செய்யவேண்டியது (சிவனருளே கண்ணுகச் சிவமே பார்த்திருப்பதாகிய) அஃது ஒன்றுமேயாம்.

களிறு: 34. சார்புணர்ந்து.

## 19. சிவவெளிப்பாடு.

இப்படி அருளிலே இடைவிடாமல் நின்ருல் சிவம் பிரகாசிக்கும் விரைவை அருளிச் செய்கின்ருர்.

கருது வதன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன அரியனென் றுந்தீபற.

இ—ள்: கருதுவதன்முன்— (இப்படி அருளிலே இடைவிடாமல் நின்றவன் இந்த அருளினுலே சிவனைக் கூட வேண்டுமென்று) விசாரிக்கும் அளவில்: கருத்து அழிய பாயும்— (இவன் கருத்துக்குக் கருத்தாய் நிற்பது திருவருளே ஆகையாலும், இவனுக்குத் தனித்து ஒரு கருத்தில்லாது ஒழிகையாலும், [குகையில் உருக்கின செம்பிலே குளிகை பாய்ந்த அளவில் செம்பும் காளிதமும் அறப் பொன்னும் மாற்றுமாய் இருந்தாற்போல] இவன் கருதிய அப்பொழுதே இவனையுங் கிரகித்துக்கொண்டுஇவனுடைய) கருத்தையும் ஒழித்துத் தானும் தன்னுடைய கருத்துமாய் நில்லா நிற்பன்; ஒருமகள் கேள்வன் என்று உந்தீபற— ஒப்பில்லாத சத்தியஞான சத்தியினை அநவரதமும் பொருந்திக்கொண்டிருக்கத்தக்க நாயகன். உன்ன அரியன் என்று உந்தீபற— (ஆகையால் இப்படியன்றி ஆன்ம போதத்தால் எக்காலமும்) நினைந்து கூட அரியனுயுள்ளவன் என்க.

வி—ம்: 1. ஒரு மகள் கேள்வன், கருதுவதன் முன் கருத்தழியப் பாயும்; உன்ன அரியன் எனக் கூட்டுக.

2, கருதுவதன்முன்: கருதுதல்—அருளின்ற் சிவனைக் கூட நினைத்தல். விசாரித்தல்—ஆராய்தல். கருதுவதன் முன்—கருதிய அப்பொழுதே என்றபடி.

3. கருத்து அழியப் பாயும்: ஆன்ம போதங்கரையக் கரைய ஆன்மாவுக்கு ஒரு கருத்தும் இல்லாது ஒழிந்து போகும். குகையில் செம்பை உருக்கிவைத்தாற் போன்ற நிலை இது. கருதுபவனின் கருத்துக்குள்ளே கருத்தாய் நிற்கும் திருவருள் வெளிப்படும். உருகிய செம்பில் இரச குளிகை சேர்ந்ததுபோன்ற நிலை இது. திருவருளை மறவாது நிற்க, ஆன்ம அறிவுக்கு அறிவாய் நிற்கும் சிவன் வெளிப்பட்டு ஆன்மாவைக் கிரகிப்பான், ஆன்மா சிவமாகும். சிவம் இவ்வாறு ஆன்மாவைக் கவர்ந்துகொண்டதோடமையாது ஆன்மாவின் கருத்தையும் ஒழித்துத்

தானும் தன்னுடைய கருத்துமேயாகி நிற்கும். இது குளிகையால் செம்பு களிம்பு நீங்கிச் செம்பொன்னும் மாற்றும் ஆவது போன்றநிலை.

4. ஒரு மகள் கேள்வன்—சிவமும் சத்தியும் பிரிப்பின்றி நிற்றலைக் குறித்தது. ஞானசத்தியையுடைய சிவம் என்றவாறு. ஞானம்—அருள். சிவம் அருளைத் தனக்குக் குணமாகவும் பிழம்பாகவும் கொண்டுள்ளது.

5. உன்ன அரியன் — சிவன் ஆன்ம ஞானத்தால் நினைந்து கூடுதற்கு அரியவன்.

''தோன்றி நின்ற, சிற்பரமதனுல் உள்ளச் செயலறுத்திட உதிக்கும் தற்பரம்'' என்பது சிவப்பிரகாசம்.

பொழிப்பு: ஒப்பில்லாத ஞானசத்தியின் நாயகராகிய சிவன், ஆன்மா அருளிலே இடைவிடாமல் நின்று, அவ்வருளாலே தன்னைக்கூட நினைந்த அப்பொழுதே அவ்வான்மாவைக் கவர்ந்துகொண்டு, ஆன்மாவின் கருத்தையும் ஒழித்து, தானுந் தன்னுடைய கருத்துமேயாகி நிற்பான். ஆகையால் சிவன் திருவருளால் அன்றி ஆன்ம போதத்தால் எக்காலமும் நினைந்து கூட அரியன் என்க.

களிறு: 35. அன்றி வரும் ஐம்புலனும்.

## 20. இடையறு இன்ப அநுபவம்

இப்படிக் கொத்த உண்மைப் பொருளைப் பெற்ற காலத்து இடைவிடாதே நின்று அநுபவிக்க வேண்டும் என்று அருளிச் செய்கின்றார்.

இரவு பகலில்லா இன்பவெளி யூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற

இ—ள்: பகல் இரவு இல்லா—உணர்ந்த காலத்து மாயையும், ஒடுங்கின காலத்து ஆணவமும் கூடாமல்;

இன்பவெளி யூடே—ஞானமும் ஆநந்தமுமே பிரகாசிக்கத்தக்க பரமாகாசத்திலே; விரவி விரவி நின்று உந்தீபற—கூடிப்பொருந்தி நின்று அனுபவிக்க. விரைய விரைய நின்று உந்தீபற—(தேசிகனுலே) அறிந்தோமாகில், (பின்பே சாதித்துக் கொள்ளுகிறேம் என்று முன்புள்ள வாசனையின் மிகுதியாலே, பேய்த்தேர்போன்ற விசுவத்தையும், விசுவாதீதமான தேகத்தையும், ஒரு நிலை நில்லாத மனுதிகளினுடைய சிக்கென்றவைகளையும் மெய்யெனக் கருதிச் சனன மரணங்களிலே அடையாமல் பரமாநந்தத்திலே கூடிநின்று இளைப்பாறும்படி) மிகவிரைந்து கூடுவாயாக என்க.

வி—ம்: 1. இரவு பகல் இல்லா இன்ப வெளியூடே: இரவுபகல்: i. பூத ஆகாயத்தில்:- பகல்=விழிப்பு=மாயையின் வசப்படல்=சகலம். இரவு=உறக்கம்—ஆணவத்தின் வசப்படுதல்=கேவலம். பிறப்பு இறப்பைத் தரும் துன்ப வெளியே இப்பூத ஆகாயம்.

ii. ஞான ஆகாயத்தில்:- விழிப்பு—ஞானம்; உறக்கம்—ஆநந்தம். தூல, சூக்கும, காரண சரீரங்களின் தத்துவங்கள் அகன்றநிலை; ஞானமேயாய் நின்று பெறும் உண்மைநிலை. ''இராப் பகலற்ற இறையடி இன்பத்து'' என்ற திருமூலர் வாக்குங்காண்க.

2. விரவி விரவி நின்று உந்தீபற:- இன்ப அநுபவக் கலப்பு நீங்க விடக்கூடாது. அதாவது அதைவிட்டு நீங்கித் திரும்பவும் பிரபஞ்சவாதனைப்படக்கூடாது. விரவுதல்—கலத்தல். சிவத்தோடு ஆன்மாவின் கிரியாசத்தி கலந்து நிற்றல் என்பர்.

3. விரைய விரைய நின்று உந்தீபற:- அடுக்கு விரைவின் மிகுதி குறித்தது. சிவாநந்தத்திலே மிகவிரைந்து கூடிநில் என்றவாறு. விரைவு ஆன்மாவின் இச்சை சிவத்தை இடையீடின்றிப் பற்றுதல் என்பர். இப்பக்குவநிலை எய்தி

யவன் விரைந்து அவ்வாநந்த அநுபவத்திலே கூடி நிற்கவேண்டும். பிரபஞ்ச வாசனையில் பழக்கமிகுதியால் மனம்பற்றி மறுபடியும் இப்பிரபஞ்சப் பொருள்களையும், உடம்பையும், மனுதிகளுடைய பிடிப்பையும் மேற்கொள்ளுவானுயின், இந்நிலையினின்றும் இழிந்து பிறவித்துயரில் ஆழ்வான்; எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தல் நிகழுமன்றி இளைப்பாறல் நிகழாது. இன்பவெளியிலே கூடுதலுக்கு விரைய வேண்டும் என்பதை ''அந்நெறி கூடச் சென்றலும் ஓடினேன்'' என அப்பர் கூறியருளுதலுங் காண்க.

4. i ஆன்மா இருப்புக்கெடாது, முதன்மை கெட்டு, தன் அறிவு இச்சை செயல்கள் பேரருளில் அடங்கச் சிவத்தோடு கலந்து இன்புறும் நிலையாகிய பரமுத்திநிலை இச் செய்யுளிலே கூறப்பட்டது.

ii. இந்நிலையையே மெய்கண்டார், ''அயரா அன்பின் அரன்கழல் செலுமே'' என்ருர்.

விசுவம்—உலகம்: சிக்கென்றவை—பிடிப்பு.

பொழிப்பு: (சுத்த நிராதார யோகநெறி நின்ற) நீ ஆணவமும் மாயையுங் கூடும் கேவலமுஞ் சகலமுமற்ற சுத்த ஞானமும் ஆநந்தமும் பிரகாசிக்கத்தக்க பரமாகாசத்திலே கூடிப் பொருந்தி நின்று அழுந்தி அநுபவித்துக் கிடப்பாயாக. இதை அறிந்தும், (முன்புள்ள பழக்க வாசனைபற்றிப் பிரபஞ்சத்தை மெய்யெனக் கருதின் பிறவித்துயரில் அழுந்துவாய். ஆதலின் பரமாநந்தத்திலே கூடிநின்று இளைப்பாறும்படி) மிக விரைந்து கூடுவாயாக.

களிறு: 36. உண்டெனில். 37. தூல உடம்பாய.

21. ஆன்ம போநத்தப்பாலாம் அம்பிகைபாகன்.

இப்படிக் கூடத்தக்க சிவம் ஆன்மபோதத்தால் உளதென்னும் பொருளினும் இலதென்னும் பொருளினும்

அன்றியே உண்டான பொருள் என்று அருளிச் செய்கின்றார்.

> சொல்லும் பொருள்களும் சொல்லா தனவு [மங்கு
> அல்லனாய் ஆனன்என் றுந்தீபற
> அம்பிகை பாகனென் றுந்தீபற.

இ—ள்: சொல்லும் பொருள்களும்—வாக்கால்(அளவு படுத்தி) உரைக்கத்தக்க (சொரூபாதிகளாய் உள்ள பொருள்களும், சொல்லாதனவும்—(வாக்கால்) உரைக்கப்படாத (முயற்கோடு போன்ற இல்லாத) பொருள்களும்; அங்கு அல்லனாய் ஆனன் என்று உந்தீபற—(இவை இரண்டும்) அல்லாதவனுமாய், (வாக்கு மனாதீதத்திலே நின்று உணரத்தக்க சுபாவ சொரூபியாய்) உள்ளான் ஒருவன். அம்பிகைபாகனென்று உந்தீபற— (அவனே) காருண்ணிய சத்திக்கு நாயகனாகிய கருத்தா என்க.

**வி-ம்.** 1. சொல்லும் பொருள்கள்—சொல்லால் அளவுபடுத்திச் சொல்லத்தக்க வடிவம் முதலியன உள்ள சுட்டி அறியும் குடம், ஆடை ஆதிய உள்பொருள்கள். அவை மாயையின் காரியங்கள் ஆதலின் நிலையில்லாத பொய்ப் பொருள்கள்.

2. சொல்லாதன—சொல்லாற் சொல்லப்படாத முயற்கொம்பு, ஆகாயப்பூ போன்ற சுட்டியறியப்படாத இல்பொருள்கள்.

3. அல்லனாய்—உள்பொருள், இல்பொருள் ஆகிய அவ்விருவகைப் பொருள்களும் அல்லாதவனுமாய். இவ்விருவகைப் பொருள்களும் நிலையில்லாதன.

4. ஆனன்—மனம் வாக்கைக் கடந்து நின்று பதிஞானத்தால் உணரப்படும் வேறொரு தன்மையன் ஆனன். சிவஞானபோதம் 6ஆம் சூத்திரம் - "உணருரு அசத்தெனின்" . காண்க.

5. அம்பிகைபாகன்—அருட்சத்திக்கு நாயகனுகிய தலைவன். நம்மேற்கொண்ட அருளினுலேயே பெத்த நிலையிலும் முத்திநிலையிலும் உயிரோடு பிரிப்பறக்கலந்து நிற்கின்ருன். அவ்வாறு நிற்கும் அருளினுலேயே உயிர்கள் வினை புரிந்து, இருவினை ஒத்து, வினை ஒழிந்து பேரின்பம் பெறுகின்றன. எம்பெருமான் அம்பிகையாகிய அருட் சத்தியை இடப்பாகத்திற் கொண்டிருப்பதாகவே வேதாகமங்கள் கூறுகின்றன.

6. இச்செய்யுளுக்கு, சிவதத்துவங்களும் அவையல்லாத முப்பத்தொரு தத்துவங்களும் அல்லனுய், ஆன்ம உணர்வைப் பிரியாதவனுய், அருளோடு உடனுய முதல்வன் உளன், என்றும் பொருள் கொள்வர்.

**பொழிப்பு:** சொல்லினுல் அளவு படுத்திச் சொல்லத் தக்க வடிவம் முதலியனவாய் உள்ள பொருள்களும், சொல்லால் உரைக்கப்படாத இல்லாத பொருள்களும் ஆகிய இவ்விருவகைப் பொருள்களும் அல்லாதவனுமாய், மனம் வாக்கைக் கடந்து நின்று பதிஞானத்தால் உணரத் தக்க வேருெரு தன்மையன் ஆனுன்; அவனே அருட்சத்திக்கு நாயகனுகிய தலைவன் என்க.

களிறு: 38. எத்தனையோ. 40. வேண்டுங்கால்.

## 22. வாசியோகம்

இப்பொருளைக் கூடுகைக்கு வேறும் ஒருபாயம் அருளிச் செய்கின்ருர்.

காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவ தாற்றல்என் றுந்தீபற
அல்லாத தல்லதென் றுந்தீபற.

இ—ள்: காற்றினை மாற்றி— (இடை பிங்கலைகளால் பிராண வாயு நின்று சலிக்குமளவும் மனமும் ஆன்மாவும் ஒக்க நின்று சீவிக்கும் ஆகையால், இப்படிச் சலித்

துப் புறப்படுகிற) வாயு (பன்னிரண்டு அங்குலமும் புறம்பே சலியாமல் உள்ளேதானே சுவறும்படி குருவசனத்திலே நின்று சாதிக்க மனச் சலிப்பு உள்ளது அற்றுவிடும். இப்படிச்) சலிக்கத்தக்க விகாரம் அற்ற பொழுதே; கருத்தை-(இவன்) கருத்தானது (அவிகாரத்திலே செல்லுமாகையால், இந்த விகாரத்தில் விழாமல்); கருத்தினுள்—தன்னுடைய கருத்துக்குக் கருத்தாய் நிற்கிற தம்பிரானார் திருவடியிலே கூடியிருந்து; ஆற்றுவது ஆற்றல் என்று உந்தீபற—இளைப்பாறுகிறதே பொருள். அல்லாதது—இப்படிக்கூடுகிறது ஒழிந்து வேறொரு பிரகாரங்களாற் கூடுகிறது; அல்லது என்று உந்தீபற—என்றும் நிலைநில்லாது என்க.

வி—ம்: 1. காற்றினை மாற்றி: யோகப்பயிற்சியால் பிராணவாயு இடைபிங்கலைகளிற் செல்லாது சுழுமுனையிற் செல்லுதலால் மனச்சலிப்பாலுளதாம் சித்தவிகாரம் அற்றபொழுது. காற்றினை மாற்றுதலாவது, இடகலை பிங்கலையாகப் பிரிந்து ஓடிக்கொண்டிருக்கும் காற்றை ஒன்று படுத்திச் சுழுமுனை வழியாகச் செல்லச் செய்தல். பிரபஞ்சக்காட்சியை ஓடிப்பிடிக்கும் மனத்தை வசப்படுத்தியே ஆன்மா கரையேறவேண்டும். அப்பர் அடிகளும், ''மனம் எனுந் தோணிபற்றி'' என்றார். மனத்தைச் சுவாசத்தால் வசப்படுத்தலாம். சுவாசம், மனத்தை ஓட்டவும் நிறுத்தவும் வல்ல கருவி. சுவாசத்தைப்பற்றி உயிர் நிற்கிறது. இடது நாசியால் விடுஞ்சுவாசம் இடைகலை; வலது நாசியால் விடுஞ்சுவாசம் பிங்கலை. இடைகலை பிங்கலை வழிகளை அடைத்து இவற்றுக்கு இடையில் உள்ளே சுவறும்படி விடுவது சுழுமுனை. வெளியேறும் சுவாசம் பன்னிரண்டு அங்குலம் செல்கிறது. அதில் எட்டு அங்குலம் அளவு உள்ளே மீளுகின்றது. நான்கு அங்குலம் வீணுகின்றது. இங்ஙனம் வாசி வீணுகாது வசஞ்செய்யும் யோகம் வாசி யோகம் எனப்படும். வாசி என்பது சுவாசம். 'வா' நெடில். 'சி' குறில். ஒருவர் சுவாசம்—பன்னிரண்டு அங்

குலமாயின் வா என்னும் நெடிலுக்கு எட்டு அங்குலமும் சி என்னும் குறிலுக்கு நான்கு அங்குலமும் கணக்காம். பன்னிரண்டு அங்குலத்தில் திரும்பிவருவது 'வா'வுக்குரிய எட்டு அங்குலமே. 'சி' பிரிகிறது. 'சி'பிரிந்து போகாது பயிற்சி செய்தால் சிவா என்று வரும். காற்றை இவ்வாறு வீணாக்காது மாற்றினால் மனம் வசப்படும். மனம் வசப்படச் சித்த விகாரம் அறும். ''ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர் வில்லாத றவர்க்கு'' என்னுங் குறளின் பொருளை இச்செய்யுளோடு ஒப்புநோக்குக.

2. கருத்தைக் கருத்தினுள் ஆற்றுவது ஆற்றல்: கருத்தை—கருத்தானது; அதாவது உயிரறிவானது. மாற்றி என்பதைச் சிங்கநோக்காக்கி, காற்றினைமாற்றி, கருத்தினை மாற்றி எனப் பொருள் கொள்வாருமுளர்.

கருத்தினுள்—உயிர் உணர்விற்கு உணர்வாயிருக்கும் சிவனடியில் அடங்கும்படியிருந்து. அடங்கும்படி இருந்து என்பன இசை எச்சத்தால் வருவிக்கப்பட்டன. அளப்பருங்கரணங்கள் நான்கும் சிந்தையேயாக அச்சிந்தனையைச் சிவன் தனக்காக்கிய அநுபூதிமான்களது செயலையுங் காண்க. அவிகாரம்—சிவம். ''சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்''—என்பது சுந்தரர் தேவாரம். சிவனது திருவடியில் மனம் இலயித்ததும் மன விகாரம் அற்று விடும்.

ஆற்றுவது: இளைப்பாறுவது. ஆறுவது எனற்பாலது ஓசை நோக்கி ஒற்று மிக்கு ஆற்றுவது என வந்தது. மூச்சு ஒடுங்குவது; மூச்சு ஒடுங்கில் தொழிலற்று இளைப்பாறலாம்.

ஆற்றல்—இருமைக்கும் உறுதிப்பொருள். தத்துவமும் பிராணவாயுவும் இவன் வசப்படும்; சிவமும் வந்துகூடும்.

மனம் வெளியே ஓடும்போது உலகக்காட்சி காணப்படுகின்றது. சற்றுமடங்கி உள்முகமானால் ஆன்மக் காட்

சியே நிகழ்கின்றது. முற்றும் அடங்கி முனைப்பு அற்றுவிடு மாயின் சிவக்காட்சி விளைகின்றது. தாயுமானவரும், ''துள்ளுமறியாம் மனது பலி கொடுத்தேன்'' என்றார்.

3. அல்லாதது அல்லது: அல்லாதது—இவ்வாறல்லாது வேறொரு பிரகாரத்தாற் கூடுதற்குச் செய்யும் முயற்சி.

அல்லது: நிலை நில்லாது. வாசி வித்தையால் **மனத்தை நிறுத்துதலே முதன்மையான உபாயம்.**

பொழிப்பு: இடை பிங்கலைகளாற் செல்லும் பிராண வாயுமாறிச் (சுழு முனையிற்) செல்லுமாறு பழகுதலால் (மனச்சலிப்பால் உண்டாகுஞ் சித்தவிகாரம் அற்றுவிடும். விகாரம் அற்றபொழுதே) உயிரின் அறிவானது அறிவுக்கு அறிவாயிருக்கும் சிவனடியில் அடங்கும். அவ்வாறு சிவனடியிலிருந்து இளைப்பாறுவதே இருமைக்கும் உறுதிதரும் பொருள். இவ்வாறன்றி வேறுவழியாற் சிவனடியைக்கூடுதலுக்குச் செய்யும் முயற்சி என்றும் நிலைநில்லாது.

களிறு: 41. அரணவுணர்வுதனில்.

### 23. வீடு பேற்றுக்கு எளிய வழி.

இந்த உபாயத்திலே பொருந்தி நிற்கவே இவனும் சுத்தனாய் வீடும் எளிதாகப் பெறலாம் என்று அருளிச் செய்கின்றார்.

> கள்ளரோ டில்லம் உடையார் கலந்திடில்
> வெள்ள வெளியாமென் றுந்தீபற
> வீடும் எளிதாமென் றுந்தீபற.

**இ-ள்.** கள்ளரோடு—களவுகாண்பான் ஒருவன் (தன்னுடைய சொரூபத்தையும் பேதித்துத் தன்னுடைய சாத்திரத்தின் வழியிலே, மிகுந்த பதார்த்தங்கள் உடையான்

ஒருவனைப் பார்த்து, அவனை (அ) மந்திரத்தாலும் (ஆ) ஔடதத்தாலும் (இ) தியானத்தாலும் பேதித்துத் தன்னுடைய வசத்திலே ஆக்கி, அவனகத்திலேயுள்ள பதார்த்தங்களை அவன் பொருந்தி நின்று எடுப்பித்தாற்போலத், தம்பிரானாரும் இவனுடைய அநாதிமல சம்பந்தத்தாலே இவனுக்குத் தெரியாதபடி கள்ளரைப்போல மறைந்து நின்று உபகரித்துக் கன்மவொப்பும் மலபரிபாகமும் உண்டான அவசரத்திலே இவனுக்குப் பொருந்தினதொரு திருமேனியிலே பிரகாசித்துத் (அ) திருநீறு என்கிற ஔடதத்தாலும் (ஆ) ஸ்ரீ பஞ்சாக்கரம் என்கிற திருமந்திரத்தாலும் (இ) சொரூபம் என்கிற தியானத்தாலும் இவனைப் பேதித்து இவனைத் தம்முடைய வசத்திலே ஆக்கி இவன் சஞ்சிதமாக நெடுங்காலங்களிலே தேடிய அத்துவாக்களாகிய அறைகளைச் சோதித்து எடுப்பிக்கிற அளவிலே) இல்லம் உடையார்—(தேகமாகிய) இல்லத்தையுடைய ஆன்மா (வும்); கலந்திடில்—(இதற்குப்) பொருந்தி ஒருவழிப்பட்டால்; வெள்ள வெளியாம் என்று உந்தீபற—(இவனுக்கு ஒரு முதலும் இல்லையாய் இவனுடைய இருதயமும்) வெளிக்கு வெளியாய்ப் பரமாகாசமாய்விடும்; வீடும் எளிதாம் என்று உந்தீபற—(இப்படியான காலத்து ஐம்புல வேடராகிய கள்வர்க்கு ஈடுபடாத) வீடும் இவனுக்கு வருத்தமறக்கிடைக்கும் என்க.

வி—ம்: *1. கள்வர்-ஆன்மா தன்னியல்பையும் அறியாது; தனக்கு அறிவித்து நிற்கும் தம்பிரானையும் அறியாது. உயிரின் அறிவினிடத்துத் தம்பிரான் உடனாய் நின்று அறிவித்து மறைந்து நிற்கின்றான். உயிரினது அறிவிற் கலந்து நின்றும் உயிருக்குத் தோன்றாது மறைந்து நிற்பதால் கள்வன், என்பர். ''என் உள்ளங்கவர் கள்வன்'' என்பது சம்பந்தர் தேவாரம்.*

*2. கள்ளரோடு இல்லம் உடையார் கலந்திடில்: கள்வன் ஒருவன் ஒரு வீட்டிலுள்ள முழுப் பொருளையுங் கவர*

எண்ணுகின்முன். முதலில் அவன் தன் உண்மையைக் காட்டாது மாறு வேடம் தரிக்கின்முன். களவு நூலின் வழியே களவாடத் தொடங்குகின்முன். வீட்டுக்காரனே மருந்து, மந்திரம், தியானம் என்பவற்முலே தன்வசப்படுத்திக் கொள்ளுகின்முன். வீட்டுக்காரனின் சம்மதத்தோடு அவனது வீட்டின் அறைகளிற் சேமித்துவைத்துள்ள எல்லாப் பொருள்களேயுங் கவருகின்முன். இந்த நிலேயில் கள்வனும் வீட்டுக்காரனும் ஒரேமனப்பான்மையுடையவராகிவிடுகின்றனர். வீட்டுக்காரன் கள்வன் வசப்பட்டமையாலே தானும் ஒருப்படுகின்முன். இவ்வாறே, ஆன்மாவினுள்ளே தம்பிரான் மறைந்து உறைகின்முன்; மல சம்பந்தத்தால் ஆன்மா இதை அறிவதில்லே. மறைந்து நிற்கும் நிலேயில் தம்பிராளுர் கள்வருக்கு ஒப்பாகின்முர். தம்பிராளுரது தோன்முத்துணேயினுல் இருவினே ஒப்பு மலபரிபாகம் உண்டான உடனே, அவர் இந்த ஆன்மாவை ஆட்கொள்ளுதற்கு ஏற்ற ஆசாரிய வேடத்துடன் தோன்றித் திருநீற்று மருந்தாலும், திருவைந்தெழுத்து மந்திரத்தாலும், சொரூப தியானத்தாலும் இந்த ஆன்மாவைத் தன்வசமாக மாற்றுகின்முர். ஆன்மாவின் வீடாகிய தேகத்தில் அறைகளாகிய ஆறு அத்துவாக்களேச் சோதித்து அவற்றில் வைத்துள்ள நெடுங் காலத் தேட்டமாகிய சஞ்சிதம் முழுவதையும் எடுத்துவிடுகின்முர். இதற்கு ஆன்மாவும் சம்மதித்தே ஒழுகுகின்றது. பேதித்து—வேறுபடுத்தி; மாற்றி. ஔடதம்—மருந்து. பதார்த்தம்—பொருள்.

3. வெள்ள வெளியாம் என்று உந்தீபற: தம்பிராளுேடு ஒன்றுபட்ட ஆன்மாவிடம் மலமாயை கன்மங்கள் இருப்பதில்லே. இவ்வான்மாவினேயுடையவனது இதயம் பரவெளியாகிவிடும்.

4. வீடும் எளிதாம் என்று உந்தீபற: ஐம்புலவேடர் வீடு அடையும் பேறு அற்றவர். ஆன்மாவே வீடு அடையும் தகுதியுள்ளது. ஐம்புலக் கள்வருக்கு எட்டாத வீடு

உள்ளங்கவர்கள்வன் துணையால் ஆன்மாவுக்கு வருத்த மின்றிக் கிடைக்கின்றது.

**பொழிப்பு:** தன்வசமாக்கவல்ல கள்வனுடனே, வசப் படவல்ல வீட்டுக்காரன் கூடியதுபோலத் தம்பிரானரு டனே ஆன்மா கூடினல் அந்த ஆன்மாவினுடைய மல மாயை கன்மங்கள் நீங்கி, அவ்வான்மாவையுடையவனது இதயம் வெட்டவெளியாய்ப் பரமாகாசமாய்விடும். இவ னுக்கு வருத்தமின்றி வீடுங்கிடைக்கும்.

களிறு: 42. இன்றிங்கு. 43. அநாதிசிவன்.

24. விசுவாதீதமாய் நிற்றல்.

இப்படி நின்றவர்கள் பிராரத்தத்தால் தேகத்துடனே விசுவத்திலே இருந்தார்களாயினும் அவர்கள் விசுவ மயக் கத்திற்படார்கள் என்று அருளிச்செய்கின்றார்.

எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்
[கொண்டேநின்றார்
விட்டார் உலகம்என் றுந்தீபற
வீடே வீடாகும்என் றுந்தீபற.

இ—ள்: எட்டுக் கொண்டார்—(பஞ்ச பூதமும் சந்தி ராதித்தரும் ஆன்மாக்களும் ஆக) எட்டுவகையும் திரு மேனியாக (எழுந்தருளி) நின்ற தம்பிரானர்; தமைத் தொட்டுக் கொண்டே—(அநாதியே தன்னை விட்டு நீங் காது நின்ற) முறைமையை (அவருடைய) திருவருளாலே அறிந்து, (தானும் அவரைப்போலச் சிநேகம் புரிந்து) கூடினவர்கள்; நின்றார்—(பிராரத்தம் தொலையுமளவும் தேக விசுவங்களிலே) நின்றரே ஆயினும்; விட்டார் உல கம் என்று உந்தீபற— (சாக்காளி என்னும் புழுப் போலக் கருத்து வேறே பூண்டு கிடக்கையாலே) விசுவத் திற் படார்கள். வீடேவீடாகும் என்று உந்தீபற—(இப் படி விசுவத்தை அருட்கண்ணலே பொய்யானபடி கண்டு

நீங்கி நிற்கவே ஒரு காலத்தினும் அழிவில்லாத) திருப் பாதமே (அவர்களுக்குப்) புகலிடமாம் என்க.

வி—ம்: 1. எட்டுக்கொண்டார்—அட்டமூர்த்தி. ஐம் பெரும்பூதமும், ஞாயிறு திங்களும், ஆன்மாவும் ஆகிய எட்டையுந் தனக்கு உருவாகக் கொண்டு எழுந்தருளி நின்ற தம்பிரானுர். திருவருளால் அறிவு விரிவடைந்தவர் முதலிலே தம்மையும் பின்னர் அறிவு விளக்கத்துக்குச் சார் பான பொருள்களாயுள்ள சூரியன் முதலிய ஏழையும் அறிவர். அருளின் துணையால் இவ்வெட்டுப் பொருள் களும் அறிவுக்குப் புலனுகும்.

2. தமைத் தொட்டுக்கொண்டு: தம்மோடு அநா தியே தம்பிரானுர் கூடி நின்றமையை அவரருளாலே அறிந்து, தாமும் அவர்கூடியது போல எட்டுருவையுஞ் சிவமாகக்கண்டு அவரோடுகூடி. இப்படிக் கூடுவதால் ஆன் மாவினது அறிவு மேலும் விரிவடைகின்றது.

3. நின்றுர்: உடலோடு கூடி உலகில் நின்றுர். சிவ ஞானிகள் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் உயிர்களிலும் எரியுறுநீர் போல வேறற நிற்கும் தம்பிரா ளுரையே பார்ப்பார்கள். அட்ட மூர்த்தமாகவே இறை வனைக் காண்பார்கள்.

4. விட்டார் உலகம் என்று உந்தீபற—பிரபஞ்சம் எல்லாவற்றையும் சிவமாக எண்ணும் உறைப்பினுல் உல கப்பற்று நீங்குகின்றது. கூட்டுப்புழு உறங்கும் பருவத் தில், புழு என்னும் எண்ணம் இன்றிப் பறவை என்னும் எண்ணம் கொண்டு கிடந்து, ஈற்றிற் கூட்டை உந்திக் கொண்டு பறக்கின்றது. அதுபோல ஞானயோகியரும் எல்லாம் அவனுக எச்செயலும் இறைசெயலாக எண்ணும் எண்ணமுடையவராக, தேகம் உலகம் என்னுங் கூட்டுக் குள்ளே கிடத்தலின் அவர்கள் உயிர், எண்குணத்தான் தாளையே பற்றிச் சேரும்.

சாக்காளிப்புழு—தன்னுருவை மறைத்துக் கிடக்கும் ஒருவகைப் புழு; கூட்டுப்புழு.

5. வீடேவீடாகும் என்று உந்திபற: வீடு—திருவடி; உலகத்தை அருட்கண்ணுற்கண்டு அதுபொய்யென நீங்குதலே வீடு. வீடு—முதனிலை திரிந்த தொழிற்பெயர். வீடாகும்: புகலிடமாம். தம்பிரான் திருப்பாதமே மனம் பாவிப் பார்க்குப் புகலிடமாம்.

கட்டுப்பட்டுக்கிடந்த ஆன்மாவின் அறிவு காட்சி முதலியவற்ருல் சிறிது விளக்கம் பெற்றுப், பின் குருவருளால் விரிவடைந்து, தன்னையுந் தலைவனையும் உணர்ந்து, தன்னை மறந்து தலைவன் தாடலைப்படுகின்றது.

பொழிப்பு: (ஐம்பெரும் பூதமும் ஞாயிறு திங்களும் ஆன்மாவும் ஆகிய) எட்டும் உருவாக எழுந்தருளிய தம்பிரானுர், தம்மோடு அநாதியே கூடிநின்றமையை அவர் அருளால் அறிந்து, அவரைப்போலத்தாமும் (அவ்வெட்டு உருவையுஞ் சிவமாகக்கண்டு) அவரோடு கூடிநின்ற சிவ ஞானிகள், (உலகில் உடலோடு வாழினும்) எண்ணம் சிவன் பாலே பதிந்து கிடத்தலால் பிரபஞ்ச வாசனையற்றிருப்பர். பிரபஞ்சத்தை அருட்கண்ணுற் கண்டு பொய்யென நீங்கத் தம்பிரானுர் திருப்பாதம் அவர்களுக்குப்புகலிடமாகும்.

களிறு: 44. தம்மிற்சிவலிங்கம் 45. தன்னை.

### 25. இருவினை ஒப்பு.

இப்படி ஞானஐசுவரியத்துடனே நிற்கப் பெற்றவர்களே புண்ணிய பாவம் துலையொத்த ஆன்மாக்கள் என்று அருளிச் செய்கின்றுர்.

சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்ததுஎன் றுந்தீபற
ஒவ்வாத தொவ்வாதென் றுந்தீபற.

இ—ள்: சித்தமும் தீயகரணமும் சித்திலே—(அருளாலே) சீவனுடைய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் ஆகவும், குற்றத்தைக் குணம்போல விளைவிக்கிற அந்தக்கரணங்கள் பசுகரண பாவம் கெட்டுச் சிவகரணமாகவும்; ஒத்ததே—இப்படிக் கூடினவர்களே; ஒத்தது என்று உந்தீபற—கன்மங்கள் பக்குவத்தை அடைந்து துலையொத்த ஆன்மாக்கள்; ஒவ்வாதது ஒவ்வாதென்று உந்தீபற—(இப்படி) வினைகள் துலைஒவ்வாத ஆன்மாக்களுக்குத் தம்பிரானார் திருவடி கூடக்கிடையாது என்க.

வி—ம்: 1. சித்தம் சித்திலே ஒத்தல்; தீயகரணம் சித்திலே ஒத்தல் எனக் கூட்டுக.

சித்தம் சித்திலே ஒத்தல்—சித்தம் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் உறல். சித்தம்—ஜீவன். துவம்—தன்மை. பசுத்துவம்—பாசத்தாற் பந்திக்கப்பட்ட தன்மை; சிவத்துவம்—சிவமாந்தன்மை.

2. தீயகரணம் சித்திலே ஒத்தல்—தீமை விளைக்கும் கரணம் பசுகரணபாவம் கெட்டுச் சிவகரணமாதல். பாவம்—குணம்; பசுகரணம்—பசுப்பொருள்களை அறியுங் கரணம்; கரணங்கள்—ஆன்மா தன் சொரூபத்தை உணரும் பொருட்டு உதவுங் கருவிகள். இக்கரணங்கள், புறத்தே ஓடாது அகமுகமாக ஒடுங்குமாயின், அவற்றுக்கு ஆன்மா சாட்சியாயிருக்கும்வரை சீவித்துப், பின்னர் அருள்வயப்பட்டதும் சிவகரணம் எனப்பெயர் மாற்றமுறும். சித்தம் பசுஞான எல்லை கடந்து திருவருள் நெறிப் படர்கையில் கசிந்து கரையும். அவ்வாறு கரையக்கரையக் கரணங்கள் எல்லாஞ் சிவகரணமாக மாறும். அதாவது எந்தச்செயலையும் சிவன் செயல் என எண்ணிக்கிடக்கும் நிலை எய்தும்.

3. ஒத்தது—இருவினை ஒப்பு அடைந்த ஆன்மாக்கள். பசுஞானம் உள்முகமாகிப் பதிஞானத்துடன் கரைந்து ஒன்றுபட்டு விடுவதால் இவர்களறிவில் நன்மை தீமைப்

பாகுபாடு அற்றுவிடும்; இவரே இருவினை ஒப்பு உடைய வர்; இன்பதுன்பங்களில் சமபுத்திபண்ணுபவர்; வீடும் வேண்டாவிறலினர்.

4. ஒவ்வாதது ஒவ்வாதென்று உந்திபற; இருவினை ஒப்பு வரப்பெருத ஆன்மாக்களுக்கு சத்திநிபாதம் மல பரிபாகம் என்பன நிகழா. இவர்கள் கரணங்கள் வெளிப் புறமாக ஓடிப் பிரபஞ்சத்துட்பட்டு, விபரீத உணர்வைப் பயக்கும். இதனுலே தம்பிரானுர் திருவடி அடைதல் கூடாது.

''ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும் உபாயமது அறியாதே'' என்ற திருவாசகத் தொடர் இச்செய்யுட் கருத்தைக் கொண்டுள்ளது.

பொழிப்பு: திருவருளால், ஆன்மாவானது பாசத் தாற் பந்திக்கப்பட்ட தன்மை நீங்கிச் சிவமாந்தன்மை யுடையதாகவும், தீமை விளைவிக்கும் அந்தக் கரணங்கள் பசுகரணபாவங்கெட்டுச் சிவகரணங்களாகவும் பொருந் தப் பெற்றவர்களே இருவினை ஒப்பு அடைந்த ஆன் மாக்களாவர். இவ்விதம் இருவினைஒவ்வாத ஆன்மாக்களுக் குத் தம்பிரானுர் திருவடி கிடையாது.

களிறு: 46. துன்பமாம்—முதல் 50. கல்லிற்கமரில்.

26. ஆனந்தாமிர்தம்.

இந்நிலையிலேநின்று இரண்டறச் சாதித்தால் பின்பு விளையுமாறு அருளிச்செய்கின்ருர்.

உள்ளும் புறம்பும் நினைப்பறின் நின்னுள்ளே
மொள்ளா அமுதாம்என் றுந்தீபற
முளையாது பந்தமென் றுந்தீபற.

இ—ள்: உள்ளும்—(கன்மயோகிகள் கருத்துப்போலத் தான் நிற்கிற) தேகத்திலே (ஒரு தானத்தில் அவிகார

மாய் இருந்தும்); புறம்பும்—(கிரியாபாதத்தில் நிற்கின்ற வர்களைப் போலப்) புறம்பே பாவித்திருந்தும்; நினைப்பு அறின்—[இப்படிச் செய்து அநுபூதிதிரிந்து பிரபஞ்சமாய் நில்லாதே, (அ) தேசிகன் கடாட்சத்தாலே தேகாதிப் பிரபஞ்சங்களை உணர்ந்து, (ஆ) நீங்கின தன்னையும், (இ) தரிசிப்பித்த சொரூபத்தையும், அதன் கண்ணுக உணர்ந்து தேகாதிப் பிரபஞ்சங்களையும் இல்லையாக்கித், தன்மையும் முன்னிலையும் ஒழிந்து ஒரு நீர்மையாகப் படர்க்கையாய், உள்ளென்றும் புறம்பென்றும் தான்என்றும் அவன்என்றும் கூடவேண்டும் என்றும் கூடினேம் என்றும் விசாரிக்கிற] உணர்வு ஒழியில்; நின் உள்ளே—உன்னிடத்திலே; மொள்ளா அமுதாம் என்று உந்தீபற—ஒருவராலும் முகந்து கொள்ளப்படாத அநுபோகரசமான ஆனந்தாமிர்தம் (ஊறிப்பெருக உன்னையே கிரகித்துக் கொண்டு) தானேயாய்விடும்; பந்தம் முளையாது என்று உந்திபற—(இப்படியான பின், சனன மரணங்கள் அங்குரிக்கத்தக்க) பாசவிகற்பங்கள் உண்டாகா என்க.

வி—ம்: 1. உள்ளும் புறம்பும் நினைப்பறின்: உள்ளும் நினைப்பு அறின்:—கன்ம யோகிகள் ஏகதேசப்படுத்தித் தேகத்தின் உள்ளே ஒரு தானத்திலே தியானிப்பர். அது போல மனம் உள்முகமாகச் செல்லும்போது ஆன்மதரிசனம் பெற்றதும் 'ஆன்மாவே பிரமம்' என அகங்கரிக்கும். அதனால் அநுபூதி கிட்டாது. அங்கு நினைப்பு அற்றால் ஆன்மா ஞானமேயாகும்.

புறம்பும் நினைப்பு அறின்:- சரியை கிரியைகளில் நிற்கின்றவர்கள் ஏகதேசப்படுத்தித் தேகத்தின் புறத்தே ஒரு தானத்திலே தியானிப்பர். அத்தியான பாவனைபோல, மனம் வெளிமுகமாகச் செல்லும்போது உடம்பின் பொறிகளை வாயிலாகக் கொண்டு வெளியேயுள்ள உலகப்பொருள்களைப்பற்றி ஆசாபாசங்களுக்கு உட்பட்டுப் பிரபஞ்சமயமாய் நிற்கும். ஆதலால் வெளிமுகமாகும் போதும் ஆன்மாவின் நினைப்பு அற்று ஞானமேயாகவேண்டும்.

சிவஞானியர், யோகியர் போல உள்ளும், சரியை கிரியையாளர் போலப் புறம்பும் பாவித்தலாகிய நினைப்பு அற, தம் உணர்வு திருவருளைச் சார்தல்பற்றி விளங்கும் வியாபக மெய்யுணர்வால், முதல்வனது பூரணநிலையை நேர்படக் கண்டு வழிபடுவர் என்பது புலனாகின்றது.

2. மொள்ளா அமுதாம் என்று உந்தீபற:- நினைப்பற்ற நிலையை ஆன்மா எய்தியதும் கைம்மாறு கருதாச் சிவன் அருட்சத்தியுடன் தோன்றிப்பிரகாசிப்பான். உயிரறிவும் அநுபவிக்கிறோம் என்ற எண்ணமும் கரைந்து விடும். இன்பமயமாகவே இருக்கும்; எல்லையற்ற சொல்லொணாத ஆனந்த அமுதசாகரம் பெருகும். இவ்வானந்த அமுதை அநுபவித்த மணிவாசகர், ''வாக்கிறந்தமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கச செய்தனன்'' எனவும், ''அற்புதமான அமுததாரைகள் எற்புத்துளைதொறும் ஏற்றினன்'' எனவும் போற்றினார்.

3. முளையாது பந்தம் என்று உந்தீபற:— நினைப்பு அற்றதும் பரத்தின் அருளால் பரமானந்தம் ஆகிவிடும். எவ்வித பந்தமும் இராது. பந்தமில்லையாகவே பிறப்பும் அற்று விடும். சிவபோகத்திலே அழுந்தி அநுபவிப்பதொன்றே உண்டு. அங்குரித்தல்—முளைத்தல்.

**பொழிப்பு:** கன்மயோகியர் போலத் தேகத்தின் உள்ளேயும், சரியை கிரியையாளர் போலத் தேகத்திற்குப் புறம்பேயும் தம்பிரானாரைப் பாவனைசெய்யாது, குருவருளால் (தேகாதிப்பிரபஞ்சங்களை உணர்ந்து அருள்வழிநின்று தம்பிரான் அருளையே கண்ணாகக் கொண்டு உன்னையும் தம்பிரானது சொரூபத்தையும் உணர்ந்து, தேகாதிப்பிரபஞ்சப்பற்றை விட்டு, தம்பிரானோடு வேறின்றித் தம்பிரானருளில்) உயிர் உணர்வு கரைந்து ஒழியப்பெறுவாயெனில், உன்னுள்ளே ஒருவராலும் முகந்து கொள்ளப்படாத சிவாநந்த அமுதம் பெருகி உன்னைக் கவர்ந்து

விடும். (இதன் பின் பிறப்பு இறப்புக்களைத் தரத்தக்க) பாசவிகற்பங்கள் உண்டாகா.

களிறு: 51. உள்ளும் புறம்பும். 52. கண்ணப்பன்.

27. கிலேசம் நீங்குகை.

இப்படிப் பொருந்தினவர்களுக்கே பசுபாச விகற்பங்களாகிய கிலேசந் தீர்வதென்றும் அல்லது தீராதென்றும் அருளிச்செய்கின்றார்.

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்(கு)
அவிழும்இவ் அல்லல்என் றுந்தீபற
அன்றி அவிழாதென் றுந்தீபற.

இ—ள்: அவிழ—(ஆன்ம போதம்போல ஒருபொருளைப் பற்றிக் கொண்டு நின்று விசாரித்து மயங்காதே, அநாதியே பற்றும் விகற்பமும் மயக்கமும் இன்றித், தன்னுடைய ஆஞ்ஞையாலே சர்வமும் நடவாநிற்கத் தான் ஒன்றையும் அறியாதே பரமாநந்த மயமாய்) எல்லாவற்றினும் உளதாய் நின்றே அவற்றிற்படாமல்; இருக்கும்—அநவரதமும் நின்று பிரகாசிக்கிற; அறிவுடன் நின்றவர்க்கு—சொரூபத்தை (ஆசாரியன் அநுக்கிரகத்தாலே பெற்று அதன்கண்ணாக அதிலே) கூடி அதுவாய் நின்றவர்களுக்கு; இவ்வல்லல் அவிழும் என்று உந்தீபற—(ஆதித்தன் சந்நிதியில் ஆன்மாக்கள் கண்ணுக்கு அந்தகாரம் நினைவற அந்நியமாய் விடுந்தன்மைபோல ஞானாதித்தன் உதயம் தரிசனம் ஆனபோதே சனன மரணங்களுக்கு ஏதுவாய் வருகிற) பாசவிகற்பங்கள் ஆகியபேரந்தகாரமானது (இன்ன இடத்திலே போனது என்று அறியாதபடி தானே இவனைக்) கைவிட்டுப்போம். அன்றி அவிழாது என்று உந்தீபற (இப்படி நீங்காத அளவில்) வேறோர் உபாயங்களாலும் (இந்தக்கிலேசம்) கைவிடாது என்க.

வி—ம்: 1. அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு: அவிழ இருக்கும் அறிவு—திருவருள். இது எல்லாவற்றி னுங் கலந்து நின்றும் அவற்றிற்படாமற் பிரகாசிக்கும். அறிவுடன் நின்றவர்—திருவருளே ஆசாரியவடிவில் வந்து அருளுகின்றது; அருள மெய்யுணர்ந்து அருளே கண்ணுக அதனுடன் கூடித் திருவருள் மயமாய் நின்றவர்.

2. அவிழும் இவ்வல்லல் என்று உந்தீபற—இவ்வல் லல் அவிழும் என மாறுக. அல்லல்—ஆன்ம அறிவு, இது இருண்டதாகவும், அநாதியே பற்றும் விகற்பமும் மயக்கமும் செய்வதாகவும் உள்ளது. கண்ணின் உண் மைக் காட்சிக்கு உதயமும் சூரியனொளியும் உதவுவது போல, அல்லல் நீங்கி ஆன்மா உண்மைநிலை அடைய அருளால் உண்டாகும் பரஞானமும் பத்தியாலுண்டாகும் பதிஞானமும் உதவுகின்றன. அருளால் (ஆசாரியனல்) விளையும் பரஞானம் ஆன்ம அறிவை விழுங்க, பத்தியால் உண்டாகும் பதிஞானம் ஆன்மாவை விழுங்க ஆன்மா முனைப் பின்றி, முதலுக்குங் கேடின்றிப் பேரின்பமயமாய் இருக்கும். கண்ணின் உண்மைக்காட்சிக்கு உதயமும் சூரிய ஒளியும் உதவுவதுபோல, அல்லல் நீங்கி ஆன்மா உண்மைநிலையை அடையப் பரஞானமும் பதிஞானமும் உதவுகின்றன. பரஞான பதிஞானங்களுக்குள்ளே பசுஞானம் கரைந்து பரமானந்த அநுபவப்பேறு உண்டாகின்றது.

3. அன்றி அவிழாதென்று உந்தீபற: புத்தூருக்குச் செல்லும் வழியைத் தெரிந்தான் ஒருவனிடங் கேட்டு, அவன்காட்டும் உண்மையான பாதையாற் சென்ருல் அவ் வூரையடைந்து இன்புறலாம். அதுபோல முத்தியின்பத் துக்கான வழியைக் குருகாட்ட, அருள்வழி ஒழுகிப் பதி ஞானம் கண்ணுக உதவச், சென்றடைந்து இன்பத்தே அழுந்தலாம். இவ்வாறன்றிப் பசுபாச விகற்பங்களாகிய கிலேசம் வேறெந்த உபாயத்தாலும் தீராது.

பொழிப்பு: எல்லாவற்றேடுங் கலந்தும் அவற்றிற் படாமற் பிரகாசிக்கும் திருவருள் குருவாகவந்து உணர்த்த மெய்யுணர்ந்து, அருளே கண்ணுக அதனுடன் கூடித் திருவருள்மயமாய் நின்றவர்களுக்கு ஆன்ம அறிவால் உண்டாகும் அல்லல் நீங்கும். இவ்வாறு நீங்குவதன்றி பசுபாச விகற்பங்களாகிய துன்பங்கள் வேறு எந்த உபாயத்நாலுந் தீராது.

களிறு; 53. அவிழ்ந்த. முதல், 56. எல்லாரறிவுகளின்.

28. சத்தியஞான அபேட்சை

இப்படிச்சனன மரணங்களுக்கு ஏதுவாக அங்குரிக்கத்தக்க பாசவிகற்பங்களை விட்டு முத்திக்கு வித்தாகிய சத்திய ஞானத்தை அபேட்சித்தவர்கள் பெறும்பேற்றின் உறுதிப்பாட்டை அருளிச்செய்கின்ருர்.

> வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
> பித்தேறி ஞர்கள்என் றுந்தீபற
> பெறுவதங் கென்பெணே உந்தீபற.

இ—ள்: வித்தினை —(முத்திக்கு) வித்துஆகி (அநாதியே தனக்குப் பிராணனுய் நின்று தோன்ருமல் உபகரித்தும் தொலைப்பித்தும்) வருகிற அருளை; தேடி — (தேசிகன் கடாட்சத்தாலே சந்தேகம் அறப்) பெற்று; முளையை — (சனன மரணங்களுக்கு ஏதுவாக அங்குரிக்கத்தக்க) பாச விகற்பங்களை; விட்டவர்—விட்ட பாக்கியவான்களே; பித்து ஏறினுர்கள் என்று உந்தீபற — (எக்காலமும் தொலைத்தற்கு அரியவாகிய தேகாதிப் பிரபஞ்சங்களையும் சுகதுக்க வேதனைகளையும்) கைவிட்டு (மேலாகிய ஞானம் பிரகாசிக்கத்தக்க) பரமானந்த சொரூபத்திலே (மீளாத வழிசென்று) புகுந்தவர்கள். பெறுவது அங்கு என்பெணே உந்தீபற — (இவ்விடத்திலே இப்படி நின்று பெறத்தக்க பேறெழிந்து பாசவிகற்பங்களே பொருள்

என நின்ருல்) அவ்விடத்துப் பெறும்பேறு எது நெஞ்சமே என்க.

**வி—ம்:** *1.* **வித்தினைத் தேடி:-** வித்து—குரு அருளாற் பெறும் ஞானம்; மெய்யுணர்வு. ஞானமாகிய வித்திலிருந்து பேரின்பமாகிய விளைவு உண்டாகின்றது. இருவினை ஒப்பு, மலபரிபாகம் உண்டானபின்பே குருவெளிப்பாடு நிகழும். குருவெளிப்பாட்டுக்கான பல செயல்களையும், தேடி என்ற சொல்லாற் குறித்தார்.

*2.* முளையைக் கைவிட்டவர்:- முளை — பசுபாச ஞானங்கள். மேலும் மேலும் பிறப்பு எடுக்க வழிசெய்வதே முளையாகும். முளையைக் கைவிட்டவர் பிறவிநீங்கிப் பேரின்பம் உறுவர். பாசப்பற்றினையும் முற்ருக நீக்கியவரே மெய்யுணர்வின் பயனுகிய பேரின்பத்தைப்பெறுவர்.

*3.* பித்தேறினுர்கள் என்று உந்தீபற:- பாசப்பற்று அற்றவர்கள் விருப்பும் வெறுப்பும் இன்றி, இருவினை ஒப்பு இயல்பினராய் ஒழுகுவர்; விருப்பு வெறுப்பு அற்ற நிலையினரைக் குறித்தற்குச் சாத்திரங்களில் 'பித்தரை' உவமை கூறுவர். சிவஞான சித்தியாரில் 'உன்மத்தர்' எனக் கூறப்படுதலுங் காண்க.

*4.* பெறுவது அங்கு என் பெ(ண்)ணே உந்தீபற:- பெறுவது அங்கு என்: சத்திய ஞானத்தில் அபேட்சையும். பாசபசுஞானங்களில் உபேட்சை (வெறுப்பு) யும் கொள்ளாதார் பெறும்பேறு என்ன? அவர்களுக்குப் பேரின்பங் கிட்டாது.

பெண்ணே எனற்பாலது பெணே என விகாரமாயிற்று இந்நூல் இரண்டாஞ் செய்யுளிற் கூறியபடி நமக்குள்ள பேதைமையை ஈண்டும் நினைவூட்டுகின்ருர்.

*5.* இச்செய்யுளுக்கு வேறு பொருளும் உரைப்பர். அவ்வாறு பொருள் கொள்வோர், வித்து சிவனுண்மையையும், முளை ஞானத்தின் உண்மையையும், பித்து

ஞானத்தைப் பெற்றுச் சிவனைக் கூடப்பெறாத துர்ப்பாக்கியத்தையுங் குறிப்பதாகக் கொள்வர். வித்தைச் சிவஞானமாகவும், முளையை அதன் பயனாகிய சிவபோக மாகவுங் கொள்வாருமுண்டு. இவர் தம்மை முதலாக் கண்டு சிவனைப் பேணாமையினால் சிவாநுபவத்தை இழந்த வர் எனப் பொருள் கூறுவர். 'பேணாமையால் அற்றார்பேறு' என்பர் அருணந்திசிவாசாரியார்.

பொழிப்பு: ஞானாசாரியன் மூலம் அருளைப்பெற்று பாசபசு ஞானங்களை விட்ட பாக்கியவான்களே, பிரபஞ் சத்தையும் வேதனைகளையும் விட்டுப் பரமானந்த சொரூ பத்திலே புகுந்தவராவர். நெஞ்சமே, இவ்விடத்து பதி ஞானத்தாற் பேரின்பத்தைப் பெறுவதைவிட்டு, பாசபசு ஞானங்களையே பொருளெனக் கொண்டு நின்றாற் பெறும் பேறு என்ன?

களிறு: 57. வித்தும் அதன் அங்குரமும்.

## 29. சிவசொரூப பதம்

இப்படி அரிய பேற்றைப் பெறுமளவில் பெறுகைக்கு ஓர் அவதரம் உண்டென்று அருளிச் செய்கின்றார்.

சொல்லும் இடமன்று சொல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற.

இ—ள்: சொல்லும் இடமன்று—(இப்படிக் கூட அரிய சிவனைக் கூடத்தக்க இடம் ஆன்மபோதத்தால் உணர்ந்து வாக்குக்களால் இன்ன இடம் என்று) உரைக்கத்தக்க தொரு இடம் அன்று; சொல்லப்புகுமிடம்— (சொல்லு கைக்குக் கருத்தா ஆகிய) ஆன்மா ஒரு பொருளைக்கருதி உரைப்பதாக உணருமளவில், ஒருவன் உணர்த்த உணரு மது ஒழிந்து தானாக ஒன்றை உணரமாட்டாது; ஆதலால் (ஒருவன் உணர்த்த உணருவதான படியை ஆசாரியனாலே

பெற்று) உணர்த்த உணருவதான எல்லையில் அவன் உணர்த்துகிற தன்மையை அவனுலே உணரின், அவ்விடமே; எல்லை சிவனுக்கு என்று உந்தீபற—சிவனைப் பெறுதற்கு எல்லையாயின இடம். என்ருல்—(இந்த இடத்தை) அறிந்து கூடினுல்; நாம்—யான் என்றும் எனது என்றும் சொல்லிநின்ற ஆன்மா; என் செய்கோம் உந்தீபற—அவ்விடத்து என் செய்ததோ அறிகின்றிலேன் என்க.

வி—ம்: 1. சொல்லும் இடம் அன்று:- சிவத்தின் குணம் அருள்; அருளின் விளைவு ஞானம்; ஞானம் சிவசொரூபத்தைத் தரிசிக்கப் பயன்படுகிறது. (சிவசொரூபம் வெளிப்பட்டதும் பரஞானம் மறைகின்றது.) அருள் வெளிப்பாட்டை ஆதாரமாகக் கொண்டே சிவவெளிப்பாடு நிகழுகின்றது. அருள் குருவாய் நின்று உணர்த்த உண்டாகும் பரஞானத்தில் ஆன்ம போதங் கரைந்து விடுகிறது. ஆன்ம போதமற்ற நிலையில் ஆன்மாவுக்கு நினைப்புப் பேச்சுச் செயல்கள் நிகழா. நினைப்பற்ற ஆன்மா மெய்ஞ்ஞானத்தோடு சென்றுசிவ சொரூபத்தைத் தரிசிக்கும். ஆதலால் சிவரூபம் ஆன்ம போதத்தால் உணர்ந்து சொற்களால் இன்ன இடத்தது என்று உரைக்கத்தக்க அவதரம் உடையதன்று. அவதரம்—சமயசந்தர்ப்பம்.

2. சொல்லப்புகும் இடம்:- ஆன்ம போதம் அற்றபின் ஆன்மா உணராது. ஆதலால் அருளாசான் சொல்லாமற் சொல்லி உணர்த்த ஆசானருளும் பரஞானத்தின் துணைகொண்டு ஆன்மா உணரும். இவ்வாறு ஆன்மா உணர்த்த உணருவதான படியை ஆசாரியனுலே பெறுகின்றது. இப்படியின்மேல் சிவம் உணர்த்தஆன்மாஉணரும். இவ்வாறு உணரும் வேளையில் சிவம் உணர்த்தும் தன்மையை, ஆன்மா சிவஞானக் கண்கொண்டு உணரும்.

3. எல்லை சிவனுக்கு: சிவனைப் பெறுவதற்கு எல்லையாய இடம். ''உரையுணர் விறந்து நின்று உணர்வதோர் உணர்வே'' என்ருர் மணிவாசகர்.

4. என்றால் நாம் என்செய்கோம்: இந்த இடத்தை அறிந்து கூடிய ஆன்மாவுக்கு யான் எனது என்ற எண்ணமே இராது. ஆதலால் யரன் என்றும் எனது என்றும் சொல்லி நிற்பதால் ஆன்மாவுக்கு ஒரு பயனுமில்லை என்றவாறு.

பொழிப்பு: ஆன்மா சிவனைக்கூடும் இடம் ஆன்ம போதத்தால் அறிந்து, வாக்கால் உரைக்கத்தக்கதன்று; அவ்விடம் உணர்த்த உணருமிடம். ஆசாரியன் உணர்த்த ஆன்மா ஆசானருளாகிய பரஞானத்தால் உணர்ந்தபடி, சிவம் உணர்த்த ஆன்மா சிவஞானத்தால் உணரும் இவ்வாறு சிவம் உணர்த்துந் தன்மையைச் சிவஞானத் தாற் பெறுமிடமே சிவனைப் பெறுதற்கு எல்லையாகிய இடம். இவ்விடத்தை அறிந்து யான் எனது என்னுஞ் செருக்கு அற்றுக் கூடவேண்டும். யான் எனது என்று சொல்லி நிற்பதால் ஆன்மாவுக்கு ஒரு பயனுமில்லை.

களிறு: 58. ஒன்றன்று. முதல்—62- இப்பொருள்கள்.

## 30. தன் இழப்பு

இந்த அவதரத்திலேநின்று கூடும் உபாயத்தை மன்னி விடாதே உணரப்பெறின் எல்லா நிலையிலும் நிற்கலாம் என்று அருளிச் செய்கின்றார்.

வீட்டில் இருக்கில்என் நாட்டிலே போகில்என்
கூட்டில்வாள் சாத்திநின் றுந்தீபற
கூடப் படாததென் றுந்தீபற.

இ—ள்: வீட்டில் இருக்கில் என்— (எல்லாவற்றையும் தன்னாலே) விடப்பட்டுத் துறவறத்திலே இருந்தால் பிர யோசனம் என்ன? நாட்டிலே போகில் என் — (இது ஒழிந்து) நாடத்தக்க அருச்சனாதிகளினும் தீர்த்ததரிசனங் களிலும் உழன்றாலும் பிரயோசனம் என்ன? கூட்டில் வாள் சாத்திநின்று உந்தீபற — (பொன்னுக்கு மாற்று நின்றாற்போல) ஆன்மாவே (குகையாக அநாதியே தனக்

குப் பிராணனுய் நிற்கும்) திருவடிஞானத்தை(த் தேசிகன் கடாட்சத்தாலே) உணர்ந்து (தன்னுடைய சுதந்திர ஈனத்தையும் கருத்தாவின் செயல் என்றே கண்டு தனக்குப் பொருந்தினதொரு) நிலையிலே நில்லாணுகில்; கூடப்படாதது என்று உந்தீபற-(இப்படி உண்மையறிந்து நில்லாமல் தன்னுலே செய்யப்பட்டதாகக் கருதில்) மோட்சங்கூடாது, (போதத்துக்கு விரோதமே விளையாநிற்கும்) என்க.

வி—ம். 1. வீட்டில்....என்; வீடு—துறவறம். இல்லமெனக் கொள்வாருமுண்டு. நாடு—நாட (ஆராய)த்தக்க வழிகள். இல்லறமெனப் பொருள் கொள்வாருமுளர்.

2. கூட்டில்....உந்தீபற:- கூடு—ஆன்மா; வாள்—ஞானவாளாகிய திருவருள். ''ஞானவாள் ஏந்தும் ஐயர்'' என்ற திருவாசகமுங் காண்க. ஆன்மாவில் உள்ள திருவடிஞானத்தை விளக்க, பொன்னுக்கு மாற்று என்ற உவமை வந்தது. தேசிகன்—குரு. குருஅருளாகிய பரஞானத்தால் பதிஞானத்தை உணரவேண்டும். நமது அறியாமை அறிவு அகற்ற இறைவன் ஞானவாள் ஏந்தியுள்ளார். நமது அறிவு இச்சை செயல்கள்யாவும் இறைவனுடையனவே. நமக்குச் சுதந்திரம் இல்லை. இச்சுதந்திரமின்மையும் கருத்தாவின் திருவுள்ளக்கிடக்கையே என எண்ணி, இறைவன் வசப்பட்டு, ''நாளே இதற்கு நாயகமே''; ''என்னதோ இங்கு அதிகாரம்'' என்ற முறையில் ஒழுகவேண்டும்.

மெய்யுணர்தல்:- 'அட்டமூர்த்தியான இறைவனுக்கு ஆன்மா சரீரம். எனவே உடலான ஆன்மாவுக்கு உயிர் இறைவனுவன். உடலான ஆன்மாவின் அறிவும், அதன் உயிரான சிவனது ஞானமே.' என்ற உண்மையைக் குருவருளால் உணர்தல். திருக்குறள் பழைய உரையில், 'மெய்யுணர்தல்—சிவஞானம் அறிதல்' என்றிருப்பதாக உரைவளப்பதிப்பாசிரியர் காட்டுவதும் சிந்தித்தற்குரியது.

3. கூடப்படாதது என்று உந்தீபற:- அது கூடப் படாது. அது—மோட்சம்; வேறற நிற்கும் நிலை. உண்மை அறிந்து, எல்லாச் செயலும் கர்த்தாவின் செயல் எனக் கொண்டவர் சண்டேசநாயனுர். அவர் மோட்சம் பெற்ருர். அவர் சகலரையும் கைவிட்டுத் தன்னுடைய செயலற கருத்தாவின் வசத்திலே நின்ருர். சிவனைப் பூசிக்கும் பொழுது, குலத்தாலே பிராமணரும் முறையாலே தந்தை யுமானவரைத் தாளற வீசி எல்லோருக்கும் தீமைபயக்கும் பிரமகத்திச் செயலே புரிந்தார். இச்செயலும் சிவனுக்கு இதமாகவே பலித்துத் திருவருள் விளைந்தமையை,

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கும்
அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதிம ணிமுடித் தாமமு நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

என்னும் திருப்பல்லாண்டிலுங் காண்க.

கருத்தாவை அறியாமல் யாவுந்தன்னுடைய செய லாகக்கொண்டு, எல்லோருக்கும் இதமான யாகஞ்செய்த தக்கனுக்கு வினைஏறி விரோதமே விளைந்தது. இவற்றை அருணந்திசிவம் தாம் அருளிய சிவஞானசித்தியாரில்,

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே.

என விளக்கியிருத்தலுங் காண்க.

எல்லாம் சிவன்செயல் என்பதை மறவாதிருக்க வேண்டும். தானும் தன்செயலும் கெடில் மோட்சம் உண்

டாகும் என்பதை, ''நான் கெட்டவா பாடித்தெள்ளேணங் கொட்டாமோ,'' ''என்னுடைய செயல் மாண்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ'' என்னும் திருவாசகத் தொடர்களிற் காண்க.

பொழிப்பு: அநாதியே ஆன்மாவுக்கு உயிராக நிற்கின்ற சிவஞானத்தை ஆசாரியன் அருளும் பரஞானத்தின் துணைகொண்டு உணர்ந்து, எல்லாம் கருத்தாவின் செயல் எனக்கொண்டு, தனக்குப் பொருந்திய ஒருநிலையிலே நிற்றல் வேண்டும். அங்ஙனம் உணர்ந்த நிலையில் நில்லாஞகில் துறவறத்திலே இருந்தும் பிரயோசனம் இல்லை. நாடத்தக்க அருச்சனை ஆதியவற்றிலும் தீர்த்த தரிசனங்களிலும் உழன்றும் பிரயோசனமில்லை. மோட்சமுங்கிட்டாது.

களிறு: 63. வீட்டிலே. 64. சிவன்முதலே.

## 31. சைவசித்தாந்தச் சிறப்பு

இந்த உபாயத்தை உடைய சைவசித்தாந்தத் திறம் ஒழிந்து மற்ருெரு சமயிகளின் பொருளைப் பொருள் எனக் கருதவேண்டா என்று அருளிச்செய்கின்ருர்.

சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்று
ஆவி அருதேஎன் றுந்தீபற
அவ்வுரை கேளாதே உந்தீபற.

இ—ள்: சாவிபோம்— (ஆன்மாவும் சிவமும் வேறற நிற்கும் அநுபோக ரசமாகிய சைவசித்தாந்தத் திறம் ஒழிந்து, ஒருவன் பசிதீரச் செய்த) பயிரானது பயன்படும் அளவும் பயிர்போல வந்து, பலிக்கத்தக்க நாட்களிலே சாவிபோன தன்மைபோல; மற்றைச் சமயங்கள் புக்கு நின்று—[முடிவில் ஒன்று என்று உரைப்பார், இரண்டென்று உரைப்பார், இரண்டாய் நின்றே ஒன்றும் என்பார், உடலந்தானே உயிர் என்பார், வாயுவே உயிரென்பார், கரணநாசமே பொருள்என உரைப்பார், மோகம் க்ஷயிக்க

முத்தி என்பார் இப்படிச் சொல்லப்பட்ட] வெகுவிதமான சமயங்களிற் புகுந்து நின்று; ஆவி அழுதேஎன்று உந்தீபற—தனக்குப் பிராணனான சிவனைத் தரிசியாமல் நரகங்களில் அடைவார்; அவ்வுரை கேளாதே உந்தீபற—(இப்படிப்பட்ட) சமயிகள் வார்த்தை உன் சுரோத்திரத்துக்கு விடயமாகாதபடி நில் என்க.

வி—ம்: 1. சாவிபோம் மற்றைச் சமயங்கள்:- நிலங்களிலே பசிதீர்ப்பதற்காகப் பாடுபட்டுப் பயிர்செய்கின்றார்கள். இளம்பயிர் பச்சைப் பசேலெனக் கவர்ச்சியாய் வளர்கின்றது. கதிர்களும் தோன்றுகின்றன. பாலுரம் இன்மையால் மணிபிடிக்காமல் சாவிக்கதிர்களாய் நின்றுவிடுகின்றன. பட்டபாடு அத்தனையும் வீண் ஆகின்றது. பசிதீர்க்கப் பிற இடத்தை நாடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான நிலம் போன்றனவே பிறசமயங்கள். இச்சமயத்தவர், தம்மையும் தலைவனையும் உணராமல், தம்முள்ளே இணங்கிநில்லாது பிணங்கி நிற்பர் என்பர் மெய்கண்டார். சாவிபோம் மற்றைச் சமயங்களையே, 'உவலைச்சமயங்கள்' என்றார் மணிவாசகர்.

2. ஆவி அழுதே என்று உந்தீபற:- "பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா" என்பது தாயுமானவர் கூற்று. மற்றைச் சமயங்களிற் புகுவதால் உயிருக்கு உய்தியில்லை. மாறிமாறிப் பிறந்து பரபோகம் துய்க்காமல் நரகங்களில் வருந்துவர். சித்தாந்த சைவம் ஒன்றே தன்இழப்பையும் மெய்யன்பையும் சாதனங்களாகக் கொண்டு, திருவருளையும் பேரின்பத்தையும் பேறுகளைத்து உயிர்க்கு உறுதி பயப்பது. இப்பிறப்பிலேயே முத்தியடைதற்கான உபாயங்களைக் கூறுவதும் இதுவே.

3. அவ்வுரை கேளாதே மறுசமய ஒவ்வாத சாத்திரங்களையும் அற உரைகளையும் கேளாதே. சாக்கியநாயனார் முதலியோர் அவ்வாறுகேளாது சைவம் புகுந்து முத்தி பெற்றனர். எல்லாச் சமயங்களின் நல்லனவற்றையும் தன்

பாற்கொண்டுள்ளது சைவம்; எச்சமயக் கொள்கையையும் விரோதம் நீக்கி எடுத்துரைப்பது சைவம். ஆதலின் மறு சமயங்களுக்குச் சைவம் விரோதமானது அன்று. காய்தல் உவத்தல் இன்றி ஆராயின் உலகுக்கே ஒரு பொதுச்சமய மாய் விளங்க வல்லது சித்தாந்த சைவம் என்பது தெற்றெனப் புலனுகும்.

களிறு: 65. இன்றிச் சமயத்தின். முதல் — 68. தாமடங்க.

### 32. அணைந்தோர் தன்மை

இப்படிச் சைவசித்தாந்தத்தின் உண்மையிலே நின்ற வர்கள் கருவி கரணுதிகளில் ஒரு காலத்தினும் கூடாத துறவை உடையவர்கள் என்று அருளிச்செய்கின்ருர்:

துரியங் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதென் றுந்தீபற
துறத்தார் அவர்களென் றுந்தீபற.

இ—ள் துரியங் கடந்த இத்தொண்டர்க்கு—(பிருதிவி முதலாக நாதம் ஈருன) தத்துவங்களையும் பஞ்சமலங் களையும் (அருளாலே கண்டு) நீக்கித் தன்னைத் தரிசித்துத் (தன்னையும் பொருளன்று என்று கண்டு) திருவடியிலே பொருந்தி நிற்கத்தக்க மெய்யடியார்க்கு; சாக்கிரம்— பிராரத்தத்தாலே சாக்கிரத்தானம் கூடிற்ருயினும்; துரிய மாய் நின்றது என்று உந்தீபற— (இவர்கள் திருஷ்டிக்குப்) பரமதுரியமான ஞானமே பிரகாசிக்கும். அது ஒழிந்து ஒருகாலத்தினும் பிரபஞ்சத்துடன் கூடார்கள்; அவர்கள் துறத்தார் என்று உந்திபற—அவர்களே துறவையுடைய கலியாணர்கள் என்க.

இதில் முற்படும் துரியம் என்பது தற்போதத்தை; இரண்டாவது துரியம் என்றது பரபோகத்தை என்க் கொள்க. (துறம்—துறவு. துறத்தார்—துறவை உடையவர்

வி—ம்: 1. துரியம் ... தொண்டர்க்கு: துரியம்: பாசத்தை நீக்கித் தன்னேயிழந்து. முதல்வனது திருவடியைத்தரிசித்து அவனடியைப்பற்றி நிற்கும் நிலே. இது மேலாலவத்தையில் நிகழ்வது. பிருதிவி முதல் நாதம் ஈருகத் தத்துவம் முப்பத்தாறு. பஞ்சமலம்: ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம்.

துரியங்கடந்த: மேலாலவத்தையில் முதல்வனின் அருளிற்படிந்து, துரியநிலேயையுங்கடந்த சிவஞானநிட்டை கூடிப் பாசப்பற்றையும் அறுத்துச் சிவோகம்பாவனேயில் அத்துவித சம்பந்தத்தால் ஏகனுகி நிற்கும் நிலே. இது நின்மல துரியாதீதம் எனப்படும் அருள்நிலே. இந்நிலேயில் நிற்கும் உயிர்களின் செயல் சிவன் செயலே. ''மன்னிய சீர்ச் சங்கரன்ருள் மறவாமை பொருள்'' என்னும் மாண்பினர் பால் இந்நிலே உண்டாகும். நால்வர் பெருமக்கள் இந்நிலே நின்றனர். இத்தொண்டர்க்கு:- இது புறச்சமயங்களே ஒதுக்கி, கொள்ளவேண்டிய சித்தாந்த சைவ நெறியில் நிற்கும் சிவனடியார் என்கின்ற பூரணநிலேயை எய்தியவரைக் குறித்தது. இவரே சீவன் முத்தர். தொண்டர்—சிவனடியார்; சிவனடியார்—திருவடிஞானம் பெற்ருேர். 'அடியார் அருளால் அவனடி கூட, அடியான் இவனென்று அடிமை கொண்டானே' என்ற திருமூலர் வாக்கு அடியார் இவரென்று விளக்குகின்றது. மெய்யடியார்—சிவதொண்டர். மெய்—சிவம்.

சகலாவத்தையில் சகலத்திற் சகலம் (மத்தியாலவத்தை), சகலத்திற் கேவலம் (கீழாலவத்தை), சகலத்திற் சுத்தம் (மேலாலவத்தை) என மூன்று நிலேகள் உண்டு. ஈண்டுக்கூறிய நின்மலாவத்தை என்றது, சகலத்திற் சுத்தமாகிய மேலாலவத்தையை என்க. சரியை முதல் நான்கு ஞான பாதங்களேயும் குருமுகமாய் ஏற்று, முதல்வனே நாடி, வந்தனே வழிபாடுகள் செய்தல் சகலத்திற் சுத்தம் என்னும் மேலாலவத்தையாகும். இதிலும் சாக்கிரம் முதல் ஐந்து

அவத்தைகள் உண்டு. நின்மல துரியமும் நின்மல துரியா தீதமுமே இச்செய்யுளிலே துரியமும் துரியங்கடந்த நிலையும் எனப்பட்டன.

2. சாக்கிரம் துரியமாய் நின்றது:- நின்மல துரியநிலையில் கருவிகளை விட்டுச் சுத்தமான சித்தம்மட்டும் உயிருடன் கூடி நிற்கும். காண்பான், காட்சி, காட்சிப்பொருள் எனப்படும் திரிபுடி சாக்கிர நிலையில் உண்டு. ஞானத் துரியநிலையில் காண்பான், பாசம் நீங்கிய உயிர்; காட்சி, தான் அடிமை என்றும், முதல்வன் உடையான் என்றும் அறிந்த அறிவு: காட்சிப்பொருள் (சார்ந்ததன் வண்ணமாந் தன்னியல்பை உணர்ந்தபடியால்) முதல்வனுடைய திருவடியாகும். இவ்வாறு ஞானத்துரிய நிலையில் திரிபுடி சித்தித்தலால் இப்பரம துரிய நிலையினின்றுங் கீழிறங்கார். பிராரத்தம் அநுபவித்தல் இவர்கள் உணர்வுக்கு வராது. விழிப்பு நிலையாய சாக்கிரங் கூடினுலும் இவர்கள் ஏறிநின்ற பரமதுரிய ஞான நிலையே பிரகாசிக்கும். துரியாதீத சீவன் முத்தனுக்கு இத்துரிய நிலை சாக்கிர நிலை எனப்படும். நின்மலதுரியம் சாக்கிரம் எனப்படவே நின்மல துரியா தீதம் சாக்கிராதீதம் எனப்படும். பரமதுரியம்—நின்மல துரியம்.

3. துறந்தார் அவர்கள் என்று உந்தீபற:- துரியாதீத நிலையடைந்த சீவன் முத்தரைப் பாசக்கூட்டம் தழுவாது விலகிநிற்கும். சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவரைப் பிரபஞ்சம் தாக்காது. இவர்கள் தற்போதம் அற்றவர்கள். இந்நூல் 24ஆஞ் செய்யுளில் துரிய ஞானியை 'விட்டார் உலகம்' என்றவர் இங்குத் துரியாதீத சிவஞானியை, 'துறந்தார் அவர்கள்' என்று கூறி நீத்தாரின் துறவு நிலையை விளக்கியுள்ளமை காண்க. கலியாணர்—பரிபூரண சுகத்தைப் பெற்றவர்; நித்தமணுளரைக் கூடி நித்திய சுகத்தைப் பெற்றவர்.

**பொழிப்பு:** தத்துவங்களையும் மலங்களையும் அருளாலே கண்டு நீங்கித் தன்னையும் இழந்து, திருவடியிலே பொருந்தி

நிற்கத்தக்க சிவ தொண்டர்க்குப் பிராரத்தத்தாலே சாக்கிரத்தானம் கூடினலும் அங்கும் இவர்கள் பார்வைக்கு நின்மல துரியமே தோன்றும். இவர்கள் அதைவிட்டுப் பிரபஞ்சத்துடன் கூடார். இவர்களே உண்மைத் துறவையுடைய பரிபூரண சுகத்தைப் பெற்றவர்களாகிய நித்திய கலியாணர்கள்.

களிறு: 69. துரியங்கடந்த. முதல்—75. மன்னனருள்

## 33. பெத்த முத்தி

இப்படித் துறவையுடைய கலியாணர்களுக்கும் பிராரத்தகன்மம் புசித்தே தொலைய வேண்டுகையாலும் புசிக்குமளவில் கருவி கரணதிகள் கூடவேண்டுகையாலும் இவை கூடினலும் இவற்றின் வசத்தில் அழுந்தாமல் புசிக்கும் உபாயமும், ஆகாமியம் ஏருமல் நிற்கும் உபாயமும், இப்படி அருளிலே நின்றவர்க்குப் பெத்த தசையிற் சுகந்தரனே முத்தி தசையிற் சுகமாம் உபாயமும் அருளிச் செய்கின்றார்.

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாம்அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயையென் றுந்தீபற.

இ—ள்: முற்ற வரும்பரிசு அங்கே பெற்ற சிற்றின்பமே— (தேசிகன் கடாட்சத்தாலே சொரூபத்தை உணர்ந்த காலத்தும் பிராரத்தமானது எடுத்த உடலிலே நின்று புசித்தே தொலைய வேண்டுகையால், அந்தக் கன்மத்தாலே நிலைநில்லாத சுகங்கள் வந்து கூடாநிற்கும்; இது கூடாநின்றபோதும் இதில் அழுந்தாமல் இந்தச் சுகத்தையும் கன்மத்தையும் கருவி கரணதிகளையும் தன்னையும் கூட்டிப் புசிப்பிக்கிற) திருவருளை அதுகண்ணுகை உணரவே சனனமும் ஏருமல் கன்மமும் தொலைந்து அவ்விடத்தில் கூடின அற்ப சுகமானது, பேரின்பமாம்— (இவன் ஞானதிருஷ்டியிலே நிற்கையாலே) பரமசுகம்ஆம்.

மாயை முளையாது என்று உந்தீபற— (இப்படி நிற்கவே) மலம் மாயை கன்மங்கள் (ஒரு காலத்தினும்) அங்கு நரியா என்க.

வி—ம்; 1. பெற்ற சிற்றின்பமே: தேசிகன் தீக்கையால் சஞ்சிதத்தையும், நிறுத்தின அருட்கண்ணுலே ஆகாமியத்தையும் போக்கினுலும் எஞ்சிய பிராரத்தத்தை எடுத்த உடலில் நின்று புசித்தேதீரவேண்டும். பிராரத்த கன்மத்தாலே நிலையற்ற சுகங்கள் வந்தடையும். சிறிது பொழுது நிகழ்வதாய நிலையற்றதாய் உள்ள இன்பம் சிற்றின்பம்.

2. முற்ற வரும் பரிசு: பிராரத்தத்தால் வந்த சுகத்தில் அழுந்தாமல் இந்தச் சுகத்தையும் கன்மத்தையும் கருவிகரணுதிகளையும் தன்னையும் கூட்டி அநுபவிக்கச் செய்யும் திருவருளின் தன்மை (யினை அருட்கண்ணுல் உணர்வார்கள்)

3. அங்கே பேரின்பமாம்: அருளைச் சார்ந்து அருள் வழி ஒழுகுவதால் அவ்வுயிர் பெறும் சிற்றின்பம் பேரின்பமாம். அங்கு—அவ்விடம்; நின்மலதுரியமாகிய சாக்கிரம் ஆதலின் அங்கு எனச் சேய்மைச் சுட்டாற் சுட்டினுர். நின்மலதுரிய சாக்கிரத்தில் இவன் அவனேயாய் (சீவன் சிவனேயாய்) நிற்றலால் வந்து கூடும் விடயங்கள் இவனை— சீவனைப்பற்ருது முதல்வனைப்பற்றும். சுகத்தையும் சிவனே அநுபவிப்பான். ஆதலால் அது பேரின்பமாய் விளையும். துரியாதீதத்தில் தன்னையிழந்து சிவமேயாய் நின்று எங்கும் சிவாநுபூதியைப் பெறுகின்ருன். இவன் நின்மல துரிய நிலைக்கு நழுவிவந்தாலும் எங்கும் எவையும் சிவாநந்தமயமாகவே விளங்கும். ''காணுங் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப் பேணும் அடியார்'' என்ற திருவாசகமும் காண்க.

4. முளையாது மாயை என்றுந் தீபற: சீவன் முத்தன் சாக்கிரநிலையிலும் சிவன் உணர்த்துவதாகவும்

உணர்வதாகவும் எண்ணிக்கிடப்பன். அச் சிவன் முத்தன் அருள்வழிக்கிடப்பதால் அவன் செயலும் அருட்செயலே; ஆதலால் ஆகாமியவினை உயிர்க்கு ஏருது. அந்த அருள் பிரகாசித்து ஆணவத்தையும், கன்மமலத்தையும் கழுவும். கன்மங் கழுவப்படவே அது பற்றிவரும் மாயாமலமும் ஒழியும்; பிறவி ஏருது. மாயை முளையாது எனற் பாலது. தேற்றம்பற்றி முளையாது மாயை என முளையாது என்பது முன்வைக்கப்பட்டது. ''திருவொற்றியூர் புக்குச், சார்ந்த னன் சார்ந்தனன் சங்கிலிமென்றோள், ஆர்ந்தனன் ஆர்ந்த னன் ஆமாத்தூர் ஐயன் அருளதே'' எனச் சுந்தரர் பெற்ற சிற்றின்பத்தைப் பேரின்பமாகப் பாடியருளியதுங் காண்க.

பொழிப்பு: நின்மல துரியத்து சிவன் முத்திநிலை யடைந்த காலத்தும் பிராரத்த கன்மத்தால் சிற்றின்ப சுகம் வந்துதாக்கும். அச்சுகத்தில் அழுந்தாமல், அச்சுகத் தையும் அதன் காரணங்களையுந் தன்னையுங் கூட்டி அநுப விக்கச் செய்கின்ற திருவருளை, அருட் கண்ணால் உணர வேண்டும். அவ்வாறு உணரின் பிறவியும் ஏருமல் கன்ம மும் தொலைந்து அச்சிற்றின்ப சுகமே பேரின்ப சுகமாய் விளையும். மலம் மாயை கன்மங்கள் முளையா.

களிறு: 76. உடம்புடைய.

34. ஞானைந்த அநுபவநிலைபேறு.

இப்படி அளவிடுதற்கு அரிதான பரமாநந்த சுகம் கைகூடின காலத்தில் இவனிடத்தே வேறொன்றும் வந்து கூடாதபடி இந்தச் சுகந்தானே வேறற அடைவித்துக் கொள்ளும் என்று அருளிச்செய்கின்றார்.

பேரின்பமான பிரமக் கிழத்தியோ(டு)
ஓரின்பத் துள்ளான்என் றுந்தீபற
உன்னையே ஆண்டதுஎன் றுந்தீபற.

இ—ள்: பேரின்பமான—(ஒருவனை ஓர் இன்பம் வந்து அடுத்த காலத்தே இதற்கு ஓர் அளவும் உண்டாய் இது நீங்கின காலத்துச் சுகமான அந்த இரதம் துக்கமாகவும் வந்து கூடாநிற்கும்; ஆதலால், இந்தச் சுகதுக்கங்கள் இரண்டும் வந்து கூடாதபடி தம்பிரானார் திருவடிகளிலே அடைந்தகாலத்தே இவன் அளவிடுதற்கு அரிதாகி விளைந்த அநுபோக ரசமானது) பரமாநந்தமாகிய; பிரமக்கிழத்தியோடு—பிரமசத்தியினைக் கூடினபொழுதே; ஓர் இன்பத்து உள்ளான் என்று உந்தீபற—ஒரு தன்மையான சுகசொரூபமாய் விடும். உன்னையே ஆண்டது என்று உந்தீபற—(இப்படியே அசத்தியத்தைச் சத்தியமாகக் கொண்டு ஒழுகின) உன்னையும் (மேலாய் உள்ள ஞானநந்தத்திலே சேர்த்து) அடிமை கொண்டது என்க.

வி—ம்: 1. பேரின்பமான பிரமக்கிழத்தி—பரமாநந்த பிரமசத்தி. இந்த ஞானசத்தியுடன் கூடிச் சிவத்திலே அழுந்த வேண்டும். ஞானசத்தியால் அடையும் ஆநந்தம் ஞானநந்தம் எனப்படும். ஞானநந்தத்தின் துணையோடு சென்று சிவாநந்தத்தை அநுபவிக்க வேண்டும். இந்நூல் 14 ஆஞ் செய்யுளிற் கிடந்தகிழவியைக் கிள்ளிஎழுப்பி என்றது பெத்தநிலையில் திரோதான சத்தியுடன் நின்று செய்த (திரோபவம்) மறைப்பு. இங்கு பேரின்பமான பிரமக்கிழத்தியோடு என்றது முத்திநிலையில் அருட்சத்தியுடன் நின்று செய்த (அநுக்கிரகம்) அருளல்.

2. ஓரின்பத்துள்ளான்: சீவன் முத்தனின் பொருட்டு பேரின்பவடிவான பராசத்தியுடன் பேரின்பப்பிளம்பாகச் சிவம் நிற்கும். நிற்க சிவமாய் நிற்கும் சீவன்முத்தன் சுவாநுபவப் பேரின்பம் எய்துகின்றான். முத்தனுக்குச் சிவம் கண்டு காட்டுகின்றது. சத்தியோடு கூடிச்சிவாநந்தத்தை அநுபவிக்க வேண்டும். அப்போது தான் சிவனை உள்ளபடி அறியமுடியும். ஞான சொரூபமான சத்தியோடு பிரிப்பற இருப்பவன் சுகரூபமான சிவனேயாவன். சத்தி

யின் துணையுடன் சிவனை அடையவேண்டுமென்பதைப் பட்டினத்தடிகளும், ''தாயுடன் சென்று பின் தாதையைக்கூடி'' என்ற தொடரால் அறிவுறுத்தினர்.

சிவசத்தியுடன் கூடிச்சிவாநந்தம் அநுபவித்துச் சிவமாய் விடுவதே, ஒரு தன்மையான சுகசொரூபமாய் விடுவதாகும்.

3. உன்னையே ஆண்டான்—தகுதியுடையோரையன்றித் தகுதியற்ற உன்னையும் ஆண்டுகொண்டான். அமுதம் உண்டார்போல சிவாநந்தத்தே அழுந்தினல், அவ்வாநந்தமே சிவத்தை அறிவுறுத்தும். பாசத்தையும் உன்னையும் நீங்கித் திருவடியைப்பற்றிநின்ற நீ ஆண்டானுகிய சிவனுக்கு அடிமை. சிவன் ஆண்டிலனேல் சிவாநந்த அநுபவம் கிட்டாது. அசத்தியம்—நிலையில்லாத பொய்ப்பொருள்; சத்தியம்—நிலையான உண்மைப்பொருள்.

4. இந்நூல் 5-ஆஞ் செய்யுளில் ஏகனுகிநின்ற முதல்வன் அநேகனுகி நாதனுமாகி ஆண்டான் என்றது பெத்தநிலை. அப்பொழுது அவன் ஆண்டதைச் சகலர் அறியார்; அவன் அறிவான். இச்செய்யுளில் முத்திநிலை எய்திய ஆன்மாவை முதல்வன் ஆண்டான் என்பதை அவ்வான்மா அறிந்தது: அறிந்து தான் அடிமையாகியது.

ஆண்டான் என்றும் பாடம்.

பொழிப்பு: பெரிய இன்பவடிவான சிவசத்தியுடன் கூடியபொழுதே ஒப்பற்ற இன்பத்தையுடைய சிவத்தோடு வேறறக்கலந்து சிவசொரூபமாய் விடும். ஒரு பொருளல்லாத உன்னையும் ஞானநந்தத்தில் சேர்த்து வேறென்றும் வந்து கூடாதபடி சிவம்தானே வேறறப் பிரிப்பின்றி அடிமையாகக் கொண்டுவிடும்.

களிறு: 77. பேரின்பமான.

35. பாவனை பாவக ஒருமை.

இந்தப் பேற்றைப் பெற்றவர்களுக்குத் தேகம் நிற்கின்றபோதும் ஆன்மாவின் செய்தி கிளையாமல் ஒடுங்கிச் சிவனுடைய செய்தியாய் நிற்கும் நிலைமையை அருளிச் செய்கின்றார்.

பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டார்என் றுந்தீபற
காணாதார் காணார்என் றுந்தீபற.

இ—ள்: பெண்டிர் பிடிபோல—ஆன்மாவானது, ஒருத்தியைப் பேய்பிடித்த காலத்துத் தன்னுடைய சொரூபம் வேறாகாதிருக்க மனமும் வாக்கும் செயலும் பேயின் வசத்தவாய்த் தன்னைமறந்து பேயென நின்ற தன்மைபோலவும்; ஆண்மக்கள் பேய்போல—நாயகரான தம்பிரானார் தேகியை ஆவேசித்த பிசாசமானது தன்னுடைய சொரூபம் ஒருவர் காணநின்று தேகியினுடைய செயலை அழித்துத் தன்னுடைய செயலே பிரகாசிப்பித்துத் தானே தேகியாய் நின்ற தன்மைபோலவும்; கண்டாரே கண்டார் என்று உந்தீபற—(இப்படிப் பாவனையால் பாவகம் ஆகக்) கூடி நின்றவரே சிவனை உள்ளபடி கண்டு கூடினவர்கள். காணாதார் காணார் என்று உந்தீபற—இப்படிக் கண்டு கூடாதார் எக்காலமும் விழியாத கண்ணையுடையவர்கள் என்க.

வி—ம்: 1. பெண்டிர் பிடிபோல:- பெண்டிர் என்றது ஆன்மாவை. தலைவனைக் கலந்து அவனுள் அடங்கி நின்று இன்பத்தைப்பெறும் ஒப்புமைபற்றி ஆன்மாவுக்குப் பெண் உவமை ஆயிற்று. பிடிபோல—பேயாற் பிடிக்கப்பட்டவர் தன்மைபோல. அதாவது சுயரூபம் மாறாது, முக்கரணங்களும் பேயின்வசப்பட்டு, நினைப்பையும் தன்னையும் மறந்து பேயின் வசமாய் நிற்றல். பெண்ணின் செயல் யாவும் பேயின் செயலாகவே ஆகிவிடுகின்றன. தன் செயல்அழிந்து

தன்னைப்பிடித்தவர் செயலை ஏற்றுத், தன்னை அவருக்கு இடமாகக் கொடுக்கும் ஒப்புமைபற்றி ஆன்மாவுக்குப்பிடி உவமையாயிற்று. பிடி என்றது பிடிக்கப்படும் பொருளை. பிடி என்னும் முதனிலைத் தொழிற்பெயர், தொழிலாகு பெயராய்ப் பிடிக்கப்பட்ட பொருளை உணர்த்திற்று.

2. ஆண்மக்கள் பேய்போல: ஆண்மக்கள் என்றது சிவனை. கலந்து தன்னுட்கொண்டு இன்பங்கொடுக்கும் ஒப்புமைபற்றிச் சிவனுக்கு ஆண்மக்களை உவமை கூறினர். பேய் போல—பிடிக்கப்பட்டவரிடத்துத் தன்செயலைவைத்து அவருடம்பை இடமாகக்கொள்ளும் ஒப்புமைபற்றிச் சிவனுக்குப் பேய் உவமையாயிற்று. ஆன்மாவைப் பிடித்த பிசாசானது ஆன்மாவைத் தன்வசமாக்கித், தன்சுயரூபம் தெரியும்படி ஆன்மாவின் செயலை அழித்துத், தன்செயலை வெளிப்படுத்தித் தானே ஆன்மாவாய் நிற்கும்.

பேய்:— அகாலமரணத்தினுல் தூலஉடல் அழிய அதற்குள்ளிருக்கும் அரு உடம்பாகிய யாதனுசரீரத்தை எடுத்துச் சூக்குமமாகப் பூமியிலே திரியும் சீவனே பேயெனப்படும். இந்தப்பேயின் சூக்கும சரீரத்தில் உள்ள பாவ புண்ணியங்களுக்கு ஏற்றபடி சூக்கும அறிவு இச்சைசெயல்கள் நிகழ்வதற்கு வேண்டிய பருஉடம்பு இல்லாமையால், அதன் யாதனுசரீரத்திலே பசி தாகம் என்பன எழுந்து அச்சீவனை வருத்தும். அப்பசி தாகம் முதலியவற்றைத் தணிக்கும் பொருட்டுத் தனக்கு இசைந்த ஒருதூல உடலை அச்சீவன் தேடிப்பிடிக்கும். தான் பிடித்த தூலஉடலுள் சூக்குமமாக ஆவேசித்துத் தன்னை வருத்தும் பசிதாகம் முதலிய தேவைகளைத் தான்புகுந்த அத்தூல உடலைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்ளும். இவ்வாறு ஒருபேய் பிடித்து ஆவேசிக்கும் உடலில் வாழுஞ்சீவன் பேயாற் பிடியுண்டதாகும். பேயாற் பிடிக்கப்பட்ட சீவனையே இந் நூலாசிரியர் பிடி என்ருர். பேயாற் பிடிக்கப்பட்டசீவன் உலகில் அநுபவிக்கும் உடற்போகங்களை அப்பேய் பெரி

தும் உறிஞ்சிக்கொண்டு பிடிக்கப்பட்டசீவனின் சத்தி, ஒளி, ஊக்கம் முதலியபண்புகளை இழக்கச் செய்கின்றது.

3. கண்டாரே கண்டார்:- கண்டார்—நினைத்ததன் வடிவம் ஆனவர். அதாவது சிவோகம்பாவனையால் சிவன் ஆவேசிக்கப் பெற்றவர். கண்டார்—சிவனை உள்ளபடி கண்டு அவரோடு வேறறக் கலந்தவர்.

4. காணுதார் .. .. உந்தீபற: காணுதார்—ஒன்றை நினைத்து அதன் சொரூபம் ஆகாதார். அதாவது சிவன் ஆவேசிக்கப்படாதார். காணுர்—காணமாட்டார். அதாவது ஞானக்கண்ணற்ற குருடரை ஒப்பர்.

5. பெண்கள் பிடிபோல ஆண்மக்கள் பேய்போல என்பதற்கு, பெண்பேய் எனவும் ஆண்பேய் எனவும் சிலர் பொருள் கொள்ளுவர். இன்னுஞ்சிலர் இல்லறத்திலுள்ள மனைவியும் கணவனுமாகக் கொள்வர். இன்னும் பலவாறுகக் கொள்வாருமுளர்.

**பொழிப்பு:** பெண்டிராகிய ஆன்மாவானது பேயாற் பிடிக்கப்பட்டவரின் தன்மைபோலவும், ஆண்மக்களாகிய தம்பிராணும் பிடித்த பேயின் தன்மை போலவும் மாறப் பெற்றவர்களே சிவனை உள்ளபடி கண்டு வேறறக்கலந்தவர்கள். இவ்வாறு கண்டு கூடப்பெருத ஆன்மாக்கள் காணும் ஞானக் கண்ணற்ற குருடரேயாக எக்காலமும் விளங்குவர்.

களிறு: 78. நங்கையினுன். 79. பொன்னிறம்.

### 36. பரமாகாசத்து அழுந்துதல்

இந்நிலை கூடாதவர்களுக்கு வேறேயும் ஓர் உபாயம் உண்டென்று அருளிச் செய்கின்ருர்.

**நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்**
**நாலாம் நிலையாம்என் றுந்தீபற**
**நாதற்(கு) இடமதென் றுந்தீபற.**

இ—ள்: நாலாய பூதமும்—(சுக்கில சுரோணிதத்தின் தலையிலே சீவன் பதிகின்ற அளவில் சிவனுடைய கிரியா சத்தியாலே) நாலாம் பூதமாகிய வாயுவும்: நாதமும்—சத்தப்பிரமமான நாதமும்; ஒன்றிடின்—(கூடப் பதிந்து சரீரம் பரிணமிக்க வாயுவானது நாடிகள் தோறும் பூரணமாகப், பிரதான வாயுவான பிராணவாயுவும், பின்பு மரணம் உண்டாகுதற் பொருட்டு நாபிச் சக்கரத்தின் கீழேசென்று பதியாநிற்கும்; சத்தப்பிரமமான நாதாந்தம் தானந்தோறும் நிற்கும் எழுத்துக்களாகிச் சென்று பின்பு மரணம் உண்டாக்குகை காரணமாக மூலாதாரத்திலே பிரணவமாகப் பதிந்து கிடவாநிற்கும். இவற்றைத் தேசிகன் அருளாலே அறிந்து, சத்திபீசத்தையும் சிவபீசத்தையும் கொடுத்துத் திருமந்திரப் பிராசாதம் ஆக்கி மனத்தை ஒருமைப்படுத்தி, இந்தத் திருமந்திரப் பிராசாதத்தைக் கொண்டே நாதத்தை எழுப்பி, இந்த நாதத்தையும் பிராணவாயுவையும் கூட்டிச் சுழுமுனை வழியே செலுத்தி முன்பு தோன்றின பிரமரந்திரத்திலே கூடித் தான் பரமாகாசத்தில்) அழுந்தில்; நாலாம் நிலையாம் என்று உந்தீபற—நாலாம் நிலையாகிய சாயுச்சியம் அப்பொழுதே கைகூடும். நாதற்கு இடம் அது என்று உந்தீ பற—கருத்தா எழுந்தருளியிருக்கத்தக்க இடமும் அவனைக் கூடுகைக்கு இடமும் அதுவே என்க.

வி—ம்: 1. நாலாய பூதம்—பஞ்சபூதங்களின் நாலாவதாகிய வாயு.

2. நாதம்—சத்தப்பிரமமாகிய நாதம்; பிரணவகலைகள் ஐந்தனுள் நாதகலையை.

3. ஒன்றிடின்—நாதமும் பிராணவாயுவும் சுழுமுனை நாடி வழியே சென்று பிரமரந்திரத்திலே கூடும்படி முயன்றால் ஆன்மா பரமாகாசத்தில் அழுந்தும். பரமாகாசம் திருவருள்.

4. நாலாம் நிலை—நான்கு முத்திகளிலும் நாலாம் நிலையாகிய சாயுச்சியம்.

5. சுக்கில சுரோணிதத்தின் நலையிலே சீவன்பதி கின்றபொழுது சிவனுடைய கிரியாசத்தியால் வாயுவும் நாதமும் கூடப்பதிகின்றன: சரீரம் பரிணமிக்கின்றது. வாயு நாடிகளிற் பரவ முடிவில் பிராணவாயு, நாடியின் கீழே படிகின்றது. சத்தப் பிரமமான நாதாந்தம், உடம்பின் இடங்கள் தோறும் உரிய எழுத்துக்களாகி அமர்ந்து, முடிவில் மூலாதாரத்தில் பிரணவமாகப்பதியும். குருஅருளால் ஆக்கும் பிராசாத மந்திரத் துணைகொண்டு சிவாமிசமான நாதத்தை எழுப்பி, சத்தியமிசமான பிராணவாயுவுடன் ஒன்று படுத்திச் சுழுமுனை நாடிவழியே செலுத்திப் பிரமரந்திரத்திலே கூடும்படி நின்றால் ஆன்மாபரமாகாசத்தில் அழுந்தும். அப்போது சாயுச்சியநிலை கைகூடும்.

6, நாதற்கு இடமது—இதுவே கருத்தாவாகிய சிவன் எழுந்தருளியிருக்கும் பரமாகாச இடம்; இதுவே அவனைக் கூடுகைக்கும் இடமாம்

7. நாலாயபூதத்தைக் காற்று முதலிய நான்குமாகக் கலந்த ஆகாயமெனவும், நான்கு வகையாயுள்ள அந்தக்கரணமெனவும்; நாதம் என்பதை நாதத்தாற் செலுத்தப்படும் உயிர் எனவும்; நாலாம் நிலை என்பதை ஞானத்துரிய நிலை எனவும், திருவருள் எனவும் பிறர் கொள்வர்.

பொழிப்பு: நாலாம் பூதமாகிய வாயுவும் சத்தப்பிரமமான நாதமும் பரமாகாசத்தில் அழுந்தில் நாலாம் நிலையாகிய சாயுச்சியம் அப்பொழுதே கைகூடும். தம்பிரானார் எழுந்தருளியிருக்கத்தக்க இடமும் அவ்வரைக் கூடும் இடமும், அதுவேயாகும்.

களிறு: 80. தாரத்தோடு. 81. ஒன்றுனர்த்தது."

## 37. சிவன் உபகாரம்.

இப்படியன்றி வேறுவழிகளிற் சென்று தற்போதத்தாற் கூடத்தக்கதென்று பாவித்துச் சனன மரணங்களிலே விழுந்து அழுந்தாதிருக்கும்படி அருளிச்செய்கின்றார்.

சென்ற நெறியெல்லாம் செந்நெறி ஆம்படி
நின்ற பரிசறிந்(து) உந்தீபற
நீசெயல் செய்யாதே உந்தீபற,

இ—ள்: சென்ற நெறியெல்லாம் — (கன்மங்களுக்கு ஈடாகத் துணைசெய்கின்ற மனுதிகளுடனே கூடி, நச்சு வழியான விலக்கடி என்னும்) ஐந்து பொறி வழியுஞ் சென்று, விடயங்களிலே பொருந்தி, இதாகிதங்கள் கூடி மறுமைக்கு வித்தாகிய குற்றங்களை விளைவிக்கின்ற வழி தானே; செந்நெறி ஆம்படி—ஐயமற்ற சூதான பெருவழி யாம்படி; நின்ற பரிசு—(அ) தேகம் கூடினபடியும், (ஆ) தேகத்திலே தான் நிற்கின்ற முறைமையும், (இ) கன்மங்கள் வத்து கூடும் முறைமையும், (ஈ) தன்னுடையபோதம் இந்த வகை தெரியாமல் இந்திரிய கரணங்களுடனே கூடிநின்று சலித்த முறைமையும், (உ) (காந்தமும் பசாசமும்போலத்) தம்பிரானுர் சந்நிதியிலே கூடிச் சீவிக்கும் முறைமையும்; அறிந்து உந்தீபற—அருட்கண்ணுற் கண்டு (தன் செயல் அற நிற்கப், பிராரத்தமும் தொலைந்து ஆகாமியமும் ஏருமல் பின்பு தேகாந்தத்திலும் திருவடியிலே கூடுகைக்குக் காரணமாம். ஆதலால், பக்கம்நோக்காமல் ஒரு நிலையிலே நில்); நீ செயல் செய்யாதே உந்தீ பற—(இப்படியொழிந்து) உன்னுடைய செயலாலே கூடத்தக்கதென்று பாவித்துச் சனனமரணங்களிலே விழுந்து அழுந்தாதே என்க.

வி—ம்: 1. சென்ற... எல்லாம்: கன்மத்துக்குத்தக மனம் முதலியவை பொறிவழிச்சென்று விடயங்களில்

அழுந்துகின்றன. இதனுல் நன்மை தீமைகள் உண்டாகி மறுமைக்கு வித்தாகிய குற்றங்கள் விளைகின்றன.

2. செந்நெறியாம்படி—ஐயமற்ற சூதான பெருவெளியாம்படி. செந்நெறியென்பது குறிப்புமொழி.

3. நின்ற பரிசு அறிந்து—மாயாதேகங்கிடைப்பதும், மாயாதேகத்தில் தான் நிற்பதும், கன்மம் வந்து கூடுவதும், ஆன்மபோதம் மலமறைப்பால் இவற்றையறியாது கருவிகரணங்களுடன் கூடி நின்று சலிப்பதும், தம்பிரான் சந்நிதியில் கூடிச்சீவிப்பதும் அருட்கண்ணுற் கண்டு அவற்றினின்றும் ஆன்மா நீங்குகிறது. முன் தான் சென்ற பொறி வழி சூதான வழியெனக்கண்டு பாசங்களையும் பசுபோதத்தையும் நீங்கி, அருள் வழியிலே தன் செயலற நிற்கின்றது.

காட்டக்காணும் பெத்த நெறியிலே தற்போதத்தாற் செயல்களைச் செய்த ஆன்மா, கண்டுகாட்டும் முத்தி நெறியில் தற்போதங்கரைந்து திருவருள் வழிப்பட்டு தன் செயலற்று தம்பிரான் செயலாகச் செய்தல் வேண்டும். எல்லாம் சிவன் செயலாக ஆகாமியமும் ஏருது; பிராரத்தமும் தாக்காது; தேக அந்தத்தில் திருவடிப்பேறும் வாய்க்கின்றது.

பசாசம்: இரும்பு. காந்தம் இரும்பைக் கவரும். அவ்வாறு கவருதற்குக் காந்தத்தின் எதிர்முகமாக இரும்பை ஒருவர் அமைக்கவேண்டும். அதுபோலச் சிவனருள் ஆன்மாவினை ஆட்கொள்ளும். ஆட்கொள்ளுவதற்குக் குருவின் திருவருள் ஆன்மாவினைச் சிவசந்நிதியிற் சேர்க்கும். காந்தம் இரும்பை இழுத்துக்கொள்வதுபோல, அருளில் அழுந்திய ஆன்மா இறைவன் திருவடியிலே அழுந்தி அடங்கும். இரும்பாம் இயல்பு இல்லாவிட்டால் காந்தம் இரும்பைக் கவராது. அவ்வாறே ஆன்மபோதம் கழன்று திருவருள் வசப்பட்டால் அன்றிச் சிவஞானங்கிட்டாது.

4. நீ செயல் . ... உந்திபற—ஆன்மபோதத்தாற் செயல்களைச் செய்து இறைவனை அடையமுடியாது. அது பிறப்பு இறப்புக்களைத் தரும். ஆகையால் எல்லாம் சிவன் செயல் என எண்ணி ஒழுகுதலே சிறந்த உபாயமாகும்.

5. செந்நெறி என்பதற்குச் செவ்விய அறநெறி எனவும், சிவனிடஞ் செல்லும் வழி எனவும், சரியை முதல் நாற்பாதங்களின் வழி எனவும்; நின்ற பரிசு என்பதற்கு நிலைக்கண்ணுகக் கொண்டு நின்ற இயல்பு எனவும் செலுத்த என்பதற்கு செல்லுகிறமுறை, முதல்வன் ஆன்மாவுடன் கூடிநின்ற பண்பு எனவும் பிறர்பொருள் கொள்ளுவர்.

பொழிப்பு: மனுதிகளுடன் கூடிப் பொறிவழிச்சென்று வினைகளை ஆற்றிவரும்வழி சந்தேகமற்ற வஞ்சவழியென்பதை அருட்கண்ணுற் கண்டு, தன்செயலற்று நிற்கக், கன்மந் தொலைந்து திருவடிப்பேறு வாய்க்கும். ஆதலால் உன்னுடைய செயலாலே திருவடிப்பேறு கிட்டுமென எண்ணிச் செயல்களை ஆற்றிப்பிறப்பு இறப்புக்களில் விழுந்து அழுந்தாதே.

களிறு: 82. யாதேனும். 83. நின்றபடி.

## 38. விகற்பம் அறும்வகை.

இப்படித் தேசிகன் கடாட்சத்தாலே பெற்ற திருவருளைக் கொண்டு, சனன மரணங்களுக்கு உற்பத்திதேடாமல், எந்த உபாயத்திலேயாயிலும் திருவடியை அடைகைக்குவிரும்புவதே பொருள் என்று அருளிச்செய்கின்ருர்.

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற.

இ—ள்: பொற்கொழுக் கொண்டு—பொன்னுலே சமைத்த கொழுவைக் கொண்டு; வரகுக்கு உழுவது என்

—வரகு விளைய உழுதகாலத்தில் பலமும் குறைந்து மிகுந்த சேதமும் ஆய் உழவு பிழைத்த தன்மைபோலத் தேசிகனாலே பெற்ற திருவருளைக் கொண்டு, பிழையே பெருக்கிச் சனனமரணங்களிலே போக்குவரவுசெய்ய உற்பத்தியான இந்திரிய விடயங்களில் நீ அழுந்தாதே. அக்கொழு நீ அறிந்து உந்தீபற—அந்தத் திருவருள் முன்பு தோன்றாமல் நின்று. உபகரித்த முறைமை அறிந்து, தோன்றின பின்பு அது கண்ணாக அதிலே கூடி, அழுந்தின காலத்துச் சனன மரணங்களும் சுகதுக்க வேதனைகளும் நீங்கி, ஒரு காலத்தினும் நீங்காப் பரமாநந்தமே விளையும் என்னும் படியும் அறிந்து தன்னுடைய செயலற அதுவாய் நிற்கின்றதே நிலை. அறிந்து அறியாவண்ணம் உந்தீபற—அப்பொருளை உணராதேயுணர்ந்து நில் என்க.

வி—ம்; 1. பொற் கொழு...... உழுவதென்.

பொற்கொழு—பொன்னாற் செய்தகொழு. குருவாற் பெற்றதிருவருளைப் பொற் கொழுவுக்கு உவமித்தார். கரும்பொன், வெண்பொன், செம்பொன் எனப் பொன் பலதிறப்படினும், செம்பொன்னையே பொன் என உலகோர் வழங்குவர். செம்பொன் மாற்றும் மதிப்பும் உள்ளது.

வரகுக்கு உழுவதுஎன்:வரகுசிறு தானியங்களில் ஒன்று. வரண்ட நிலப்பயிர். வரகு விதைப்பதில் பாடு அதிகம்; பயன் குறைவு. மதிப்பும் குறைவு. இதனால் வரகு விதைப்போர் இரும்பாற் செய்த சிறு கொழுச் சேர்த்த கெட்டிக்கலப்பையால் உழுவர். பொற் கொழுச்சேர்த்த படவாட்கலப்பையால் உழுதலால், பலமும் குறைந்து மிகுந்த சேதமாய் நிலமும் பண்படாது பிழைத்துவிடும். கலப்பை வீணாகி மதிப்பழியும். அறிவற்ற செயலுமாம். இந்திரிய விடயங்களில் அழுந்துவதை வரகு நிலம் உழுவதற்கு உவமித்தார். எவன் என்னும் வினா வினைக் குறிப்பு முற்று இடைக்குறையாய் என் என மருவி, இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது.

திருவருளை, இறைவன் திருவடியை அடைவதாகிய சிவபோக விளைவுக்கான வழியிலே செலுத்தவேண்டும். இதனாலே தற்போதம் அழியும். இவ்வாறின்றித் தற்போதத்தால் உலக சுகபோகமாகிய சிறுபோகவிளைவுக்கான வழியிலே செலுத்தின் மிகுந்த ஊதியத்தை இழப்போம். இந்திரிய விடயங்களில் அழுந்திப் பிறவிப் பெருந்துயர் உறுவோம். பிழையே பெருக்கி—'பொய்ம்மையே பெருக்கி'

2. அக்கொழு...... உந்தீபற:—நீ திருவருளை அறிந்து செயலற அதுவாய் நில். நில் என்றசொல்லை வருவிக்க. திருவருளை அறிதல், கன்மஒப்புவராத பெத்த நிலையில் அறியமுடியாதபடி திரோதானசத்தியாய் உயிருள் மறைந்துநின்று படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நான்கு தொழில்களையுஞ் செய்து கன்ம ஒப்புவர உபகரித்த முறைமையையும், கன்ம ஒப்பு வந்த நிலையில் அருட்சத்தியாகிக் காணுங் குருவடிவாக வந்து அருள் புரிதலைச் செய்து உபகரிக்க, அத்திருவருளே கண்ணாக அதிலே கூடி அதன் வழிநின்ற பொழுது பிறவியும் வேதனையும் நீங்கி, பரமாநந்தமே விளைவதையும் அறிதல். திருவருளை உள்ளபடி அறியவே ஆன்மபோதங் கரைந்துவிடும். ஆன்மா செயலற்றுத் திருவருட்குறிப்பின்படி நிற்கும். அதுவே நிற்கும் நிலை.

3. அறிந்து... உந்தீபற: அறியாவண்ணம் அறிந்து நில் எனக் கொள்க. பாச பசு ஞானங்களால் அறியாது பதிஞானங் கண்ணாக அறிந்து நினைவற நில். நில் என்பது வருவிக்கப்பட்டது. சிவமே சிவமாக நினைந்து நிற்பதே தக்கது. அந்தச் சொரூபமே சொரூபமாக வேண்டும். விகற்பங் கூடாது.

4. சிலர் அறிந்து அறியாவண்ணம் என்பதற்குத், தற்போதங் கொள்ளாமல் சிவபோகம் உண்பாய் எனப் பொருள் கூறுவர். இன்னுஞ் சிலர், திருவருளை அறிந்து வேறொன்றும் அறியாமல் என்று உரை கூறுவர்.

பொழிப்பு: தொண்ட உழவனே திருவருளாகிய பொற் கொழுவைக் கொண்டு உலகவிடயங்களாகிய வரகுக்கு உழுவதாற் பயனில்லை. திருவருளின் அருமையை அறிந்து உன் செயலற்று அத்திருவருட் குறிப்பின்படி நிற்பதே நிற்கும் நிலை; அப்பொருளை உணராதே உணர்ந்து நிற்பாயாக.

களிறு: 84. சிவமே சிவமாக.

39. சிவபாவனை

இப்படி உணர்த்தாநின்ற சிவனை உணராதே உணரக் கூடாதாகிற் சிவனைப் பாவித்து நிற்கவே அந்த உண்மை கூடும் என்று அருளிச்செய்கின்றார்.

அதுஇது என்னு(து) அனைத்தறி வாகும்
அதுஇது என்றறிந் துந்தீபற
அவிழ்ந்த சடையாரென் றுந்தீபற.

இ—ள்: அது இது என்னுது— (ஆன்மாவின் கருத்துப் போல அநாதியே மறைந்த சகசமலத்தாலே மாயையும் கன்மமும் பொருந்திய சனனத்தையே விளைவித்து இந்திரிய வியாத்தனுய் விடயங்களிலே பொருந்துங்காலத்து, இரண்டு பொருளைச் சேர அறியமாட்டாமல் ஒன்றொன்ருக அறிந்தும், அறியுங்காலத்திலே) அது இது என்று சுட்டி(ப் பற்றி நின்று சலித்து மயக்க விகற்பங்களிலே அடைந்து பொய்யை மெய் என)க் கருதித் தன்னுடைய உண்மை விளங்காமல் (இரவு பகல் அகப்பட்ட ஆகாசம்போல இடைவிடாமல்) நின்று அழுந்தாதே; அனைத்து அறிவு ஆகும் அது— (தம்பிரானுடைய கருத்தானது, அநாதியே உள்ள காருண்ணியத்தின் மிகுதியாலே, ஆன்மாக்களுடைய மல மாயாதி கன்மங்களைத் தொலைப்பித்துத் திருவடியிலே கூட்டவேணும் என்கின்ற இச்சையாலே ஆன்மாக்களுக்கு அநாதியே பிராணனுய் நின்றும், அவ்வக்

கன்மங்களுக்கு ஈடானவைகளைத் திருவுளத்து அடைத்துச்) சருவத்தையும் ஒரு காலத்திலே சேர உணர்ந்து(ம் உணர்த்துவித்தும், புசிப்பித்தும், பிரிப்பித்தும் ஒடுக்குவித்தும் செய்யாநிற்கத் தான் ஒன்றையும்) அது இது என்று சுட்டிப் பற்றிநின்று சலியாதே தனது அருளாலே நடக்கத் தான் ஒழிவற நிறைந்து மயக்க விகற்பங்களும் இன்றி (அசைவற நில்லா) நிற்கும் அந்தப்பொருள்; இது என்று அறிந்து உந்தீபற— (அநாதியே) இவன்தானாய் நிற்கிற முறைமையை (அருளாலே) அறிந்து (ஆன்ம பாவனையை விட்டுச்) சிவபாவனையிலே நிற்கவும். அவிழ்ந்த சடையார் என்று உந்தீபற — (இப்படிக் கூடி நிற்கின்ற பொருளே ஒருவராற் சுட்டப்படாத) விரிந்த சடாபாரத்தை உடைய தம்பிரானார் என்க.

வி—ம்: 1. அது இது என்னுது:— ஆன்மா பாசங்களுடன் கூடி இந்திரிய விடயங்களை அறியப் புகுகின்றது: அது இது என ஒவ்வொன்ருகச் சுட்டி அறிந்து, ஒன்றிலும் நிலையாமற் சலித்து, நினைப்பு மறப்பு அடைந்து பொய்யை மெய்யென எண்ணுகின்றது; தனது உண்மையை விளங்காது தன்னைக் கருவிகள் தத்துவங்கள் மயமாகக் கருதிக் கேவல சகல அவத்தைகளை அடைகின்றது. இவ்வாறு அல்லலைத் தரும் மலங்களை நீக்கித் திருவடியிற் சேர்ப்பதற்காகவே முதல்வன் உயிர்க்குயிராக நின்று உணர்த்துவித்தும், புசிப்பித்தும், பிரிப்பித்தும், ஒடுக்குவித்தும் கன்ம ஒப்பு உண்டாக்கிக் குருவடிவந் தாங்கி வருகின்ருர். வந்து உபதேசமூலம் ஆன்ம பாவனையை நீக்கி அது இது எனச் சுட்டி நிற்கும் நிலையை நீக்குகின்ருர்.

2. அனைத்தறிவாகும்:—குருவின் உபதேசத்தாற் பெற்ற திருவருளால், ஆன்மா அது இது என்று சுட்டிப் பற்றி நின்று சலியாது நிற்கின்றது. அத்திருவருள் ஆன்மாவுக்கு ஒழிவற நிறைந்து மயக்க விகற்பமின்றி அசைவற நிற்கும் முறையை உணர்த்த உணருகிறது. உணர்ந்து

திருவருளில் அழுந்தித், தம்பிரானுர் அநாதியே ஆன்மா வாய் நிற்கும் முறைமையை உணர்த்த உணருகின்றது. இவ்வாறு உணரும்போதே ஆன்மபோதம் திருவருளிற் கரைந்து சிவபாவனை ஏற்படுகிறது. சிவோகம் பாவனையால் உண்டாகும் சிவஞானமே பதிஞானமாகும். இதுவே அனைத்தறிவு எனப்பட்டது.

3. அது இது என்றறிந்து:— அது—ஒழிவற நிறைந்து அசைவற நிற்கும் தம்பிரானுர். இது என அறிந்து: தம்பிரானுர் அநாதியே ஆன்மாவாய் நிற்கின்ற முறைமையைக் குருவருளாலே அறிந்து. இது எனவும் இவன் எனவும் ஈண்டு ஆன்மாவினைச் சுட்டினுர். ஞான சாத்திரத்தில் அண்மைச்சுட்டு ஆன்மாவைக் குறிக்கும். "இது அவன் திருவுரு இவன் அவன் எனவே எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்" என்ற திருவாசகத்துள்ளும் காண்க.

4. அவிழ்ந்த சடையார் என்று உந்தீபற:— அவிழ்ந்த சடை, வியாபக அறிவை விளக்குவது. இது சுட்டறிவு நீங்கி இறை அறிவில் அழுந்துவதே சிவபோகநெறி என்பதை விளக்குகின்றது.

பொழிப்பு: அது இது என்று சுட்டி அல்லற்படாமல், எல்லாவற்றையும் ஒருகாலத்திலே சுட்டாது அறியும் பொருள் அநாதியே ஆன்மாவுடன் கூடி ஆன்மாவாய் நிற்கின்ற முறைமையைக் குருவருளாலே அறிந்து சிவோகம் பாவனை செய்க. இவ்வாறு கூடிநின்றபொருள் விரிந்த சடையையுடைய தம்பிரானுர் ஆவர்.

களிறு: 85. அதுவிது. முதல்—91. சிவன் எனவே.

## 40. சிவன் அருள்

நின்மலனை தம்பிரானுர் ஆன்மாவுடனே கூடி ஆன்மாவாய் நிற்கைக்குக் காரணம் அவனுடைய காருண்ணியத்தின் மிகுதியே என்று அருளிச்செய்கின்றுர்.

*அவன்இவன் ஆன(து)அவனருளால் அல்ல(து)*
*இவன்அவன் ஆகான்என் றுந்தீபற*
*என்றும் இவனேஎன் றுந்தீபற.*

இ—ள்: அவன் இவன் ஆனது அவன் அருளால் அல்லது—வாக்கு மனாதீதமாய் இருக்கத்தக்க தம்பிரானார், பிராணனாயிருக்கும்போது அநாதியே பசுத்துவமான ஆணவமலம் உண்டு ஆகையால், இந்த ஆணவமலம் பக்குவப்பட்ட அவதரத்திலே (செம்பிற் கிடந்த மாற்றுப் பிரகாசித்துப் பொன் என்னும் பேர் பெற்றாற்போல்) தம்பிரானாரும் பிரகாசித்து இவனைத் திருவடியிலே கூட்டிக் கொள்ளுதற் பொருட்டுத் தம்முடைய காருண்ணியத்தினாலே இவனாக எழுந்தருளி நின்ற தொழிந்து; இவன் அவன் ஆகான் என்று உந்தீபற — (அ) சிவன் ஆன்மா ஆகின்றார் அல்லர். (ஆ) ஆன்மாவும் தம்பிரானார் திருவடியிலேகூடிப் பரமாநந்தத்தை அநுபவிக்கிறதொழிந்து சிவனாலாய பஞ்சகிருத்தியங்கள் நடத்துகை இல்லை. என்றும் இவனே என்று உந்திபற — (அ) சிவன் தம்முடைய கருணையாலே ஆன்மா ஆகியும் சிவன் ஆகியும் நிற்க வல்லர். (ஆ) ஆன்மாவானவன் என்றும் தன் உண்மை குன்றாமல் கூடின தொன்றிலே அதுவாய் நிற்க வல்லன் என்க.

வி—ம்: 1. அவன்இவன் ...... அருளால்:—அவன் — வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத சிவன். இவன்— ஆன்மா. இவனானது — ஆன்மாவுடன்கூடி ஆன்மாவாய் நிற்பது. அதாவது உயிர்க்கு உயிராவது. ஒன்றாயது என்ற வாறு. இந்நிலையிலே திரோதான சத்தி எனப்படுவர்.

அவன் அருளால்:— அவன் இவன் ஆனது ஆணவமலத்தைப் பக்குவப்படுத்தித் திருவருள் வழிச் செலுத்தித் திருவடியிலே கூட்டவேண்டும் என்னும் அளவுகடந்த கருணையினாலேயாம். அவ்வாறு நில்லாவிடில் ஆன்மா முடிவின்றிப் பிறவிப் பெருங் கடலுள் அழுந்தும். களிம்பு நீங்கச் செம்

பிற் கிடந்த மாற்றுப் பிரகாசிப்பதுபோல என்ற உவமை மலம் நீங்க ஆன்மாவிற் கலந்து ஒன்றுயிருந்த சிவம் பிரகாசிக்கும் என்ற உண்மையை விளக்கவந்தது, மாற்று உயர்ந்த செம்பு பொன் என்னும் பெயர் பெற்றாற்போலச் சிவப் பிரகாசம் பெற்ற ஆன்மாவும் சிவம் எனப்படும். களிம்புள்ள செம்பைக் குகையிலிட்டு உருக்கிப்பக்குவம் நோக்கி இரசகுளிகை பாய்ச்சக் களிம்பு அகன்ற செம்பு பொன் ஆகின்றது. ஆணவக்கட்டுள்ள ஆன்மாவைப் பிறவியிற் செலுத்தி அநுபவத்தால் அறிவு விளக்கம் அடைந்து தநுகரணாதிகளை உவர்த்து உண்மைக்கு அவாவி நிற்கும் பக்குவத்தில் சத்திநிபாதம் எனப்படும் திருவருட்பதிவு இறையருளால் (குருமுகமாக) ஏற்படுகின்றது. அப்போது தன்னையும், தலைவனையும், தாடலைப்படுதலையும் அறியும் மெய்யறிவுண்டாகின்றது. ஆன்மா அவ்வழியில் ஒழுகுகின்றது எனக் கொள்க.

2. இவன் அவன் ஆகான் என்று உந்தீபற: அவன் இவன் ஆகான்; இவன் அவன் ஆகான்:- அவன் இவன் ஆகான்—சிவன் ஆன்மாவோடு கலப்பினால் ஒன்றாய் ஆன்மாவேயாய் நின்றபோதும் ஆன்மாவாக மாட்டான். உணர்த்தும் உபகாரம் புரிவான். இவன் அவன் ஆகான்—சிவனை உணர்ந்து சிவமான ஆன்மா, சிவாநுபவம் ஒன்றற்கே உரித்துடையது. சிவனது திருவடியிலே (ஞானத்திலே) ஒன்றுபட்டு ஆநந்தத்தை அநுபவிக்கும். சிவனைப் போல் ஐந்தொழில் புரியாது.

''உம்பர்பிரான் உற்பத்தியாதிகளுக்கு உரியன்
உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கும் உரித்தே''

என்பது சிவஞானசித்தியார். ஆதலால் சிவனாக ஒன்றாகாது. சிவனோடு பிரிப்பின்றி ஒன்றாக—அத்துவிதமாக நிற்கும். சாயுச்சியமுத்தி என்பது சிவபெருமானது திருவடி ஞானத்திலே ஆன்மாகலந்து சிவாநந்தத்தை அநுபவித்தலேயாகும். முத்திநிலையில் சிவனது காணுமுபகாரம்

ஒன்றுமே நிகழும். முத்தியடைந்த ஆன்மா தனித்து நில்லாது; சிவனது வியாபகத்துள் வியாப்பியமாயடங்கி நிற்கும். சிவனடியிலேயன்றி நில்லாது: சிவாநந்தத்தைப் பிறர்க்கும் ஈயாது. குருவிச்சையின் தன்மைதான் என்னே! குருவிச்சைச்செடி—புல்லுருவி—மாவடியிலன்றித் தானாக நிலத்தில் வளராது. மாவடியில் வளர்ந்து நின்றாலும் மாம் பழந்தராது.

3. என்றும் இவனே என்று உந்தீபற: என்றும் சிவன் சிவனே; என்றும் ஆன்மா ஆன்மாவே. முத்தியிலும் முதலுக்கு அழிவு இல்லை. முத்தியில் சிவன் ஆண்டான்: ஆன்மா அடிமை.

''கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடி யிணையே குறுகினோமே''—அப்பர்.

பொழிப்பு: வாக்கு மனாதீதனை தம்பிரானார், ஆன்மாவின் மலத்தை நீக்கித் திருவடியிற் சேர்க்கவேண்டும் என்னுங் கருணையால், ஆன்மாவோடு கூடி நிற்கின்றாரன்றி ஆன்மாவாகின்றார் அல்லர். ஆன்மா சிவனோடு கூடிச் சிவாநந்தத்தை அநுபவிப்பதன்றிச் சிவனாகின்றது அன்று. என்றும் சிவன், ஆன்மாவாகியும் சிவன் ஆகியும் நிற்க வல்லர். என்றும் ஆன்மா தன் உண்மை குன்றாமல் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கவல்லது.

களிறு: 92. அவன் இவனாய்.

## 41. விக்கினம் தீரும் உபாயம்

இந்தப் பொருளைக் கூடாமல் அநாதியே உண்டாகத்தக்க விக்கினமும் அதுதீரும் உபாயமும் அருளிச் செய்கின்றார்.

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்(து)
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற.

இ—ள்: முத்தி முதலுக்கே—முத்தியைப் பெறுகைக்கு முதன்மையான ஆன்மாவிலே; மோகக் கொடிபடர்ந்து—அநாதியே மறைக்கக்கக்க ஆணவமலத்தின் காரியமான அஞ்ஞானம் என்னும் கொடி பலவிதங்களாகப் படர்ந்து; அத்தி பழுத்தது என்று உந்தீபற — இதாகிதங்களே விளைந்து இவைகாரணமாக மயக்கத்தைச் செய்கின்ற மாயையாலே பூதகாரியமான உடம்பு சனனந்தோறும் பலியாநிற்கும். அப்பழம் உண்ணுதே உந்தீபற—அந்தப் பழத்தை அருந்தி நரகஹேது ஆகாதே, (ஆசாரியன் கடாட்சத்தாலே பெற்ற அருளாகிய வாளாலே ஆணவ மலமாகிய மூலத்தை வேர்அறுத்து முத்திப் பழமாகிய பரமாநந்தத்தை அநுபவித்துச் சிவனுடனே ஒருதன்மை யாய் விடுக என்க.

வி—ம்: 1. முத்தி முதலுக்கே.— முத்திக்கு முதல் எனக் குவ்வுருபைப் பிரித்து முன்னே கூட்டி முத லோடு ஏழாவது விரித்துக் கொள்க. முதல்—முதன்மை. முத்தியைப் பெறுவதற்கு முதன்மையானது மனிதஆன்மா. பரபோகம் என்னும் பழந்தரவல்ல மரம் ஆன்மா.

2. மோகக் கொடி:—மோகம்—அறிவின்மை; அஞ் ஞானம். இது ஆணவத்தினுல் வந்தது. ஆதலின் மோகக் கொடியில் நஞ்சுப்பழமாகிய அத்திப்பழம் பழுத்தது. நல்ல மரத்திற் புல்லுருவிபோல மோகக் கொடிபடர்ந்து நச் சுப்பழத்தைத் தந்தது. இன்றேல் முத்திப்பழம் பழுக்கும். இம்மோகக்கொடி ஆன்மாவாகிய மரத்தில் அநாதியே கூடியுள்ள ஆணவமலத்தின் காரியம்.

3. அத்தி பழுத்தது—உடம்பு உண்டாகியது. இதா கிதம்=இத + அகிதம். இதம்—நன்மை; அகிதம் —தீமை. இதாகிதங்களுக்கு ஏற்பவே மாயையின் காரியங்களாகிய தநுகரணாதிகள் ஆன்மாவுக்குக் கிடைக்கின்றன. ''மாயை வடிவாதி கன்மத்து வந்து'' என்ருர் உமாபதியார். அத் திப்பழம் – உடம்பு; அத்தி—என்பு; அது ஆகுபெயராய்

உடம்பைக் குறித்தது. அத்தி முன்வினைப்பயனாகிய சிற்றின்பத்தைக் குறிப்பதாகக் கொள்ளினுமாம். மயக்குவது மாயையின் இயல்பு.

4. அப்பழம் உண்ணாதே—நரகத்துக்குக் காரணமான மும்மல முயற்சியைச் செய்யாதே. செய்தால் மோகக் கொடி ஆன்மாவாகிய மரத்தினை வளரவிடாது. முற்றச் சூழ்ந்து படர்ந்து உண்ணத்தகாத நச்சுப்பழத்தையேதரும். ஆன்மா பிறவியிற் செல்லும்; மீண்டு முத்தியிற் செல்லாது. ஆரம்பத்திலேயே விட்டுவிடு என்கின்றார். அப்பழத்தினை உண்ணாது, ஆசான் கடாட்சத்தாற் கிடைத்த திருவருளாகிய ஞானவாளால் ஆணவமலமான மூலவேரை அறுத்து விடவேண்டும். ஆணவம் அறவே பற்றறுந்து ஞானம்பெற்று முத்திக்கனியினைத் துய்த்து சிவனுடனே ஒரு தன்மையாய் விடுதல் கூடும்.

**பொழிப்பு:** முத்தியைப் பெறுகைக்கு முதன்மையான ஆன்மாவிலே அஞ்ஞானம் என்னுங்கொடி படர்ந்து அத்திப்பழம் போன்ற உடம்பு உண்டாயிற்று. நரகத்திற்குக் காரணமான அந்தப்பழத்தை உண்ணாது விடுக. (ஞானவாளால் ஆணவத்தை வேரறுத்து முத்திப்பழத்தை அநுபவித்துச் சிவத்துடன் வேறறக் கூடுக.)

களிறு: 93. முத்தி முதல். 94. அகளத்தில்.

## 42. பரிபூரணத்துவம்

இப்படியொழியப் பரிபூரணத்துவமாக நிற்கத் தக்கதோர் உபாயம் அருளிச் செய்கின்றார்.

> அண்ட முதலாம் அனைத்தையும் உட்கொண்டு
> கொண்டத்தைக் கொள்ளாதே உந்தீபற
> குறைவற்ற செல்வம் என் றுந்தீபற.

இ—ள்: அண்டம் முதலாம் அனைத்தையும்—அண்டம் (என்று சொல்லப்பட்ட சக்கரவாளகிரியும், மகாமேருவும்,

அண்டகோளகையும், அட்டகுல பருவதங்களும், திக்கயங்களும், அட்டநாகங்களும், சத்த சமுத்திரங்களும், சத்த மேகங்களும், பதினுன்குபுவனங்களும், தேவர் அசுரர்சித்தர் வித்தியாதரர் கின்னரர் கிம்புருடர் மற்றும் உண்டான (அண்டர்) முதலாக (உள்ளிட்ட பேதங்களும், சந்திராதித்தரும், பஞ்சபூத பரிணமங்களும், பேய்த்தேர் போன்ற வியாபாரங்களும் பொதிந்ததிரட்சி ஓர் அண்டமாக வளர்ந்த கோடி அண்டங்களும் இப்படி ஒவ்வோர் அண்டங்களைத் தசமடங்கு பொதிந்த சலமும், அந்தச் சலத்தைத் தசமடங்கு பொதிந்த அக்கினியும், இந்த அக்கினியைத் தசமடங்கு பொதிந்த வாயுவும், இந்த வாயுவைத் தசமடங்கு பொதிந்த ஆகாசமும், இவை) எல்லாவற்றையும்; உட்கொண்டு கொண்டத்தை—சேரப்பொதிந்த பேர் அண்டத்தையும், (இவை எல்லாவற்றிற்கும் மேற்பட்டு நின்மலமாய் நிற்கின்ற நாதசொரூபத்தையும், இதற்கும் அப்பாற்பட்ட நின்மலமாய் எல்லைப்படாத பரமாகாசமான பெருவெளியையும் உனக்கு உடம்பாகி நின்று உனக்கு நிலைநின்றவாறே உன்னை உணர்த்தின சொரூபம் உடம்பாகி நின்று, ஆன்மபோதத்தையும் இந்தப் பரிணமங்களையும்), கொள்ளாதே உந்தீபற—சேர நினைவு அறவிடுவாயாக. குறைவு அற்ற செல்வம் என்று உந்தீபற—அப்பொழுதே நீ அகண்ட பரிபூரணனுய்விடுவை என்க.

வி—ம்: 1. அண்டம் முதலாம் அனைத்தையும்—கோடி அண்டங்களும் முறையே ஒன்றிலொன்று பத்துப்பத்து மடங்கு அதிகமாகப்பொதிந்த சலமும்அக்கினியும் ஆகாயமும் ஆகிய இவையாவற்றையும், வியாபக அறிவு விளக்க முறுதலுக்கு முதலில் உடம்பாகக் கொண்டு.

2. உட்கொண்டு கொண்டத்தை:- அண்டம் முதலாம் அனைத்தையும் சேரப் பொதிந்த பேரண்டத்தையும், இவற்றுக்கெல்லாம் மேற்பட்ட நாதசொரூபத்தையும்,

இதற்கும் அப்பாற்பட்ட எல்லையில்லாத பரமாகாயமான பெரு வெளியையும் உடம்பாகக் கொண்டு சிறிது வியாபக உணர்வு விளங்கப்பெற்று, குருவாய் வந்து உணர்த்தியருளிய திருவருளே உடம்பாகிநின்று. கொண்டதை எனற்பாலது செய்யுளிசை நோக்கிக் கொண்டத்தை என நின்றது. ஆன்ம சுட்டறிவு விரிவடையுங் கிரமத்திற்படிப்படியாக வியாபகமாகி அருளுடம்பாயமைதல் காண்க.

3. கொள்ளாதே உந்தீபற:- ஆத்ம போதத்தையும் இந்தத் தத்துவ பரிணமங்களையும் முற்றுக நினைவு அற விடவேண்டும். பரிணமங்கள் அனைத்தையும் சடமெனக் கண்டு நினைப்பறவேண்டும். சிவவியாபகத்துக்குட்பட்ட போது முன் உடம்பாக நின்ற அண்டம் முதலியன தோன்று.

4. குறைவற்ற செல்வம் என்று உந்தீபற:— வியாபக உணர்வே பேரின்பம் விளைக்கும் நிறை செல்வம். ஆதலின் அதுவே அகண்டபரிபூரணம்.

குறைவற்று நின்றது என்று பாடங்கொள்வாருமுளர்.

பொழிப்பு: அகண்ட பரிபூரணத்தன்மை அடைதற்கு அண்டமுதலாய அனைத்துத் தத்துவ பரிணமங்களையும். இவற்றை உட்கொண்ட நின்மலமான நாதசொரூபம் பரமாகாயவெளி என்பவற்றையும் படிக்கிரமத்தில் உடம்பாகக் கொண்டு நில். அப்பால் உன்னை உனக்கு உணர்த்திய திருவருளே உடம்பாகநின்று, ஆன்ம போதத்தையும் தத்துவபரிணமங்களையும் நினைப்பறவிடு. அப்பொழுது வியாபக உணர்வு தோன்றி, பேரின்பச் செல்வந் துய்க்கும் பரிபூரணனுவாய்.

களிறு: 95. குற்றமறுத் தென்னை. 96. ஆளுடையன்.

## 43. பயனற்ற ஆன்மாக்கள்

இப்படிப் பெற்றும் இந்த உண்மையில் நில்லாமல் தேகத்தையும் விசுவத்தையும் மெய்யென நின்றாருடைய உண்மையை அருளிச் செய்கின்றார்.

காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டா
மாயக்கள் உண்டாரென் றுந்தீபற [தே
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற.

இ—ள்: காயத்துள்—தேகத்து நிற்கிற; மெய்ஞ்ஞானக் கள்—தேகியான சிவனுடைய சத்திய ஞானமான திருவடித் தாமரையில் உண்டான பரமாநந்தத் தேன் ஆகிய மதுவை; உண்ணமாட்டாதே—உண்டு [தேக விசுவங்களும் தெரியாமல்] தன்னையும் சிவனையும் அறியாதபடி [சீவேசுவரத்துவத்திலே அடையாதே, மிகவும் பசித்தான் ஒருவன் தன் கையில் வைத்திருந்த பாற்றிரளைப் போட்டு நாவுக்கு எட்டாத முழங்கையை நக்கிப் பசி தீர விசாரித்த தன்மைபோலப் பேய்த்தேர் போன்ற விசுவத்தையும் இந்திரசாலம் போன்ற வாழ்வையும் மெய் எனக் கருதி நரக ஹேதுவான வி:_ய சமூகங்களின் உண்டாகும்;] மாயக்கள் உண்டார் என்று உந்தீபற — இதாகிதங்கள் ஆகிய மதுவை உண்டார்கள். வறட்டுப் பசுக்கள் என்று உந்தீபற—அவர்களே ஒரு காலத்திலும் பயன்படாத ஆன்மாக்கள் என்க.

வி—ம்: 1. காயத்துள் மெய்ஞ்ஞானக்கள்: காயம் – உடம்பு. தேகி—தம்பிரானுர். கள்—தேன். திருவடி ஞானத்தாலடையும் பரமாநந்தத் தேன். பரமாநந்தம் —மேலான பேரின்பம். திருவடியைத் தாமரைமலராக உருவகித்தாராதலின், திருவடியிற் பெறும் இன்பம் தேனுயிற்று. தாமரை—பொருளாகுபெயர். ''தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ'' என்பது திருவாசகம். காயத்துள் மெய்ஞ்ஞானக்கள்ளுண்ண வேண்டும் என்பதையே, ''தில்லாலைக்கள்ளுக்குடிக்க வேண்டும்'' எனச் சிவயோக சுவாமிகள் அருளினுர்கள்.

2. உண்ண மாட்டாதே:- உண்ண இயலாது: மாட்டாது இயலாமைப் பொருட்டு. உண்ணுது என்றபடி.

உண்டால்:- திருவருள் கிட்டும்; பாசபசு ஞானங்கள் கழலும். திருவடி ஞானங்கிட்டியதும் சீவன் தன்னிழப்பு எய்தி, ஈசுவரனுடனே வேறறக் கலந்து சீவேசுவரத்தன்மை அடையும். சீவனின் தன்மையுமற்று ஈசுவரனின் தன்மையுமற்று இரண்டறக் கலந்த ஒருதன்மையே சீவேசுவரத்துவம். துவம்—தன்மை. சீவ + ஈசுவரம் = சீவேசுவரம். முத்தியில் திரிபுடி இல்லாமையால் காண்பானுகிய தன்னையும், காட்சிப்பொருளாய சிவனையும் அறியமுடியாது. திரிபுடி—காண்பான், காட்சி, காட்சிப் பொருள்; ஞாதுரு ஞானம், ஞேயம் என்பர் வடநூலார். உண்ணுவிடில்:- பிரபஞ்ச முகப்பட்டு இதாகிதங்களைச் செய்து இருள் சேர் நரகடைவர். பசுவையும், பதியையும் அறியார். திருவருளும், திருவடிஞானமும் பெறுது சிற்றறிவும், சிறு தொழிலும் உடையராவர்.

3. மாயக்கள் உண்டார் என்று உந்தீபற:- கையிலிருந்த பாற்சோற்றுத்திரளை விட்டு நாவுக்கெட்டாத முழங்கையை நக்குதல் என்ற உவமை மெய்ஞ்ஞானக்கள்ளை விட்டு மாயக்கள்ளை உண்ணுதலை விளக்கவந்தது. பேய்த்தேர்—கானல்நீர். விசுவம்—உலகம். இந்திரசாலம்—(தேவ உலக இந்திரனைப் பூவுலகிற் காட்டமுயலுதல் போன்ற) மாயவித்தை. இதாகிதங்களை இன்பம் போலக் காட்டிப் பிறவித் துன்பத்துள் உய்த்தலின் மாயக்கள் என்முர். அறிவை மயக்குவது மாயக்கள்.

4. வறட்டுப் பசுக்கள்:- பசுக்கள்—மலக்கட்டுற்ற ஆன்மாக்கள். வறடு—மலடு. வறடு + பசு = வறட்டுப்பசு. 'ஆவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்.' — அப்பர். மலட்டுப்பசுக்கள் பால்முதலிய பஞ்சகவ்வியம் உதவித் தம்பிறவிப்பயன் பெருதன; தமக்கும் பிறர்க்கும் பயன்படாதன. ஈனுப்பசுவை வறள்மாடு என்பது உலக வழக்கு. அவற்றைப் போன்றவையே பாசக்கயிற்ருற் கட்டப்பட்ட இருகாற் பசுக்களாகிய ஆன்மாக்கள்; இவை திருவருளால்

கட்டற்றுத் துன்பம் நீங்கித் திருவடிஞானம் பெற்றுப் பேரின்பமுறுமையின் ஒருகாலத்தும் பயன்படாத வறட்டுப்பசுக்கள் எனப்பட்டன. காயத்துள் மெய்ஞ்ஞானக்கள் உண்ணுர்க்குத் தம்முள்ளே பால்சுரக்குங் கற்றுவை உவமையாக்காது, ஒருகாலத்தும் பால்சுரக்காத மலட்டுப் பசுக்களை உவமித்தமையை உற்றுநோக்குக.

**பொழிப்பு:** ஆன்மாவைச் சரீரமாகக் கொண்டுள்ள சிவனுடைய திருவடித்தாமரையில் உண்டான பரமாநந்தமாகிய தேனை உண்டு சிவனோடு பிரிப்பின்றி நிற்கமாட்டாது பிரபஞ்சத்தை மெய்யெனக்கருதி நரகத்துக்கு வித்தான மாயக்கள்ளை உண்டார்கள். அவர்களே ஒருகாலத்தும் பயன்படாத ஆன்மாக்கள்.

களிறு: 97. தூலத்தடுத்த. முதல்—99. என்னை உடையவன்.

## 44. குருதிருவடி வாழ்த்து

இப்படி யாவராலும் பெறுதற்கரிய பேற்றைக் காருண்ணியத்தின் மிகுதியாலே தந்த குருவைத் தம்முடைய சினேகத்தின் மிகுதிப்பாட்டாலே துதித்தருளுகின்றார்.

சிந்தையின் உள்ளும்என் சென்னியி னுஞ்சேர
வந்தவர் வாழ்கஎன் றுந்தீபற
மடவாள் உடனேஎன் றுந்தீபற.

இ—ள்: என்சென்னியினுஞ்சேர— (ஒழிவற நிறைந்த தம்பிரானார் அநாதியே அடியேனுக்குப் பிராணனுயிருக்க, அநாதியே உண்டான மலத்தின் மிகுதிப்பாட்டாலே சனன மரணங்களிலே உழன்று போக்குவரவே பொருளாகத் திரிந்த அடியேனைத் தம்முடைய காருண்ணியத்தின் மிகுதியாலே பொருந்தின திருமேனியுடனே எழுந்தருளிவந்து மலமாயை கன்மங்களும் சனன மரணங்களும்

கூடாதபடி,) என்னுடைய பொல்லாப் புலாற்றலையிலே (யாவராலும் குறித்தற்கு அரிய சிவகந்தத்தை உடைத் தாகிய) திருவடித்தாமரையைச் சேர்த்தும், (அந்தத் திருவடி அடியேனுக்கு அநாதியே பிராணனாய் நின்ற முறைமையை உணர்த்தியும்;) சிந்தையினுள்ளும்—என்னு டைய சித்தமானது (சலியாமல் அந்தத்) திருவடியுடனே விட்டுநீங்காமல் (ஒரு வழிப்படக் கூடி வேறற) நிற்கும் உபாயத்தைத் தந்தும்; வந்தவர் வாழ்க என்று உந்திபற— (இப்படித் துக்க சாகரத்தினின்றும் கரையேற்றின) தம்பி ரானார், (காலம் காட்டாத சுக சொரூபத்துடனே மேன் மேலும்) வாழ்வார். மடவாளுடனே என்று உந்திபற— (சருவான்மாக்களும் ஈடேறுகைப்பொருட்டால் அநாதியே உண்டான) காருண்ணிய சத்தியுடனே(யும் அநவரதமும் கூடி) வாழ்வார் என்க.

**வி—ம்:** 1. சிந்தையின் உள்ளும் என் சென்னியினும் சேர:- என் சென்னியினும் சேர, என்பதுபோலவே என் சிந்தையின் உள்ளும் சேர என முன்னும் பின்னுங் கூட் டிக்கொள்ளுக. என் சென்னியினுஞ் சேர: குருவாகவந்து திருவடி தீக்கை செய்தமையைக் கூறினார். குருவாக வந்தவர் சிவனே. அவர் அநாதி கேவலத்திலிருந்தே உயிர்க்கு உயிராயிருந்து வருகின்றார். அவ்வாறிருப்பதை உயிர் அறியாதபடி ஆணவம் மறைத்தது. அதனால் உயிர் பிறவியிற் புகுந்தது. பிறவித்துயர்மூலம் அறிவு விளங்கச் செய்து கன்ம ஒப்புவருமாறு திரோதானசத்தியாய் உடன் நின்று உபகரித்த தம்பிரானே கன்ம ஒப்பில் ஏற்ற குரு வடிவில் வந்து பாசமும் பிறவியுங் கூடாதபடி திருவடி தீக்கை செய்கின்றார். ''தம்முதல் குருவுமாய்த் தவத்தி னில் உணர்த்த'' — என்பது சிவஞானபோதம். பொல் லாப் புலால் தலை — மிகத்துர்நாற்றம் வீசுகின்ற தலை. குறித்தல்—கருதுதல். சிவகந்தம்—சிவமணம். திருவடித் தாமரை—உருவகம். உணர்த்துதல்—உபதேசத்தின் மூலம்

உணர்ந்து அறிய வைத்தல். சிந்தையின் உள்ளும்: என் சிந்தையின் உள்ளுஞ் சேர:- சிந்தை—சித்தம். சித்தம் அசைவற ஒருப்பட்டுத் திருவடியிற் கூடி ஞானமயமாய் நிற்கும் உபாயத்தையருளியதைக் குறித்தது. திருவடி ஞானமே சிவசத்தி. குருவின் திருவடி சிரசிலும், ஞானம் சிந்தையிலும் சேர்க்கப்படுதல் காண்க.

2. வந்தவர்—வினையாலணையும் பெயர். தம்பிரானார். சுகசொரூபத்தை வாழ்த்தியது. சிவமே குரு. குருவே சிவம் என்பது மரபு.

3. ஊடவாளுடனே என்று உந்தீபற:- பிறவிக் கடற் பட்டாரைக் கரையேற்றுங் காருண்ணிய சத்தியை வாழ்த் திய வாறுயிற்று. பராசக்தியைக் கொண்டே பஞ்சகி ருத்தியத்தை ஆற்றுகின்றார்.

4. ஆன்மாக்களின் இன்பவாழ்வின் பொருட்டே கடவுட்கொள்கை எழுந்தது. ஆதலின் ஆன்மாக்கள் வாழும்படி கடவுளை வாழ்த்தினர். "வாழ்த்துவதும் வான வர்கள் தாம் வாழ்வான் மன நின்பால் தாழ்த்துவ தும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி" என்ற திருவாசகம் இதனை விளக்குதலறிக.

பொழிப்பு: காருண்ணியத்தினாலே குருவாய் எழுந்த ருளி வந்து எனது தலையிலே திருவடித் தாமரையைச் சேர்த்தும், என்னுடைய சித்தமானது திருவடியுடனே (விட்டு நீங்காமல்) நிற்கும் உபாயத்தைத் தந்தும் பிறவிக் கடலினின்றுங் கரையேற்றிய தம்பிரானார் சுகசொரு பத்துடனே வாழ்வார். ஆன்மாக்கள் ஈடேறும் வண்ணம் காருண்ணிய சத்தியுடனேயும் அநவரதமுங்கூடிவாழ்வார்.

களிறு: 100. சிந்தையினும்.

## 45. நூற் சிறப்பு

இத்திருவுந்தியாரை அருளிச் செய்த தம்பிரானார் இந் தச் சாத்திரத்தின் மகிமையுந் தம்முடைய திருநாமமும் தோன்ற அருளிச் செய்கின்றார்.

வைய முழுதும் மலக்கயம் கண்டிடும்
உய்ய வந்தானுரை உந்தீபற
உண்மை உணர்ந்தாரென் றுந்தீபற.

இ—ள்: உய்யவந்தான் உரை—உய்யவந்த தேவரால் அருளிச் செய்யப்பட்ட இந்தத் திருவுந்தியார் என்கின்ற சாத்திரத்தைக் குருமுகத்தாலே கேட்டு, இதனுடைய சம்பிரதாயத்தை அறிந்தவர்கள்; வையம் முழுதும் — (அநாதியே தொடங்கி உழன்று போந்த) தேக விசுவங்களின் உண்மை; மலக்கயம் கண்டிடும் உந்தீபற — அஞ்ஞான சாகரம் என்றே விட்டேறி; உண்மை உணர்ந்தார் என்று உந்தீபற—உண்மை என்னும் திருவடியாகிய நெடுங்கரையிலே சேர்ந்து பரமாநந்தமே அநுபவித்துக்கொண்டிருப்பார்கள் என்க.

வி—ம்: 1. (அ) உய்யவந்தான்—திருவுந்தியார் என்னும் இந்நூலை அருளிச்செய்த ஆசிரியர் பெயர் கூறியவாறு. இப்பெயர் ஆன்மாக்கள் பிறவித்துயரிலிருந்து நீங்கி உய்வடையும் பொருட்டு அவதரித்தவர் என்னும் பொருளைத் தருதலுங் காண்க. இவர் பெயர் உய்யவந்த தேவர் எனவும் உய்யவந்த தேவநாயனர் எனவும் வழங்கிவருகின்றது. தாழ்வென்னுந் தன்மையோடு மெய்யுணர்ந்து நின்றவராதலின் தம்பெயரை ஒருமையீற்றல் அடக்கமாகக் கூறியருளினர்.

(ஆ) உய்யவந்தான் உரை:— உய்யவந்தாரால் அருளிச் செய்யப்பெற்ற நூல் திருவுந்தியார். உரை—ஆகுபெயராய் நூலைக் குறித்தது. இது சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள்ளுங் காலத்தால் முந்தியது; ஞானத்தைக் கூறுவது; ஓர் அநுபவநூல். இச்சாத்திரத்தைக் குருவிடம் உபதேசமாகக் கேட்கவேண்டும். குருமுகமாகப் பாடங் கேட்கும் போதுதான் இந்நூலின் சம்பிரதாயம் விளங்கும். சம்பிரதாயம்—சித்தாந்த சைவபாரம்பரியத் தொடர்ச்சி.

2. வையம் முழுதும் மலக்கயம் கண்டிடும்: வையம்—உலகம் (விசுவம்). வையம் முழுதும்—விசுவம் தேகங்கள்.

இங்கே இவற்றின் உண்மையைக் கருதிற்று. ஆதலின் உண்மை என்ற சொல்லை உரையில் வருவித்து உரைத்தார்.

மலக்கயம்: மலம்—ஆணவமலம்; இங்கு அதன் குணமான அஞ்ஞானத்தை உணர்த்திற்று. கயம்—அளவுகடந்த பெருநீர்ப்பரப்பாகிய சாகரத்தைக் குறித்தது. சாகரம்—சமுத்திரம். சாகரம் என்பதற்கேற்ப தேகவிசுவங்களைவிட்டு நீங்குதலை (சாகரத்தைத்தாண்டிக்கரை) ஏறி என்ருர்.

3. உண்மை உணர்ந்தார் என்று உந்திபற:—உண்மை உணர்ந்தார்—மெய்யுணர்ந்தார். மெய்என உணர்ந்த திருவடியிற் சேர்ந்து பேரின்பத்தை அநுபவிப்பர். திருவடியை வீடு என்பது சாத்திர மரபு. அஞ்ஞான சாகரத்தை விட்டேறும் நெடுங்கரை திருவடியேயாம். ''திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே'' என்பது பட்டினத்தார் வாக்கு.

4. பிறர், வையமுழுதும் என்பதற்கு உலகத்தார் அனைவருக்கும் எனப்பொருளுரைப்பர். மலக்கயங் கண்டிடும் என்பதற்கு மல நீக்கத்தை உண்டுபண்ணும் எனப் பொருள் கொள்வாருமுளர்.

5. இச் செய்யுளில் நூலாசிரியர் பெயரும் நூலின் பயனும் அடங்கி இருத்தலின் இதனைப்பாயிரச் செய்யுள் என்பர். திருக்கடைக் காப்பாகவும் அமைந்துள்ளமை காண்க.

பொழிப்பு: உய்யவந்த தேவரால் அருளிச் செய்யப் பெற்ற இந்தத் திருவுந்தியார் என்னும் ஞான சாத்திரத்தைக் குருமுகமாகக் கேட்டு, இந்நூலின் சம்பிரதாயத்தை அறிந்தவர்கள், பிரபஞ்சத்தினின்றும், நீங்கி, மெய்யுணர்ந்து திருவடி சேர்ந்து பரமாநந்தமே அநுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ உய்யவந்த தேவநாயனர் அருளிச்செய்த திருவுந்தியார் மூலமும், திருவாவடுதுறை ஆதீனத்துத் தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசர் செய்தருளிய உரையும், விளக்கமும் முற்றுப்பெற்றன.

ஸ்ரீ உய்யவந்ததேவ நாயனர் திருவடி வாழ்க.

## எங்கள் வெளியீடுகள்

1. சேக்கிழார் நாயனார் புராணம்
—உமாபதி சிவாசாரியர் இயற்றியது. திருவண்ணாமலை ஆதீனத்து ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரையுடன் கூடியது. 2-50
2. திருக்கேதீச்சரத் திருப்பதிகங்கள்
—சம்பந்தர் சுந்தரர் பாடிய தேவாரங்கட்கு திரு. க. வச்சிரவேலு முதலியார், B. A., L. T., வித்வான் ந. சுப்பையபிள்ளை எழுதிய விளக்கவுரைகளுடன் கூடியது. -60
3. சுவாமி பிள்ளைத்தமிழ்
—சிவயோக சுவாமிமீது பண்டித வித்வான் க. கி. நடராஜன், B.O.L. Dip-in-Ed. பாடியபத்திப்பனுவல். 2-50
4. கந்தபுராண நவநீதம்
—ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் எழுதியது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் அணிந்துரை கொண்டது. 4-00
5. சிவபுராணம்
— வித்வான் சுப்பையபிள்ளை பார்வையிட்ட உரையுடன் கூடியது. -10
6. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்
—ஆறுமுகத்தம்பிரானுரையுடன் 5-00
7. அபிராமி அந்தாதி
—ம. க. வேற்பிள்ளை உரையுடன் 1-50
8. கந்தரலங்காரம் – திரு. மு. திருவிளங்கமுரை 2-50
9. திருவுந்தியார் – சிவப்பிரகாசர் உரைவிளக்கம் 1-50
10. சிவஞானசித்தியார் (சுபக்கம்)
—மு. திருவிளங்கம் உரையுடன் (அச்சில்)
11. தாமோதரம்
—ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை B. A. B. L., அவர்கள் தாம் பதிப்பித்த நூல்களுக்கெழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு (அச்சில்)

**யாழ்ப்பாணம்**
**கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்**
411/1, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்
## சங்கங்களின் சமாசம்

(வரைவுள்ளது)

**வடமாகாணத்திலுள்ள மிகப்பெரிய
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்**

இலங்கைத் தேசிய இரும்புக் கூட்டுத்தாபனத்தின்
அதிகாரம்பெற்ற விநியோகத்தர்கள்

எங்கள் விசேட வியாபாரம்:

- புடவைகள்
- சீமெந்து
- பால்மா உணவு
- பலசரக்கு
- மட்பாண்டங்கள்

**கூட்டுறவு மொத்த ஸ்தாபனப் பொருள்கள்**

ஒருமுறை வருகை புரிந்து நேரிற் பார்க்கவும்

*சில்லறை விற்பனை நிலையம்:*

**15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

*தலைமை அலுவலகம்:*

**74/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**